# உள்ளுறை


★ திருமணம் ........................................ 9

★ முதற் பாடம் ........................................ 11

★ வேண்டாம் திருமணம் ........................................ 23

★ ஏற்படும் நன்மைகள் ........................................ 25

★ இரண்டாம் நன்மை ........................................ 41

★ மூன்றும் நான்கும் ........................................ 54

★ கடைசிப் பயன் ........................................ 60

★ விளையும் விபரீதங்கள் ........................................ 69

★ இரண்டாம் பாடம் ........................................ 85

★ மூன்றாம் பாடம் ........................................ 108


# திருமணம்

இறைவன் ஒருவனுக்கே புகழனைத்தும் உரித்தாகட்டும். அவனது அற்புதமான ஏற்பாடுகளில் சந்தேக அம்புகளைப் பாய்ச்ச முடியாது. அவனது பேராற்றலை எந்த உள்ளத்தாலும் ஆழம் காண முடியாது. அவனது அன்புப் பார்வை எப்போதும் மக்களைச் சூழ்ந்திருக்கிறது. அந்த அன்பை அவன் சில சமயங்களில் பலவந்தமாகவே செலுத்துகிறான்.

அவன் பேராற்றலுக்கு மானிடன் சரியான ஓர் எடுத்துக்காட்டு. அவனை இறைவன் நீர்த்துளியிலிருந்து உண்டாக்கினான். அவன் உள்ளத்தில் காம உணர்ச்சியை உற்பத்தியாக்கினான். அதன் உதவியால் அவனை போகத்தில் ஈடுபடச் செய்தான். இதன் மூலம் அவனது சந்ததித் தொடரை நிலைப்படுத்தினான். சந்ததியினருக்கு மதிப்பும் பெருமையும் அளித்தான். தவறாக மருவுவதைத் தடுத்தான். இதை இழித்துரைத்தான். அதனைக் கொடியதொரு குற்றமாகத் தீர்மானித்தான்.

மனிதனின் மனத்தில் திருமணம் குறித்துப் பிரியத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தினான். மரணத்தை விதித்த மன்னனே! உன்னை நான் பாராட்டுகிறேன். மரணத்தால் மனிதன் நிலைகுலைகிறான். அழிந்தொழிகிறான். அதற்கும் நீ ஓர் ஏற்பாடு செய்திருக்கிறாய். அவனது விந்துத் துளிகளைக்

கர்ப்பத்தில் பாய்ச்சிச் சந்ததியை உருவாக்குகிறாய். இதனால் மாண்ட மனிதன் மீண்டும் உயிர் வாழ்கிறான். இப்படி யெல்லாம் செய்து உன் அன்பின் ஆழத்தை நீ காட்டுகிறாய்...

திருமணம் என்பது மார்க்கத்தில் குறிப்பிடத்தக்க ஒன்று. திருமணம் 'ஷைத்தானை' விரட்டுகிறது. அது தீங்கு களிலிருந்து மனிதனைக் காப்பாற்றுகிறது. திருமணத்தின் காரணமாகவே சந்ததி விரிவுபட முடியும். இவ்வாறு சந்ததி பெருகுவதைத் திரு நபியவர்களே வரவேற்றிருக்கிறார்கள்.

திருமணத்திற்குரிய மூல காரணங்கள் யாவை, அதை நடத்துவதற்குரிய முறைகள் யாவை என்பனவற்றை நாம் ஆராய வேண்டும். திருமணத்தின் வியாக்கியானம், அதன் பிரிவுகள், அது சம்பந்தமாக அறிந்து கொள்ள வேண்டிய கட்டங்கள் யாவற்றையும் மூன்று பாடங்களில் அடக்கி யிருக்கிறேன்.

திருமணத்தைச் சிலர் விரும்புகிறார்கள்; திருமணம் செய்து கொள்ளத் தூண்டுகிறார்கள். வேறு சிலர் திருமணத்தை வெறுக்கிறார்கள் - 'திருமணம் செய்யாதே!' என்று உபதேசம் புரிகிறார்கள். இந்தப் பிரச்சினை திருமறையின் ஒளியில் ஆராயப்படுகிறது முதற்பாடத்தில்.

திருமணத்தின் போது கவனிக்க வேண்டிய சில ஒழுங்கு முறைகள் இருக்கின்றன. தம்பதிகள் நடந்து கொள்ள வேண்டிய முறைகளும் உள்ளன. இவை இரண்டாம் பாடத்தில் ஆராயப்படுகின்றன.

மணப் பந்தத்திற்கும் விவாகப் பிரிவினைக்கும் இடைப் பட்ட காலத்தில் தம்பதிகள் நடந்து கொள்ள வேண்டிய வாழ்க்கை முறை மூன்றாம் பாடத்தில் விவரிக்கப்படுகிறது.

# முதற் பாடம்

திருமணத்தின் சிறப்பு குறித்து அறிஞர்கள் அபிப் பிராய பேதம் கொண்டிருக்கிறார்கள். சிலர் வற்புறுத்து கிறார்கள். ''திருமணம் செய்து கொள்வது இறை வணக் கத்தை விட மேலானது'' என்று வாதிக்கிறார்கள்.

''இல்லை - திருமணம் என்பது சிறப்பான காரியம் தான் என்றாலும் அது எந்த வகையிலும் இறை வணக்கத்தை விடச் சிறப்பு வாய்ந்ததல்ல'' என்று வேறு சிலர் வாதிக்கிறார்கள்.

இன்னும் சிலர் இவ்வாறு கூறுகிறார்கள்:

''இந்தக் காலத்தில் திருமணம் செய்யாதிருப்பதே நல்லது. முன்னர் திருமணத்திற்கு மார்க்கத்தில் மதிப்பும் சிறப்பும் இருந்தன என்பது உண்மையே. என்றாலும் இன்றைய உலகில் பெண்களின் நிலை கவலைக்கிடமாயி ருக்கிறது. அவர்களின் குணங்கள் சீர்குலைந்து விட்டன...''

இவ்வாறு ஒன்றுக்கொன்று முரணான அபிப்பிரா யங்கள் அறிஞர்களின் மத்தியில்பரவி நிற்கின்றன. இவற்றில் நேர்மையான அபிப்பிராயம் எது என்று கண்டு பிடிக்க வேண்டியது நம் பொறுப்பு. அதற்குத் திருமறை

யையும் நபி (ஸல்) அவர்களின் கருத்தையும் உதவியாக வைத்துக் கொள்வோம். எனவே திருமணத்தை வலியுறுத்தியும் அதனை மறுத்தும் வந்துள்ள கருத்துக்களை முதலில் ஆராய்வோம். பின்னர் திருமணத்தில் விளையும் பயன்களையும் அதனால் ஏற்படும் தீங்குகளையும் விவரிக்கிறேன். அதன் பிறகு திருமணம் என்பது யாருக்கு அவசியம், யாருக்கு அவசியமற்றது என்பதை நீ எளிதில் புரிந்து கொள்ளலாம்.

## திருமணத்தை வலியுறுத்துகின்றன

''உங்களில் கணவனிழந்த பெண்களை நீங்கள் திருமணம் செய்து கொள்ளுங்கள்!'' என்று இறைவன் கட்டளையிடுகிறான்.

''அவர்கள் திருமணம் செய்து கொள்வதை நீங்கள் தடுக்க வேண்டாம்!'' என்று பணிக்கிறான்.

''உமக்கு முன்னர் நாம் பல திருத்தூதர்களை அனுப்பினோம். அவர்களுக்கு மனைவிகளையும், மக்களையும் அறித்தோம்!'' இந்த இடத்தில் இறைவன் திருத்தூதர்களின் சிறப்பை எடுத்துரைக்கிறான். தான் அவர்களுக்களித்த அருட்கொடைகளை வர்ணிக்கிறான்.

இறைவன் மீண்டும் தன் அன்பிற்குரியவர்களைப் பாராட்டுகிறான் - அவர்கள் செய்த பிரார்த்தனை குறித்து,

அவர்கள் இறைஞ்சுகிறார்கள்: ''இறைவனே! எங்கள் கண்கள் குளிரும்படி மனைவி மக்களை எங்களுக்கு அளிப்பாயாக!....''

இறைவன் திருமறையில் குறிப்பிட்ட திருத்தூதர்கள் அனைவரும் திருமணம் செய்து கொண்டவர்களே!'' என்றும் கூறப்படுகிறது.



இதைச் சிலர் மறுக்கிறார்கள். ''யஹ்யா நபியவர்கள் திருமணம் செய்தாலும் போகம் செய்யவில்லை - ஈஸா நபியவர்கள் திருமணமே செய்து கொள்ளவில்லை.''

யஹ்யா நபியவர்கள் மனைவியிடம் சேராதிருந்ததற்குக் காரணமுண்டு. இறைவனிடம் உயர் பதவி பெறுவதற்காகவே அவர்கள் அப்படிச் செய்தார்கள். மனைவியொருத்தி இருக்கும் போது, போகம் செய்யாதிருப்பது சாதாரணக் காரியமா? கடினமான காரியம். கடினமான இக்காரியத்தைச் செய்து இறைவனிடம் உயர் பதவி பெற விரும்பினார்கள். ஈஸா நபியவர்கள் திருமணம் செய்யாவிட்டாலும் பின்னர் ஒரு காலத்தில் அவர்கள் மண்ணகத்தில் இறங்கித் திருமணம் செய்யத்தான் போகிறார்கள் - குழந்தை கூடப் பிறக்கும்.

திரு நபியவர்கள், ''திருமணம் என் நடைமுறையிலுள்ளது. அதனைப் புறக்கணித்தவன் என் சமூகத்தவனல்லன்'' என்று கூறினார்கள்.

''திருமணம் என்பது என் நடைமுறை. என்னை விரும்புபவன் என் நடைமுறையைப் பின்பற்றட்டும்!'' என்றும் கூறியுள்ளார்கள்.

''திருமணம் செய்யுங்கள்; அதிகமான மக்களைப் பெற்றெடுங்கள். மறுமையில் உங்கள் எண்ணிக்கையைப் பார்த்து நான் பரவசமடைவேன்'' என்பதும் நபி (ஸல்) அவர்களின் கருத்துத்தான்.

இன்னும் கூறினார்கள்: ''வறுமைக்கு அஞ்சித் திருமணத்தை வெறுப்பவன் நம் சமூகத்தைச் சேர்ந்தவனல்லவன்!'' இங்கு திரு நபியவர்கள் ஒரு காரணத்தின் பால் நம்

கவனத்தைத் திருப்புகிறார்கள். வறுமையால் திருமணம் தடைப்படக்கூடாது என்பது பொருள்.

மேலும் கூறினார்கள்: ''வசதியுள்ளவன் மணம் முடித்துக் கொள்ளட்டும்!''

மீண்டும் கூறினார்கள்: ''உங்களில் நல்ல நிலையில் இருப்பவர்கள் விவாகம் செய்து கொள்ளட்டும். திருமணத்தின் காரணமாகக் கெட்ட பார்வை தடைப்படுகிறது; அபம் காக்கப்படுகிறது. நல்ல நிலையில் இல்லாதவர்கள் நோன்பு பிடிக்கட்டும். நோன்பின் காரணமாகக் காமத்தின் வேகம் குன்றுகிறது!''

மேற் குறிப்பிட்டவற்றிலிருந்து நீ என்ன அறிகிறாய்? கண்ணாலும் அபத்தாலும் விளையும் தீங்குகளைத் தடுப்பதற்கே திருமணம் வலியுறுத்தப்படுகிறது என்று அறிகிறாயல்லவா?

''மார்க்கப் பற்றுள்ள நம்பகமான ஒருவன் உங்களிடம் வந்தால் அவனுக்குத் திருமணம் செய்து வைத்து விடுங்கள். இல்லையேல் மகத்தான பல விபரீதங்கள் விளைந்து விடும்!'' என்று அண்ணலவர்கள் கூறினார்கள். இந்த இடத்தில் விபரீதத்தைத் தடுப்பதற்காகத் திருமணம் வலியுறுத்தப்படுகிறது.

இன்னும் கூறினார்கள். ''இறைவனுக்காகத் திருமணம் செய்து கொண்டவனும் இறைவனுக்காகத் திருமணம் செய்து வைத்தவனும் இறைவனின் பேரன்புக்கு உரியவர்கள்!''



பிறிதோரிடத்தில் கூறினார்கள்: ''திருமணம் செய்து கொண்டவன் மார்க்கத்தில் ஒரு பகுதியைப் பெற்று விட்டான். மறு பகுதியை அவன் இறை அச்சத்தில் பெற வேண்டும்!''

ஒரு மனிதனைப் பாழ்படுத்தும் சக்தி கொண்டவை இரண்டு: அபம்; வயிறு - அதாவது காமம்; பசி! காமத்தால் ஏற்படும் விளைவு திருமணத்தால் தடுக்கப்படுகிறது.

திரு நபியவர்கள் கூறினார்கள்: ''மனிதனின் நற்செயல்கள் அனைத்தும் மரணத்திற்குப் பிறகு தடைப்பட்டுப் போகின்றன. ஆனால் மூன்றுவித நன்மைகள் மட்டும் மரணத்திற்குப் பிறகும் அவனுக்குக் கிடைக்கின்றன. ஒன்று. அவனுக்கு மார்க்கப்பற்றுள்ள சந்ததியினர் இருந்து, தந்தைக்காக இறைவனிடம் பிரார்த்தித்தால் அதன் பயன் அவனுக்குண்டு...''

இந்த நிலையை அடைவது எப்படி? திருமணமின்றிச் சந்ததியினர் தோன்ற முடியுமா? சிந்தித்துப் பார்!

உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ''சக்தியிழந்தவன், தீயவற்றில் மூழ்கிக் கிடப்பவன் ஆகிய இருவரைத் தவிர்த்து மற்றவர்களுக்குத் திருமணம் தடுக்கப்படவில்லை!'' இவ்விரு பிரிவினரையும் தவிர்த்து மற்றவர்கள் திருமணம் செய்து கொள்ள மார்க்கம் அனுமதி தருகிறது என்பதை உமர் (ரலி) அவர்கள் விளக்கி விட்டார்கள். திருமணத்திற்கு ஏற்படும் தடையை அவர்கள் இரு தன்மைகளில் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ''ஒரு மனிதன் செய்யும் நற்கிரியைகள் அவன் திருமணம் செய்து கொள்ளும் வரை பூரணமடைவதில்லை!'' -

காமம் ஓங்கி நிற்கும் போது ஒரு மனிதனால் நற் காரியங்கள் செய்ய முடியாது. திருமணம் இதற்கு முடிவு கட்டுகிறது; காமம் தணிகிறது; உள்ளம் தெளிகிறது. தெளிந்த அந்த உள்ளத்திலிருந்து பூரணத்துவமுடைய நற்கிரியைகள் வெளிப்படுகின்றன.

இதனால்தான் அவர்கள் வயது வந்த வாலிபர்களை அழைத்து, ''நீங்கள் விரும்பினால் உங்களுக்குத் திருமணம் செய்து வைத்து விடுகிறேன்'' என்று கூறி வந்தார்கள். ஒரு மனிதன் தவறாக மருவ முற்படும் போது அவன் உள்ளத் திலிருந்து 'ஈமான்' பறிக்கப்படுகிறது.

இப்னு மஸ்ஊத் அவர்கள் அடிக்கடி இவ்வாறு கூறு வதுண்டு; ''நான் மரணிப்பதற்கு இன்னும் பத்துத் தினங்களே இருப்பினும் நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் மனைவியற்றவனாக நான் இறைவனிடம் செல்லக்கூடாது!''

மஆத் பின் ஜபல் அவர்களின் மனைவிகள் இருவர் வாந்தி பேதியில் இறந்து விட்டனர். மஆத் அவர்களையும் அந்தக் கொடிய வியாதி தொட்டது. அவர்கள் தங்கள் நண்பர் களிடம், ''எனக்கு மணம் முடித்து வைத்து விடுங்கள். மனைவியற்றவனாக இறைவனுக்கெதிரில் செல்வதை நான் விரும்பவில்லை'' என்று கூறினார்கள்.

திருமணம் என்பது காமத்தால் விளையும் விபரீ தத்தைத் தடுப்பதற்கு மட்டுமல்ல. வேறு சில காரணங் களுக்காகவும் அது அவசியமாகலாம் என்று இதன் மூலம் நாம் அறிகிறோம்.

உமர் (ரலி) அவர்கள் பல திருமணங்கள் செய்தார்கள். அது குறித்துப் பிரஸ்தாபிக்கப்படும் போது, ''மக்கள் பெருக



வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே நான் பல தடவைகள் திருமணம் செய்தேன்'' என்று கூறுவார்களாம்.

திரு நபியவர்களுடன் ஒரு நண்பர் இருந்தார். நபிய வர்களுக்குப் பணிபுரிவது தான் அவர் குறிக்கோள். இரவு காலங்களில் நபியவர்களுக்கு ஏற்படும் தேவைகளை முடித்துக் கொடுப்பதற்காக அந்த நண்பர் இரவிலும் நபியுடன் தான் இருப்பார்.

''நீர் மணம் முடித்துக் கொள்ளக் கூடாதா?'' என்று நபியவர்கள் கேட்டார்கள்:

''நபியவர்களே! நான் ஏழை. மண வாழ்க்கைக்குத் தேவையான எதுவும் என்னிடம் கிடையாது. தங்களுக்குப் பணிபுரிவதையே நான் குறிக்கோளாகக் கொண்டி ருக்கிறேன்.''

சற்று நேரம் மௌனம். பின்னர் மீண்டும் அதே வினா எழுப்பப்பட்டது.

நண்பர் நிலைமையைப் புரிந்து கொண்டார்; சற்றுச் சிந்தித்தார். ''திரு நபியவர்களுக்கு எல்லாம் தெரியும்; என் நிலைமையை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். இம்மை, மறுமை ஆகிய இவ்விரு வாழ்க்கையிலும் எனக்குப் பயன் தருபவற்றை அவர்கள் சந்தேகமறத் தெரிந்திருக்கிறார்கள். நான் எப்படி இறைவனை அணுக வேண்டும் என்பதும் அவர்களுக்குத் தெரியாத விஷயமல்ல. ஒரே கேள்வியை இரு முறை கேட்டுவிட்டார்கள். மூன்றாம் தடவையாக அவர்கள் அதே வினாவை எழுப்பினால், அவர்கள் இடும் கட்டளைக்கு இணங்கிவிட வேண்டும்... அவர்கள் விரும்பினால் திருமணத்திற்குத் தலை சாய்த்து விட வேண்டும்!''

''நீர் ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை?''

நண்பர் கனைத்துக் கொண்டார். ''நபியவர்களே! தாங்களே எனக்கு மணம் முடித்து வைத்து விடுங்கள்....'

திரு நபியவர்கள் ஒரு வகுப்பாரைக் குறிப்பிட்டார்கள். ''அவர்களிடம் நீர் செல்லும். அவர்களின் பெண் ஒருத்தியை உமக்குத் திருமணம் செய்து வைக்குமாறு நான் கூறியதாக அவர்களிடம் நீர் சொல்ல வேண்டும்.''

நண்பர் தயங்கினார். ''நபியவர்களே! திருமணத்திற்கு வேண்டியது எதுவும் என்னிடம் கிடையாது என்று கூறினேன்..''

திரு நபியவர்கள் மற்ற நண்பர்களைப் பார்த்தார்கள். ''உங்கள் சகோதரருக்கு நீங்கள் கொஞ்சம் உதவி செய்யுங்கள். ஈச்சங்கொட்டையின் அளவிற்கு உங்களிடமிருந்தே தங்கத்தைத் திரட்டுங்கள்!''

தங்கம் திரட்டப்பட்டது. எல்லோரும் சேர்ந்து மேற் குறிப்பிட்ட வகுப்பாரிடம் சென்றார்கள். திருமணமும் நடந்தேறியது.

இந்தச் சம்பவம் திருமணத்தின் சிறப்பை எடுத் துரைக்கிறது.

இன்னுமொரு சம்பவம்.

முற்காலத்தில் பக்தர் ஒருவர் மிகவும் சிறந்து விளங்கினார். அப்போதிருந்த பக்தர்கள் எல்லோரையும் விட அவர் உயர்ந்து காணப்பட்டார். அது குறித்து அக் காலத்தியத் திருத்தூதர் ஒருவரிடம் யாரோ கூறிவிட்டார்கள்.



திருத்தூதர் சிரித்தார். ''அவர் மிகவும் நல்லவர் தான் – ஒரு காரியத்தை மட்டும் அவர் செய்திருந்தால், ஆனால் அதை இன்னும் அவர் செய்யவில்லையே?''

அந்த பக்தர் இதைக் கேள்விப்பட்டு வருந்தினார். ஓடோடி வந்தார். நபியிடம் அந்தக் காரியம் குறித்து வினவினார்.

திருத்தூதர் விடையிறுத்தார். ''நீர் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லையே''

பக்தர் கூறினார். ''ஆம், உண்மை. ஆனால் திரு மணத்தை நான் வெறுக்கவில்லை. எனினும் நான் ஏழை மக்களின் கையை எதிர்பார்த்தவனாக இருக்கிறேன்...''

''அப்படியானால் என் மகளையே உமக்குத் திரு மணம் செய்து வைக்கிறேன்!'' என்று கூறி திருத்தூதர் திருமணமும் செய்து வைத்தார்.

பஷர் பின் ஹர்ஸ் கூறினார்கள். ''அஹ்மத் பின் ஹன்பல் அவர்கள் மூன்று காரணங்களால் என்னை விடச் சிறப்பானவர்கள். அவர்கள் தங்களுக்கு மட்டுமின்றிப் பிறருக்கும் நல்ல - 'ஹலாலா'ன உணவைச் சம்பாதிக் கிறார்கள். நான் அப்படியல்ல. எனக்கு மட்டுமே நான் நல்ல உணவைச் சம்பாதிக்கிறேன். திருமண விஷயத்தில் அவர்கள் ஆழமாகப் போய்விட்டார்கள். அது விஷயத்தில் நான் பின்தங்கி விட்டேன். மக்களுக்குத் தலைவராயிருந்து பணிபுரியும் மகத்தான பொறுப்பு அவர்களுக்குண்டு. ஆனால் அது எனக்குக் கிடைக்கவில்லை.''

இமாம் அஹ்மத் அவர்கள் தங்கள் மனைவி இறந்த இரண்டாம் நாளே மணம் முடித்துக் கொண்டார்களாம்.

''மனைவியற்றவனாக இரவுக் காலத்தைக் கழிக்க நான் விரும்பவில்லை'' என்கிறார்கள் அவர்கள்.

பஷர் அவர்களைப் பார்ப்போம். அவர்களிடம் யாரோ ஒருவர், ''உங்களைப் பற்றி மக்கள் தவறாகப் பேசிக் கொள்கிறார்கள். நீங்கள் மணம் முடித்துக் கொள்ளாததால் உங்களை அவர்கள் 'நபியின் நடைமுறையை விட்டவன்' என்று குறிப்பிடுகிறார்கள்!''

''அப்படியா! நபியின் நடைமுறையை இது விஷயத்தில் நான் விட்டிருந்தாலும் அதை விட மேலான அத்யாவசியக் காரியங்களில் லயித்திருக்கிறேன். இதை அவர்களிடம் கூறிவிடும்!''

மக்களின் சந்தேகத்திற்கு பஷர் கொடுத்த விடை திருப்தியளிக்கவில்லை. அதே வினா மீண்டும் எழுப்பப் பட்டது.

பஷர் உண்மையைக் கூறினார்

''திருமணத்தை நான் வெறுக்கவில்லை. 'மனைவி களுக்குச் சில கடமைகள் இருப்பது போன்று அவர்களுக்குச் சில உரிமைகளும் இருக்கின்றன' என்று இறைவன் கூறுகிறான். இந்த இறைவனின் கருத்துத்தான் என் திருமணத்திற்குத் தடையாக நிற்கிறது!''

இமாம் அஹ்மத் அவர்கள் இதனைக் கேட்டு ஆச்சரிய முற்றார்கள்.

''ஆகா! அவரைப் போன்று மார்க்கப் பற்றுள்ள ஒரு மனிதரைக் காண்பது அபூர்வம், ஈட்டிமுனையில் இருந்து கொண்டு வாழ்க்கை நடத்துகிறாரே!''



இதன் பிறகு பஷர் இறந்து விட்டார். அவரை யாரோ கனவில் கண்டார்கள். ''உங்கள் நிலைமை என்ன?''

''இறைவன் எனக்குச் சுவனத்தில் உயர்பதவி யளித்தான். திருத்தூதர்களுக்குரிய மதிப்பும் மரியாதையும் பெற்றேன். ஆனால் குடும்பஸ்தர்களுக்குரிய அந்தஸ்தை என்னால் அடைய முடியவில்லை...''

சுப்யான் பின் உயைனா அவர்கள் கூறினார்கள்: ''ஒரு மனிதன் அதிகமான பெண்களை மனைவிகளாக்கிக் கொள்ளும் போது அவனை 'உலகப் பற்றுள்ளவன்' என்று கூறிவிட முடியாது. திருநபித் தோழர்களிலேயே அறிஞர் அலீ அவர்களைச் சிறந்த துறவி என்று கூறலாம். அவர்களுக்கு நான்கு மனைவிகளும் பதினேழு அடிமைப் பெண்களும் இருந்தார்கள். திருமணம் என்பது வாழையடி வாழையாகத் தொடர்ந்து வரும் நற்பழக்கம். அது திருத்தூதர்களின் - தீர்க்கதரிசிகளின் குணங்களில் ஒன்று.''

துறவி இப்ராஹீம் பின் அத்ஹம் அவர்களிடம் ஒருவர் கூறினார்: ''நான் உங்களைப் பாராட்டுகிறேன். ஏனெனில் திருமணத்தை நீங்கள் மேற்கொள்ளவில்லை. இறை வணக்கத்தில் லயித்திருக்கிறீர்கள்.''

இப்ராஹீம் அவர்கள் சிரித்தார்கள்.

நீர் திருமணம் செய்துகொண்டது குறித்து உம்மை நான் பாராட்டுகிறேன். நான் அடைந்திருப்பதைவிட நீர் அடைந்திருப்பது உயர்ந்த அந்தஸ்து!''

''நீங்கள் ஏன்தான் விவாகம் செய்து கொள்ள வில்லை? அது விஷயத்தில் உங்களுக்கேற்பட்ட தடை என்ன?''

துறவியவர்கள் விடையளித்தார்கள்.

''ஒரு பெண்ணின்பால் எனக்கு எத்தகைய தேவையுமில்லை. அதே சமயத்தில் எந்தப் பெண்மணியையும் நான் கவர விரும்பவில்லை.''

வீட்டில் முடங்கிக் கிடப்பவனை விட மார்க்கப் போரில் பணி புரிபவன் எத்துணைச் சிறப்புடையவனோ அத்துணைச் சிறப்புடையவன் திருமணம் செய்து கொண்டவன் - விவாகமற்றவனை விட. மனைவியுள்ளவனின் ஒரு 'ரகஅத்' தொழுகை, மனைவியற்றவனின் எழுபது 'ரகஅத்' தொழுகைக்குச் சமானமானதாகும் என்றும் கூறப்படுகிறது.

# வேண்டாம் திருமணம்

திருநபியவர்கள் கூறினார்கள்: ''இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு நிலைமை மாற்றமடையும். வீண் விரயம் செய்யாதவன் - மனைவி மக்கள் இல்லாதவன் தான் அப்போது மக்களில் மேலானவன்.''

மீண்டும் கூறினார்கள்: ''பின்னர் ஒரு காலம் வரும். அப்போது மனைவி, மக்கள், பெற்றோர் ஆகியவர்களாலேயே ஒரு மனிதன் பாழ்படுவான். அவர்கள் அவன்பால் வறுமையை இழுத்து வருவார்கள். அவனால் தாங்க முடியாத சுமையை அவன்தலையில் சுமத்துவார்கள். இதனால் அவன் சில தவறுகளைச் செய்வான். இதன் விளைவாக அவனது மத உணர்ச்சி பாதிக்கப்படும் - அவன் பாழாவான்.''

அபூசுலைமான் தாரானீ அவர்கள் ஒரு சமயம் திருமணம் குறித்து வினவப்பட்டார்கள்.

''ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டு பொறுமையோடிருப்பதை விட விவாகமின்றியே பொறுமையைக் கையாள்வது மேலானது!'' என பதில் வந்தது. ''நரகத்தின் துன்பத்திற்கு அடுத்தபடியாக ஒரு மனைவி தன் கணவனுக்குத் துன்பம் தருகிறாள்.''

இன்னும் கூறினார்கள்: ''தனி மனிதனால் நற்காரியங்களில் இனிமையைக் காண முடியும். அவன் உள்ளம் அமைதி பெற்றிருக்கும். ஆனால் மனைவியுள்ள ஒருவனால் இவற்றை அனுபவிக்க முடியாது.''

மேலும் கூறினார்கள்: ''என் நண்பர்களில் திருமணம் செய்து கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களில் எவருக்கும் திருமணத்திற்கு முன்பிருந்த படித்தரம் திருமணத்திற்குப் பிறகு நீடிக்கவில்லை.''

மீண்டும் கூறினார்கள்: ''நல்வாழ்க்கையை எதிர்பார்த்தவன், திருமணம் புரிந்து கொண்டவன் முதலியோர் உலகப் பற்றுள்ளோர்களே.''

ஹஸன் கூறினார்கள்: ''ஒருவனுக்கு இறைவன் நன்மையைச் செய்யவிரும்பினால் அவன் உள்ளத்தில் விவாக மோகம், பணப்பித்தம் ஆகியவற்றை நுழைய விடமாட்டான். ஹஸன் அவர்களின் உரையில் அபூ சுலைமான் தாரானீ அவர்களின் கருத்து பரிணமிக்கிறது. ''மனைவியாலோ, குழந்தையாலோ, பொருளாலோ உன் கவனம் இறைவனை விட்டு திருப்பப்பட்டால் அது உனக்கு நல்லதல்ல என்பதை உணர்ந்து கொள்!'' என்று அபூ சுலைமான் அவர்கள் கூறினார்கள்.

சுருங்கச் சொன்னால் திருமணத்தை மறுக்கக்கூடிய பொதுவான எந்தக் கருத்தும் இடம் பெறவில்லை. காரணங்களோடு இணைந்துதான் வந்திருக்கின்றன. மேலே குறிப்பிட்டவை அனைத்தும் இப்படியே. ஆனால் திருமணத்தை வலியுறுத்தக்கூடிய பல ஆதாரங்கள் உள்ளன. அது பொதுவாகவே திருமணத்தை வலியுறுத்துகின்றன.

இந்தப் பிரச்சினையில் சற்றுச் சிக்கல் உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. இதோ சிக்கலறுத்துத் தெளிவுபடுத்துகிறேன். திருமணத்தினால் விளையும் விபரீதங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் ஆராய்வோம்.

# ஏற்படும் நன்மைகள்

திருமணத்தினால் ஐந்து நன்மைகள் உருப் பெறுகின்றன.

**முதல் நன்மை:** திருமணத்தின் காரணமாகக் குழந்தை பிறக்கிறது. இது முக்கியமான ஒன்று. இந்த நோக்கத்திற்காகவே திருமணம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சந்ததித் தொடர்பு அறுந்து விடக் கூடாது. உலகில் மனித இனம் என்றென்றும் நிலைப்பட வேண்டும் – இதுதான் திருமணத்தின் குறிக்கோள். இந்தக் குறிக்கோளை அடைவதற்குக் காமம் துணை நிற்கிறது.

காமமின்றிப் போகம் செய்ய முடியாதல்லவா? காமத்தால் ஆணின் நீர்த்துளி வெளிப்பாய்கிறது. பெண்ணின் கர்ப்பவீடு அதற்கு இடம் தருகிறது. அதனை வளர்க்கிறது. பறவையைப் பிடிப்பதற்காக அது விரும்பித் தின்னும் கனிகளைக் கண்ணியில் இணைப்பது போன்று குழந்தையை உருப்பெறச் செய்வ தற்காக இறைவன் ஆணையும் பெண்ணையும் போகத்தில் ஈடுபடச் செய்கிறான்; இதற்குக் காமக் கனியைப் பயன்படுத்துகிறான். இதுதான் நடைமுறை. இந்த முறையின்றியே இறைவனால் குழந்தையை உண்டாக்க முடியும்.

என்றாலும், அவன் இதில் பல தத்துவங்களை மறைத்து வைத்திருக்கிறான். காரணங்களின் மூலம் காரியத்தை அவன் வெளிக் கொணர்கிறான். இதில் அவன் பேராற்றல் வெளிப் படுகிறது. ஒப்பற்ற அவனது அற்புத சக்தி பளிச்சிடுகிறது. அவன் ஒரு காரியத்தை முடிக்கத் தீர்மானித்து விட்டான் என்பதை முன் கூட்டியே தெரிவிக்கிறான்.

இவ்வாறு ஒரு மனிதன் சந்ததியைப் பெறுவதற்காகத் திருமணம் செய்து கொள்ளும் போது நான்கு வகைகளில் இறைவனின் பேரன்பு அவனுக்குக் கிடைக்கிறது. இதனால் தான் திருமணம் பெரிதும் வலியுறுத்தப்படுகிறது. இந்த நால்வகை நன்மைகளையும் இங்கேயே விரிவாக ஆராய்ந்து விடுவோம்.

1. மாநிலத்தில் மனித இனத்தை என்றென்றும் நிலை பெறச் செய்வதற்காக ஒரு மனிதன் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க விரும்பும் போது, அவன் விருப்பத்துடன் இறைவனின் விருப்பமும் சேர்ந்து கொள்கிறது. இதனால் அவன் இறைவனின் விருப்பத்திற்குரிய ஒன்றையே செய்தவனாகிறான். இது முக்கியமான ஒன்று. ஆனால் இதனைப் பெரும்பாலோர் சரிவர உணர்ந்து கொள்ளவில்லை. தெளிவான மதியுடையவர்கள் இதன் முக்கியத்துவத்தை உணர்கிறார்கள்; இறைவனின் பேராற்றலையும் பேரறிவையும் அவர்கள் பகுத்தறிகிறார்கள்.

இதை ஓர் உதாரணத்தின் மூலம் ஆராய்வோம். எதையும் உதாரணத்தின் உதவியால்தான் தெளிவுறத் தெரிந்து கொள்ள முடியும்.

தலைவன் ஒருவன் தன் பணியாள் ஒருவனிடம் சில விதைகளைக் கொடுக்கிறான். அவற்றை விதைப்பதற்கு வேண்டிய ஆயுதங்களையும் தருகிறான். அவற்றை விதைப்பதற்குத் தகுதியான நிலத்தையும் அளிக்கிறான். சில வேலைக்காரர்களையும் உடன் அனுப்புகிறான். அந்தப் பணியாளுக்கு விதைக்கும் ஆற்றலும் உண்டு. அவன் என்ன செய்ய வேண்டும்? தலைவனின் கட்டளையை நிறைவேற்ற வேண்டுமல்லவா? தலைவனின் சைக்கினைக்கு அடிபணிய வேண்டுமல்லவா?



அந்தப் பணியாள் அவ்வாறு செய்யவில்லை. விதைப்பதற்கென்று அவனுக்குக் கொடுக்கப்பட்ட கருவியை அவன் வீணாக்கி விட்டான். விதைகளைப் பாழாக்கி விட்டான். தனக்கு ஒத்தாசையாக வந்த வேலைக்காரர்களையும் அவன் தந்திரமாகத் திருப்பியனுப்பி விட்டான். இவ்வாறு செய்யும் அந்தப் பணியாள் தலைவனின் அன்பிற்குரியவனாக இருக்க முடியுமா? சாத்தியமேயில்லை!

இதே உதாரணத்தைக் கவனித்துக் கொள்.

இறைவன் ஆணையும் பெண்ணையும் படைத்தான். ஆண் குறியையும் பெண் குறியையும் உண்டாக்கினான். முதுகெலும்பிலிருந்து ஆணுக்கு விந்துத் துளிகளை உற்பத்தியாக்கினான். பெண் குறியில் சில நரம்புகளையும் விந்து செல்வதற்கு வேண்டிய பாதையையும் ஏற்படுத்தினான். கர்ப்பப் பையை விந்து தங்குவதற்குரிய இடமாக அமைத்தான். ஆண் பெண் இருவரையும் காமத்தின் மூலம் புணர்ச்சியில் ஈடுபடச் செய்தான்.

இறைவனின் நோக்கத்தை இவை பறைசாற்றுகின்றன; அதனை நிறைவேற்ற அறிவுள்ளவர்களை அழைக்கின்றன.

இதன் உட்கருத்தை இறைவன், ''திருமணம் செய்யுங்கள்; சந்ததியை உற்பத்தி செய்யுங்கள்'' என்று கூறி விளக்கு கிறான்; கட்டளையிடுகிறான்.

திருமணத்தை வெறுத்தவன் இந்த இறை நோக்கத் திற்கு எதிரானவன்; தனக்கு அளிக்கப்பட்ட வித்தை வீணாக் கியவன்; இறைவனளித்த கருவியைப் பயனின்றி வீசி எறிந்தவன்; இயற்கையின் கருத்தை உணராதவன்; மனிதனின் அமைப்பில் உருவமோ ஒளியோ இல்லாத தெய்வீக எழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கும் இறை கருத்தைக் கண்டுணராதவன்.

ஆனால் தெய்வீக மனம் படைத்தவர்கள் அதைப் படிக்கிறார்கள்; கருத்தை உணர்கிறார்கள்; இயற்கையின் நுட்பமான தத்துவத்தை அறிகிறார்கள். ஆகவே திருமணம் செய்ய முயல்பவன் இறைவனின் நோக்கத்தைப் பூரணப் படுத்த முனைபவனாகிறான். அதை வெறுத்தவன் இறை வனின் வெறுப்பை வாரிக்கட்டிக் கொண்டவனாகிறான். மனித இனம் எப்போதும் உலகில் இருக்க வேண்டும் என்று இறைவன் விரும்புகிறான். இதனால் தான் ஏழைகளுக்கு உணவளிப்பதை அவன் அவசியமாக்கினான். பசியின் காரணமாக மரணம் அணுகி விடக் கூடாதல்லவா?

நீ கேட்கலாம்:

''மனிதன் உயிர் வாழ்வதை இறைவன் விரும்பு வதாகக் கூறுகின்றீர்கள். அப்படியானால் அவன் மரண மடைவதை இறைவன் வெறுக்கிறான் என்று எண்ணத் தோன்றுகிறது. இது எப்படிப் பொருத்தமாகும்? இறை வனின் நாட்டப்படியே மனிதன் மரணிக்கிறான். இறை



வனின் சித்தமே பிறப்பையும் இறப்பையும் உண்டாக் குகிறது. இப்படியிருக்க ஒன்றை இறைவன் விரும்பு வதாகவும் மற்றொன்றை அவன் வெறுப்பதாகவும் கூறுவது சரியல்ல; உலகிலுள்ள அனைத்தும் இறைவனின் சித்தப் படியே உண்டாகியிருக்கின்றன. அவை அனைத்தையும் இறைசித்தமே உருவாக்கியிருக்கிறது. அவனுக்கு மக்களின்பால் எத்தகைய தேவையுமில்லை...''

கவனித்துப்படி, மேலே நான் கூறியது பொருத்தமான உண்மை. இதில் சந்தேகமில்லை. ஆனால் அதை நீ தப்பாகப் புரிந்து கொண்டு விட்டாய். இறைவனின் சித்தம் அவன் விருப்பத்திற்குரியவற்றையே உருவாக்குகிறது என்று வாதிக்கிறாய். உலகிலுள்ள அனைத்தும் இறைவனின் சித்தப்படியே உண்டாகியிருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அவற்றில் சில வல்லவனின் விருப்பத்திற்குரியவையாகவும் வேறு சில அவன் வெறுப் பிற்குரியவையாகவும் இருக்கின்றன.

விருப்பு, வெறுப்பு ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு தன்மைகள் தாம். என்றாலும் அவை இரண்டுமே இறை சித்தப்படியே தான் உண்டாக்கப்பட்டி ருக்கின்றன. இறைவனின் சித்தப்படி உண்டாகும் ஒவ் வொன்றும் அவன் விருப்பத்திற்குரியவையாகவே இருக்க வேண்டும் என்பதில்லை. தன் வெறுப்பிற்குரியவற்றையும் அவன்தான் படைக்கிறான். இவற்றிற்கும் இறைசித்தம் இருக்கத்தானே செய்கிறது! துர்காரியங்களை இறைவன் வெறுக்கிறான். அதே சமயத்தில் அவை இறை சித்தமின்றி உண்டாகி விடவில்லை என்பதையும் நினை வுறுத்த விரும் புகிறேன். நற்காரியங்களையும் அவன் தான் படைக்கிறான். அதே நேரத்தில் அவை அவன் விருப்பத்திற்குரியவை.

தீங்கான செயல்களையும் இறை வழிக்கு மாற்றமான காரியங்களையும் நீ எவ்வாறு எண்ணுகிறாய்? அவை குறித்து உன் கருத்து ன்ன? அவற்றை இறைவன் விரும்பு வதாக உன்னால் கூற முடியுமா? கண்டிப்பாய் முடியாது. அவற்றை அவன் சிறிதும் விரும்பவில்லை.

''தன் அடியார்கள் முரண்வழி நடப்பதை இறைவன் விரும்பவில்லை'' எனத் திருமறை தீர்ப்பளிக்கிறது.

எனவே மனிதன் உயிர் வாழ்வதையும் அவன் மரணிப் பதையும் இறைவன் ஒரே நோக்கத்தோடு தான் பார்க்க வேண்டும் என்பது சரியான வாதமல்ல.

''முஸ்லிமான என் அடியான் ஒருவனின் உயிரைக் கைப்பற்றும் போது நான் அடையும் குழப்பத்தைப் போன்று வேறு எந்த விஷயத்திலும் நான் குழப்பமடைவதில்லை. அவன் மரணத்தை வெறுக்கிறான். நானோ அவன் தவறு செய்வதை வெறுக்கிறேன். எனவே அவன் மரணித்துத் தான் தீர வேண்டும்'' என்று இறைவனே கூறிவிட்டான்.

''அவன் மரணித்துத்தான் தீர வேண்டும்'' என்ற வார்த்தைகளில் இறைவன் தன் திட்டத்தை – சித்தத்தைச் சுட்டிக் காட்டுகிறான். அந்தத் திட்டம் 'உங்களுக்கிடையில் நாம் மரணத்தை ஏற்படுத்தி விட்டோம்' என்ற திருமறை வசனத்தில் வெளியிடப்படுகிறது. 'இறைவனே உயிரோட் டத்தையும் மரணத்தையும் படைத்தான்' என்ற இறை வசனமும் இதைத்தான் காட்டுகிறது.

''உங்களுக்கிடையில் நாம் மரணத்தை ஏற்படுத்தி விட்டோம்'' – ஒன்று.



''நானோ அவன் தவறு செய்வதை வெறுக்கிறேன்'' – இரண்டு

இவ்விரண்டும் இறை கருத்துக்களே. இவ்விரண்டிற்கு மிடையில் எத்தகைய முரண்பாடும் கிடையாது என்பதை வலியுறுத்துகிறேன். நன்கு சிந்தித்துப் பார். ஆனால் இதனை நீ தெளிவுற அறிய விரும்பினால் முதலில் சித்தம், விருப்பு, வெறுப்பு ஆகிய மூன்றையும் நீ நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அவற்றின் அந்தரங்கங்களை நீ சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும்.

மனிதனும் நாடுகிறான்; எண்ணுகிறான். அவனுக்குச் சித்தம் உண்டு. தான் விரும்பாத ஒன்றை மனிதன் நாடுவ தில்லை; எண்ணுவதில்லை; சித்தமுறுவதில்லை. இத்தகையதுதான் இறைசித்தமும் என்று அனேகர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இது தவறு; அறியாமை! மனிதனின் தன்மைகளை இறைவனின் தன்மைகளோடு எவ்வாறு ஒப்பிட முடியும்? மானிடனுக்கும் இறைவனுக்கும் இடை யிலுள்ள பார தூரமான வித்தியாசம், மானிடச் சித்தத்திற்கும் இறைவனின் சித்தத்திற்கும் இடையிலும் உண்டு! மனிதன் உருவமுள்ளவன்; சடப் பொருள். இறைவனுக்கு உருவமேது? அவன்தான் சடமற்றவனாயிற்றே! இதே போன்றுதான் இறை தன்மையும்!

இந்த மர்மங்களையெல்லாம் மனத் தெளிவு ஏற்பட்ட பிறகு தான் ஒரு மனிதனால் நன்கு உணர முடியும். அதற்கும் அப்பாலுள்ளதுதான் விதியைப் பற்றிய மர்மம். அந்த மர்மத்தைப் பகிரங்கப்படுத்துவது மார்க்கத்தில் தடை விதிக்கப்பட்ட ஒன்று. எனவே அதை இங்கு நான் கூறப் போவதில்லை. என்றாலும் திருமணத்தை விரும்புவது,

அதை வெறுப்பது ஆகிய இரண்டிற்கும் இடையிலுள்ள நுண்ணிய வித்தியாசத்தை மட்டும் இங்கு விளக்க விரும்புகிறேன்.

இவ்விரண்டில் ஒன்று பாழ்படுத்தும் சக்தியுடையது. ஆதம் (அலை) அவர்கள் தொடத்து இன்றுவரை... உன் உள்ளமை வரை ஒன்றின்பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்த சந்ததித் தொடர் இதனால் நசுக்கப்படுகிறது. திருமணத்தை வெறுத்தவன் ஆதம் நபி (அலை) அவர்கள் தொடுத்துத் தொடர்ந்து வந்த அந்த உயிரோட்டத்திற்குத் தடைவிதித்த வனாகிறான். தனக்குப் பின் ஒரு பிரதிநிதியின்றியே மரணிக்க வேண்டிய துர்க்கதியை அவன் அடைகிறான்.

காமத்தைத் தணித்துக் கொள்வதற்கு மட்டுமே திருமணம் வலியுறுத்தப்படவில்லை என்பதை நினைவுறுத் துகிறேன். இல்லையேல் வாந்தி பேதியால் பீடிக்கப்பட்டு மரணத்தை அணுகிக் கொண்டிருந்த மஆத் (ரலி) அவர்கள், ''எனக்கு மணமுடித்து வைத்து விடுங்கள். மனைவியற்ற வனாக இறைவனுக்கெதிரில் செல்வதை நான் விரும்ப வில்லை'' என்று கூறவேண்டிய தேவையேயில்லை.

நீ மீண்டும் கேட்கலாம்:

''குழந்தையைப் பெறுவதற்கே திருமணம் வலியுறுத் தப்படுவதாகக் கூறினீர்கள். இது மஆத் அவர்களின் விஷயத்தில் பொருந்தவில்லையே. வாந்திபேதியால் பீடிக்கப்பட்டு மரணத்தை அணுகும் அவர்கள் குழந்தையை எப்படி எதிர்பார்க்க முடியும்? அப்படியானால் அவர்கள் எதற்காகத் திருமணத்தில் ஆர்வம் காட்டினார்கள்?''

கவனி! குழந்தை புணர்ச்சியால் உண்டாகிறது. புணர்ச் சிக்கு காமம் காரணமாக நிற்கிறது. காம உணர்ச்சி என்பது



மனிதனின் ஆற்றலுக்கு, அவன் உரிமைக்கு அப்பாற்பட்ட ஒன்று. நினைத்த சமயத்தில் ஒரு மனிதனால் காமத்தை உண்டாக்கிக் கொள்ள முடியாது. அதைத் தூண்டிவிடக் கூடிய காரியத்தில் அவன் கவனம் செல்ல வேண்டும். அப்போதுதான் காம உணர்ச்சி உண்டாகும். காமத்தைத் தூண்டும் காரியத்தைச் செய்தவன் குழந்தைக்கு அடிகோலிய வனாகிறான். காமத்தை உண்டாக்கும் காரியங்களை ஒரு மனிதன் எப்போதும் செய்யலாம்; அவை அவன் சக்திக்குட்பட்டவையே.

எனவே மணப் பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டவன் தன் கடமையை நிறைவேற்றியவனாகிறான். இதற்கப்பால் காமம் நல்ல முறையில் இயங்குவதும் அதிலிருந்து கருத்தரிப்பதும் அவன் சக்திக்கு அப்பாற்பட்டவை. அவை குறித்து அவன் கவலைப்பட வேண்டியதில்லை. இதனால் தான் ஆண்மை இழந்தவன் திருமணம் செய்து கொள்வது 'முஸ்தஹபு' – விரும்பப்படுவது. அவனுக்குக் காம உணர்ச் சியே கிடையாது என்று கூறிவிட முடியாது. அவனுக்கும் காமம் உண்டு என்றாலும், அவனது காமம் மிகவும் குறை வானது. அவனாலேயே அதனைக் கண்டுணர முடியாது. எனவே மெல்லிய அந்தக் காமத்திலிருந்து குழந்தை உருவாக முடியாது. என்றாலும் அவன் திருமணம் செய்து கொள்வது மார்க்கத்தில் வரவேற்கப்படுகிறது. மற்றவர்களையொட்டி அவனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

தலைமுடி எடுப்பது 'முஸ்தஹபு' என்பது உனக்குத் தெரியும். வழுக்கைத் தலையன் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? வழுக்கைத் தலைமீது சவரக் கத்தியைப் போட்டு

வழிக்க வேண்டும் - இது. அவனுக்கு 'முஸ்தஹபு' இவ்வாறு அவன் செய்யும் போது முன்னோரைப் பின்பற்றிய வனாகிறான். அவன் தலையில் முடி இருக்கிறதா, இல்லையா என்பது பற்றிக் கவலையில்லை.

இதே போன்று இன்றைய மக்கா யாத்திரையில் சில காரியங்களைச் செய்ய வேண்டி வருகிறது. தற்போதைய நிலையில் அவற்றைச் செய்ய வேண்டியதேயில்லை. என்றாலும் முன்னோர்கள் செய்திருக்கிறார்கள் என்கிற காரணத்தினால் நாமும் அவற்றைச் செய்கிறோம்.

ஆனால் ஆண்மை இழந்தவனின் திருமணத்திற்கும் பூரண ஆண்மையுடையவனின் திருமணத்திற்கும் இடையில் வித்தியாசமுண்டு. ஆண்மையற்ற ஒருவன் விவாகம் செய்து கொள்ளும் போது ஒரு பெண்ணின் வாழ்க்கை பாழ்படுத் தப்படுகிறது. அவளுடைய தேவையை அவனால் தீர்த்து வைக்க முடியாது. இதில் ஆபத்து உண்டு. எனவே தான் ஆண்மை குறைந்தவர்களின் திருமணம் வன்மையாகக் கண்டிக்கப்படுகிறது.

2. சந்ததியை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் ஒரு மனிதன் மணம் முடித்துக் கொள்ளும் போது அவன் திரு நபியவர்களின் அன்பிற்குரியவனாகிறான். சந்ததி பெருகு வதைத் தாங்கள் விரும்புவதாகத் தெளிவாகக் கூறியிருக் கிறார்கள். இந்தக் கருத்துக்கு உமர் (ரலி) அவர்களின் வாழ்க்கை மெருகேற்றுகிறது. அவர்கள் பல திருமணங்கள் செய்து கொண்டார்களாம். ''குழந்தைக்காகவே நான் திருமணம் செய்கிறேன்'' என்று அடிக்கடி கூறுவார் களாம்.



மலட்டுப் பெண்ணைத் திரு நபியவர்கள் இழித்துக் கூறியுள்ளார்கள். ''குழந்தை பெறாத பெண்ணை விட வீட்டின் மூலையில் கிடக்கும் கிழிந்த பாய் மேலானது!''

மீண்டும் கூறினார்கள்: ''அதிகமான குழந்தைகளைப் பெற்றெடுப்பவளே உங்களில் உயர்ந்தவள்.''

இன்னும் கூறினார்கள்: ''குழந்தை பெறக்கூடிய கறுப்புப் பெண் மலடான வெள்ளைப் பெண்ணை விட மேலானவள்.''

குழந்தையைப் பெற வேண்டும் என்னும் நோக்கம் தான் திருமணத்தின் சிறப்பை உயர்த்துகிறது என்று நீ அறிகிறாயல்லவா? காமத் துடிப்பை ஒடுக்குவதையே நோக்கமாகக் கொள்வதை விட இது சிறந்ததாகும்.

3. திருமணத்தின் மூலம் ஒரு மனிதனுக்கு ஒரு குழந்தை பிறந்துவிட்டால் அவனுக்கு மறுமையில் நல்ல பயனுண்டு. நல்ல குழந்தையாகப் பிறந்து விட்டால் அது தன் தந்தைக்காகக் கேட்கும் பிரார்த்தனைகளை இறைவன் நிறைவேற்றுவான். இது சம்பந்தமாகத் திரு நபியவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். '' மூன்று நன்மைகளைத் தவிர்த்து மற்றவை மரணத்திற்குப் பிறகு பயன் தராது'' என்றார்கள். அந்த மூன்று நன்மைகளில், ஒரு குழந்தை தன் தந்தைக்காகக் கேட்கும் பிரார்த்தனையையும் ஒன்றாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சில சமயங்களில் பிறக்கும் குழந்தை தீய மனம் படைத்தாகவும் இருக்கலாம். ஆனால், அதனால் தந்தைக்கு மறுமையில் எத்தகைய தீங்கும் கிடையாது. அவன் முஃமீனல்லவா? எனினும் மதப் பற்றுள்ளவர்களுக்குப்

பெரும்பாலும் நல்ல குழந்தைகளே பிறக்கின்றன. முஸ்லிம் ஒருவன் - அவன் நல்லவனோ கெட்டவனோ – தன் தந்தைக்காகக் கேட்கும் பிரார்த்தனை பயனளிக்கத் தகுந்தது என்பதில் சந்தேகமில்லை. மைந்தனின் பிரார்த்தனைகளும் நன்மைகளும் தந்தைக்கு பயனளிக்கின்றன. ஆனால் தனயனின் தீய செயல்களால் தந்தை தண்டிக்கப்படுவதில்லை. ஏனெனில், ஒருவனின் குற்றத்திற்காக இறைவன் மற்றொருவனைத் தண்டிப்பதில்லை.

''அவர்களோடு அவர்களின் சந்ததியினரைச் சேர்த்து விட்டோம்'' என்று இறைவன் கூறுகிறான். ''அவர்களின் நற்காரியங்களுக்குரிய நன்மைகளை நாம் குறைக்கவில்லை!''

4. ஒரு மனிதன் இறப்பதற்கு முன் அவன் குழந்தை இறந்து விட்டால் அவனுக்கு மறுமையில் பெரும் பேறு உண்டு. தந்தைக்காக அந்தக் குழந்தை இறைவனிடம் மன்றாடும்.

''குழந்தை தன் தந்தையைச் சுவனத்திற்கு இழுத்துச் செல்லும்'' என்று திரு நபியவர்கள் கூறினார்கள்.

''...தந்தையின் துணியைப் பற்றி இழுக்கும் – இதோ நான் உங்கள் துணியைப் பற்றி இழுப்பது போன்று!'' என்றும் சில நூல்களில் காணப்படுகின்றன.

திரு நபியவர்கள் விளக்கினார்கள்:

குழந்தையைப் பார்த்து, ''நீ சுவனத்திற்கு போ!'' என்று கூறப்படும். அது சுவனத்தின் வாயிலில் நின்றபடி சினத்துடன் கூறும்; ''மாட்டேன்; என் பெற்றோர்களும் என்னுடன் சுவனத்திற்கு வரவேண்டும்!''



தீர்ப்புப் பிறக்கும். ''அப்படியா! வானவர்களே! அந்தக் குழந்தையோடு அதன் பெற்றோர்களையும் சுவனத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.''

சில நூல்கள் விவரிக்கின்றன:

மக்களை இறைவன் விசாரணை செய்ய முற்படும் போது குழந்தைகள் அனைவரும் ஒன்று திரள்வார்கள்.

''வானவர்களே! இவர்களை எல்லாம் சுவனத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்!'' என்று இறைவன் கட்டளையிடுவான். ''இஸ்லாமியக் குழந்தைகளே! விசாரணையின்றியே நீங்கள் சுவனத்திற்குச் செல்லுங்கள்!''

அவர்கள் சுவனத்தில் நுழைய மாட்டார்கள். வாசலில் நின்று கொண்டு, ''எங்கள் பெற்றோர்கள் எங்கே?'' என்று கேட்பார்கள்.

வானவர்கள் சாதுர்யமாகப் பதில் கொடுப்பார்கள் ''குழந்தைகளே! உங்கள் பெற்றோர்கள் உங்களைப் போன்று பரிசுத்தமானவர்களல்லர். அவர்கள் குற்றங்கள் புரிந்திருக்கிறார்கள்; உலக வாழ்க்கையில் சில தவறுகள் இழைத்திருக்கின்றார்கள். எனவே அவர்களை இறைவன் விசாரணை செய்து கொண்டிருக்கிறான்...''

சிறுவர்கள் கதறுவார்கள்; சுவனத்தின் வாயிலில் மோதிக் கொண்டு அலறுவார்கள்.

எல்லாம் அறிந்த இறைவன், ''என்ன சத்தம்?'' என்று கேட்பான்.

''இறைவனே!'' என்று வானவர்கள் நடந்ததைக் கூற ஆரம்பிப்பார்கள். ''இஸ்லாமியக் குழந்தைகள் பிடிவாதம்

செய்கிறார்கள். எங்கள் பெற்றோர்களுடன் தான் நாங்கள் சுவனத்தில் பிரவேசிப்போம் என்று அடம் பிடிக்கிறார்கள்.''

இறைவனின் தீர்ப்பு வெளிப்படும். ''மக்கட் திரளில் புகுந்து இந்தக் குழந்தைகளின் பெற்றோர்களைக் கண்டு பிடியுங்கள். அவர்களையும் சுவனத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்''.

திரு நபியவர்கள் கூறினார்கள்: ''ஒருவனின் இரு குழந்தைகள் அவனுக்கு முன்னால் இறந்து விட்டால் நரக நெருப்பிலிருந்து அவனுக்கு அவசியம் மீட்சியுண்டு.''

''கருத்தறியாத மூன்று குழந்தைகளை மரணத்திற்குப் பலி கொடுத்தவன், அந்தக் குழந்தைகளின் மீது இறைவன் கொண்டிருக்கும் அன்பின் காரணமாகச் சுவனத்திற்கு அனுப்பப்படுவான்'' என்றும் கூறினார்கள்.

இறைவழி நடந்த நல்ல மனிதர் ஒருவர் இருந்தாராம். அவர் சில காலம் வரை திருமணத்தை வெறுத்து வந்தாராம்.

ஒருநாள் அவர் தூக்கத்திலிருந்து கண் விழித்த போது, 'எனக்குத் திருமணம் செய்து வைத்து விடுங்கள்' என்று கூறத் தலைப்பட்டார்.

இந்த மனமாற்றம் குறித்து யாரோ அவரிடம் வினவி விட்டார்கள்.

பதிலும் கிடைத்தது. ''திருமணத்தின் மூலம் இறைவன் நல்லதொரு குழந்தையை எனக்குத் தர முடியும். அந்தக் குழந்தையின் காரணமாக மறுமையில் எனக்குப் பெரும் மதிப்புக் கிட்டலாம்!''



சற்று நேரத்திற்குப் பிறகு அவர் மீண்டும் வினவ ஆரம்பித்தார்:

'முதலில் திருமணத்தை நான் மறுத்தேன்; வெறுத்தேன். அந்த வெறுப்பு இப்போது மாறிப் போய் விட்டது. இந்த மன மாற்றத்திற்குக் காரணமுண்டு. அன்றொரு நாள் பயங்கரமான கனவு ஒன்று கண்டேன். உலக அழிவு நாள் வந்து விட்டது. மக்கட் திரளில் நானும் ஒருவனாக நிற்கிறேன்; கடுமையான தாகத்தின் காரணமாக நான் அவதிப் படுகிறேன். என்னைப் போலவே பிறரும் தாகத்திற்குத் தண்ணீரின்றி அவஸ்தைப்படுகிறார்கள். அப்போது மக்கட் திரளை விலக்கிக் கொண்டு சில சிறுவர்கள் முன் வருகிறார்கள். கண்ணைப் பறிக்கும் ஆடைகளை அவர்கள் அணிந்திருக்கிறார்கள். தங்கம் - வெள்ளியாலான பாத்திரங்களை ஏந்திக் கொண்டிருக்கிறார்கள். கூட்டத்தில் ஒவ்வொருவருக்கும் நீர் வினியோகம் செய்கிறார்கள். அவர்கள் எனக்கருகில் வந்த போது, ''எனக்கும் கொஞ்சம் நீர் கொடுங்கள். நான் தாகத்தால் தகிக்கிறேன்'' என்று கேட்கிறேன்.

''இல்லை. எங்களில் உங்கள் குழந்தை கிடையாது. எங்கள் பெற்றோர்களுக்கு மட்டுமே நாங்கள் நீர் அளிக்கிறோம்'' என்று பதில் வருகிறது.

நான் திகைக்கிறேன். ''நீங்கள் யார்?''


''முஸ்லிம்களின் குழந்தைகள்!'' என்று விடையிறுத்த சிறுவன் ஒருவன் என்னைக் கடந்து சென்று மற்றொருவருக்கு நீர் அளிக்கிறான்.

''இவ்வாறு நான் கனவு கண்டு கண் விழித்த போது திருமணம் குறித்து நான் கொண்டிருந்த வெறுப்பெண்ணம்

அடியோடு மாறிப் போய் விட்டது!'' என்று கூறி முடித்தார் அந்த நல்ல மனிதர்.

''எந்த நிலையில் வேண்டுமானாலும் நீங்கள் உற்பத்தி செய்யுங்கள்'' என்கிறான் இறைவன்.

மேற்குறிப்பிட்ட நால்வகை நன்மைகளிலிருந்து திருமணத்தின் சிறப்பு, அதிலிருந்து உண்டாகும் குழந்தையைப் பொறுத்தது என்று தெரிகிறதல்லவா?



# இரண்டாம் நன்மை

திருமணத்தினால் விளையும் ஐந்து நன்மைகளில் முதல் நன்மையை ஓரளவு ஆராய்ந்து விட்டோம். இப்போது இரண்டாம் நன்மையை நம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வோம்.

**இரண்டாம் நன்மை;** திருமணத்தின் காரணமாகக் காமத்தின் விபரீதங்கள் தடைப்படுகின்றன; 'ஷைத்தா'னின் கொட்டம் ஒடுக்கப்படுகிறது; கெட்ட பார்வை தடுக்கப் படுகிறது. அபம் காக்கப்படுகிறது.

இதைத்தான் திரு நபியவர்கள், ''திருமணம் செய்து கொண்டவன், தன் மார்க்கத்தில் பாதியைக் காப்பாற்றி விட்டான். மறுபாதியை அவன் இறை அச்சத்தில் பெற வேண்டும்'' என்று குறிப்பிட்டார்கள்.

''குடும்பம் உங்களுக்கு அவசியம். வசதியற்றவர்கள் நோன்பு பிடிக்கட்டும்!'' என்று கூறினார்கள். ஏனெனில் நோன்புக்குக் காமத்தைக் குறைக்கும் ஆற்றலுண்டு!

இந்த அடிப்படைக் கருத்தைத்தான் மேலே குறிப் பிட்ட பொன்மொழிகள் அனைத்தும் சுட்டிக் காட்டுகின்றன. ஆனால் காமத்தின் விளைவைத் தடுப்பதற்காகத் திருமணம்

செய்வதற்கும், சந்ததியை உண்டாக்கும் நோக்கத்துடன் திருமணம் செய்வதற்குமிடையில் வித்தியாசமுண்டு. பிந்தியது முந்தியதை விட மேலானது. முந்தியதால் பிந்தியது உருவாகிறது. ஏனெனில், சிசுவை உண்டாக்குவதற்குக் காமம் தான் போதிய அளவு பயன்படுகிறது. என்ன இருந்தாலும் இவ்விரண்டிற்குமிடையிலுள்ள வித்தியாசத்தை மட்டும் மறுக்க முடியாது.

சேவகன் ஒருவன் அரசனின் தண்டனையிலிருந்து தப்பும் எண்ணத்துடன் பணிபுரிகிறான். மற்றொருவன் அரசனின் நன் மதிப்பைப் பெறும் நோக்கத்துடன் செயலாற்றுகிறான். இவ்விருவரையும் சமமானவர்கள் என்று கூற முடியுமா?

காமம், குழந்தை இரண்டும் இறைவனால் அருளப்பட்டவை. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்தமுடையவை. இவை இரண்டிற்குமிடையில் பிரிக்க முடியாத இணைப்பு உண்டு.

''போகத்தின் போது உருவாகும் இன்ப உணர்ச்சியே திருமணத்தின் முக்கிய குறிக்கேள்!'' என்று நீ வாதிக்கிறாய். ''உணவை உட்கொள்வதால் மலஜல உபாதைகள் உருப்பெறுவது போல், இந்த இன்பத்தை அடைவதால் கருத்தரிக்கிறது.''

இது தவறான வாதம். இது சரியல்ல. திருமணத்தின் குறிக்கோள் இதுவல்ல. குழந்தையே அதன் குறிக்கோள், அதற்குக் காரணமாக அமைவது காமம் – காமத்தால் உருப்பெறும் இன்பமல்ல! ஆனால் காம உணர்ச்சியில் நுட்பமான ஓர் உண்மை உண்டு. காமத்தைச் செலுத்தும் போது



உண்டாகும் இன்பம் மகத்தானது; நிகரற்றது. அது மட்டும் நீடிக்குமாயின், அதை நிகர்த்த வேறு இன்பம் உலகில் கிடையாது. மறுமையில் நல்லவர்களுக்கு அளிக்கப்படுவதாகக் கூறப்படும் சுவன இன்பம் இத்தகையதுதான். ஏனெனில், ஒரு மனிதன் அடைந்திராத இன்பத்தைக் குறிப்பிட்டு அவனை ஊக்குவிப்பது சரியல்ல. ஆண்மை இழந்தவனைப் புணர்ச்சி இன்பத்தைக் காண்பித்துத் தூண்ட முடியுமா? அரசாங்க நிர்வாகத்தில் கிடைக்கும் இன்பத்தைச் சுட்டிக்காட்டிச் சிறுவனை ஊக்குவிக்க முடியுமா? முடியாது. எனவேதான் மானிட வர்க்கத்தை அது அடைந்த இன்பத்தைச் சுட்டிக் காட்டி ஊக்குவிக்கிறான் இறைவன். அந்த மகத்தான இன்பத்தை அனுபவித்தறிந்த மானிட இனம், மறுமையில் சுவனத்திலும் அந்த இன்பம் நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறது. இறைவனும் அதற்குத் தலை சாய்க்கிறான்.

இறைவனின் தத்துவார்த்த அமைப்பை நீ முதலில் சிந்தித்துப் பார். பின்னர் அவனது பேரன்பை எண்ணிப் பார். அதன் பிறகு இந்த இன்பத்தில் அவன் மறைத்து வைத்திருக்கும் எண்ணற்ற உயிர்களை ஆராய்ந்து பார். காமத்திற்கடியில் இறைவன் குறிப்பாக இரண்டு உயிர்களை மறைத்து வைத்திருக்கிறான். ஒன்று, காமத்தின் காரணமாக - சந்ததியின் விளைவாக மனிதன் மரணத்திற்குப் பிறகும் உயிர் வாழ்கிறான். இது முதல் உயிரோட்டம். இரண்டு, மறுமை வாழ்க்கையில் அவன் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறான். இது இரண்டாம் உயிரோட்டம்.

மிகக் குறைந்த நேரமே நீடிக்கும் இந்த இன்பம் நிரந்தரமாக நீடிக்கும் பேரின்பத்தின்பால் மனிதனின்

மனத்தைத் திருப்புகிறது. இதனால் அந்த இன்பத்தை ஈர்த்து வரக்கூடிய இறை வணக்கத்தில் அவன் ஆர்வம் காட்டுகிறான். சுவன வாழ்க்கையை உரிமையாக்கித் தரும் நற்காரியங்களில் அவன் லயிக்கிறான்.

மனிதனின் உள்ளூறுப்புகள் வெளியுறுப்புகள் அனைத்திலும் – ஏன் விண்ணகம், மண்ணகம் ஆகியவற்றின் அங்கங்கள் அனைத்திலும் பல தத்துவங்கள் மறைந்திருக்கின்றன. பல விந்தைகளை இறைவன் பதுக்கி வைத்திருக்கிறான். அவற்றைக் கண்டுணர முடியாமல் மானிட அறிவாற்றல் திகைக்கிறது. அவற்றை எல்லாராலும் உணர்ந்து கொள்ள முடியாது. பரிசுத்தமான உள்ளம் கொண்டவர்களால் மட்டுமே அவற்றை அறிய முடியும். அவர்களின் உளத் தூய்மைக்குத் தக்கவாறு மண்ணகத்தின் மர்மங்களைப் பற்றி அறிய அவர்கள் கொண்டிருக்கும் ஆசைக்குத் தகுந்தவாறு அந்த மர்மங்கள் வெளிப்படும்.

ஆக, காமத்தின் விபரீதத்தைத் தடுக்கும் எண்ணத்துடன் திருமணம் செய்து கொள்வது மார்க்கத்தில் முக்கியமான ஒன்று. மக்களில் பெரும்பாலோர் ஆண்மையுள்ளவர்களே. வயோதிகத்தை அடையாத ஆண்மையுள்ள ஒவ்வொரு முஸ்லிமுக்கும் இது முக்கியம். ஏனெனில் ஒரு மனிதனின் காம உணர்ச்சி ஓங்கி நிற்கும் போது அவனுடைய இறையச்ச உணர்வு அதைக் கட்டுப்படுத்தாவிடில் பல விபரீதங்கள் ஏற்பட வழியுண்டு.

''அவ்வாறு நீங்கள் செய்யக் கூடாது. இல்லையேல் உலகில் கலகமும் மகத்தான் சீர்கேடும் ஏற்பட்டு விடும்!''

மனிதன் முனைந்தால் இதில் ஓரளவு வெற்றி காணலாம். காமத்தின் சேஷ்டைகளைத் தன் அங்கங்களில் விளையாட விடாமல் தடுக்கலாம். கெட்ட பார்வையிலிருந்து கண்ணைக் காக்கலாம். தவறான புணர்ச்சியிலிருந்து அபத்தைப் பாதுகாக்கலாம்.



ஆனால் அவன் உள்ளம் அவனுக்குக் கட்டுப்பட்டதல்ல. அதை அவனால் அடக்கியாள முடியாது. அது அவன் சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்று. அந்த உள்ளம் அவனை எந்நேரமும் இன்பத்தைக் காட்டி ஊக்குவிக்கும். புணர்ச்சி சம்பந்தமான விஷயங்களை நினைவிற்குக் கொண்டு வரும். பெரும்பாலான சமயங்களில் ஷைத்தானின் போதனைகளுக்கு அது நிலைக்களனாக அமைந்து விடுவதுண்டு. அந்தத் துர் எண்ணங்கள் இறைவணக்கத்திற்கிடையில் கூடத் தோன்றி விடுவதுண்டு. தூய்மையான அந்த நேரத்தில் புணர்ச்சி சம்பந்தமான அருவருக்கத்தக்க எண்ணங்கள் வெளிப்பட ஆரம்பித்து விடும். அந்த எண்ணங்களை மக்களில் கேவலமான ஒரு மனிதரிடம் கூறுவதற்குக் கூட வெட்கமாயிருக்கும். அத்தகைய மட்டரகமான எண்ணங்கள் தொழுகையின் போது அவனுக்குத் தோன்றும்.

இறைவன் மனிதனின் உள்ளத்தைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறான். அதில் நெளியும் எண்ணங்கள் ஒவ்வொன்றையும் அவன் அறிகிறான். மனிதனிடம் பேசுவதற்கு நாவு பயன்படுவது போன்று இறைவனிடம் பேசுவதற்கு உள்ளம் பயன்படுகிறது. நாவால் கூறத் தகாத ஒன்று உள்ளத்தாலும் கூறத்தகாதது தான்!

இறைவழி நடக்க முற்படுபவனுக்கு உள்ளம் தான் முக்கியம். நிரந்தரமாக நோன்பு பிடிப்பதால் மட்டும் உள்ளத்தில் தோன்றும் தீய எண்ணங்களைத் தடை செய்து விட முடியாது. அவற்றைத் தடை செய்வதற்குத் திருமணம்

ஒன்றுதான் உரிய வழி. எனவேதான் இப்னு அப்பாஸ் அவர்கள், ஒரு மனிதனின் நற்காரியங்கள் திருமணத்தால் தான் பூரணமடைகின்றன'' என்று கூறினார்கள்.

இது பொதுவான ஒரு துன்பம். எங்கே, கூறு பார்க் கலாம், இந்தத் துன்பத்திலிருந்து விடுதலை பெற்றவர்கள் யார்?

''இறைவன் மனிதனைப் பலவீனனாகப் படைத் தான்'' என்ற இறை கருத்துக்கு முஜாஹித் அவர்கள் வியாக்கியானம் செய்தார்கள். பெண்ணின் விஷயத்தில் ஒரு மனிதனால் பொறுமையோடிருக்க முடியாது. இந்த அளவுக்குப் பலவீனமானவன் மனிதன்!''

பய்யாள் பின் நுஜைஹ் அவர்கள் கூறினார்கள், ''ஒரு மனிதனின் காமம் உணர்ச்சியுடன் எழுந்து நின்றால் அவனுடைய பகுத்தறிவில் மூன்றில் இரு பகுதிகள் பறிபோய் விட்டன!''

''....மூன்றில் ஒரு பகுதி...'' என்று சிலர் குறிப்பிடுகிறார்கள்.

நவாதிருத் தப்ஸீர் என்ற வியாக்கியான நூலில் காணப்படுகிறது. ''நடுநிசியில் எற்படும் தீங்குகளிலிருந்து இறைவனிடம் நான் தற்காப்புக் கோருகிறேன்'' என்ற இறைவசனத்திற்கு வியாக்கியானம் செய்யப்படுகிறது: ''மனிதனின் காமம் உணர்ச்சியோடு நிற்பதைத்தான் இறைவன் குறிப்பிடுகிறான்.

இது ஒரு துன்ப நிலை. இந்த உணர்ச்சி ஓங்கும் போது மனிதன் பகுத்தறிவுக்கும் மார்க்கத்துக்கும் செவி சாய்க்க மாட்டான். முன்னர் நான் குறிப்பிட்டது போல் காமம்



என்பது இரண்டு உயிர்களுக்குக் காரணமாயிருந்தாலும் அதனால் பல துன்பங்களும் விளைகின்றன. மனிதனைப் பாழ்படுத்துவதற்கு ஷைத்தான் உபயோகிக்கும் வலுவான ஆயுதம் காமம்.

''பெண்களே! நீங்கள் ஆண்களை விட அறிவிலும் மார்க்கத்திலும் குறைந்தவர்கள். இப்படியிருந்தும் அறிவுள்ள ஆண்மகனை அடிமை கொண்டு விடுகிறீர்களே?'' என்று திருநபியவர்கள் அங்கலாய்த்தார்கள். காமத்தின் காரணமாகவே ஆண்மகன் பெண்ணுக்கு அடிமையாகிறான்.

திரு நபியவர்கள் இவ்வாறு இறைஞ்சுவதுண்டு ''இறைவா! என் செவியாலும் என் கண்ணாலும் ஏற்படும் தீங்குகளிலிருந்து என்னைக் காத்தருள்வாயாக! என் இதயத்திலும் என் விந்துத் துளியிலும் துளிர்க்கும் விபரீதங் களிலிருந்து என்னைக் காத்தருள்வாயாக!''

இன்னும் இறைஞ்சினார்கள், ''ஏகனே! என் உள்ளத் தைத் தூய்மைப்படுத்து. என் மானத்தைக் காப்பாற்று!''

இவ்வாறு திரு நபியவர்கள் முறையிட்டார்கள். திரு நபியவர்களே இப்படி என்றால் நாம் அசட்டை செய்வது அறிவுடையாகுமா என்ன?

மதப் பற்றுள்ள ஒரு நண்பர் இரண்டு மூன்று திருமணங்கள் புரிந்திருந்தார். இது குறித்து சில மேதைகள் தங்கள் மறுப்பைத் தெரிவித்தார்கள்.

''நீங்கள் மறுக்கிறீர்கள். நான் ஒன்று கேட்கிறேன், மறைக்காமல் உண்மையைக் கூறுங்கள். இறை வணக்கத்தில் ஈடுபட்டிருக்கும் போது உங்களுக்குக் காம எண்ணம் ஏற்படுவதுண்டா?''

''ஆம், ஏற்படுகிறது - பல சமயங்களில் ஏற்படுகிறது!''

''உங்களுக்கு அடிக்கடி ஏற்படும் இந்த நிலைமை என் வாணாளில் ஒரே ஒரு தடவை ஏற்படுவதைக் கூட நான் விரும்பவில்லை. இல்லையேல் நான் திருமணம் செய்து கொண்டிருக்க மாட்டேன். காம எண்ணம் உண்டானால் என் மனைவியைப் புணர்வேன். பிறகு என் வேலையைப் பார்ப்பேன். கடந்த நாற்பது ஆண்டுகளாக என் உள்ளத்தில் தீய எண்ணமே உருவாகவில்லை!''

இறைவழி நடந்த சிலரது வாழ்க்கை குறித்துச் சில நண்பர்கள் தங்கள் வெறுப்பைத் தெரிவித்தார்கள்.

மதப் பற்றுள்ள சிலர் அதற்கு விடையளித்தார்கள்: ''இறை வழி நடப்பவர்கள் உயர்ந்தவர்கள். அவர்களின் வாழ்க்கையில் நீங்கள் எதை வெறுக்கிறீர்கள்?''

''அவர்கள் அதிக அளவில் உணவருந்துகிறார்கள்.''

''இதில் தவறு இல்லையே! அவர்களுக்குப் பசிப்பது போல் உங்களுக்கும் பசித்தால் நீங்களும் அவர்களைப் போலத்தான் அதிக உணவை உட்கொள்வீர்கள்.''

''பலதார மணம் செய்கிறார்களே...''

''ஆம். இதிலும் தவறில்லையே! அவர்கள் தங்கள் பார்வை, அபம் ஆகியவற்றைக் காப்பது போல் நீங்களும் காப்பதாயிருந்தால் அவர்களைப் போலவே நீங்களும் பல தார மணம் செய்யத்தான் செய்வீர்கள்!''

ஜுனைதுல் பக்தாதி அவர்கள் கூறினார்கள், ''உணவு எனக்குத் தேவைப்படுவது போல் புணர்ச்சியும் எனக்குத் தேவைப்படுகிறது.''



உண்மையில் மனைவி என்பவள் உணவு தான். உள்ளம் தூய்மை பெறுவதற்கு அவள் காரணமாயிருக்கிறாள்.

திருநபியவர்கள் கூறினார்கள்: ''ஒரு பெண்மணி ஆண்மகனை எதிர்நோக்கி வரும் போது அவள் தோற்றத்தில் ஷைத்தான் மறைந்திருக்கிறான். உங்களில் ஒருவன் ஒரு பெண்ணைப் பார்த்து அவள் மீது ஆசை கொண்டால் அவன் தன் மனைவியை அணுகட்டும், அந்தப் பெண்ணின் அம்சங்கள் அவன் மனைவியிடமும் உண்டு.''

இன்னும் கூறினார்கள்: ''சில பெண்மணிகளின் கணவர்கள் வெளியூர் சென்று நீண்ட நாட்களாகியிருக்கலாம். இத்தகைய பெண்களை நீங்கள் நெருங்காதீர்கள். மனிதனின் உடலில் உதிரம் ஓடும் பகுதிகளெல்லாம் துர் எண்ணம் வியாபித்து ஓடுகிறது.''

''தங்களுக்குமா இப்படி?'' என்று நண்பர்கள் நபியவர்களைக் கேட்டார்கள். இதற்குத் திரு நபியவர்கள் என்ன பதில் கூறினார்கள் தெரியுமா? இதோ அதனைக் கூறுகின்றேன் கேள்.

''ஆம். சந்தேகமின்றி. ஆனால் விபரீதம் ஏற்படாதவாறு இறைவன் என்னைக் காப்பாற்றி விட்டான்!''

இவை அனைத்தும் மன அமைதிக்காகவே செய்யப்படுகின்றன. மன அமைதி ஏற்படும் போது இறை வணக்கத்தில் ஆர்வமும் உற்சாகமும் ஏற்பட்டு விடும்.

''பல மனைவியரைப் பெற்றவனே இந்த சமுதாயத்தில் மேலானவன்'' என இப்னு அப்பாஸ் அவர்கள் கூறினார்கள். அரேபியர்களின் உடல்நிலை கடின உஷ்ணம் நிரம்பியது. அவர்களின் காம உணர்ச்சி வலுவானது. எனவே

அவர்களுக்குப் பல தார மணம் பெரிதும் அவசிய மாயிருந்தது.

மன அமைதியைக் குறிக்கோளாய்க் கொண்டு தான் அடிமைப் பெண்ணை உரிமையுள்ள ஒருவன் விவாகம் செய்து கொள்வதை இஸ்லாம் அனுமதித்திருக்கிறது. பூரண உரிமையுள்ள ஒருவன் அடிமைப் பெண் ஒருத்தியை மணம் முடித்துக் கொள்ளும் போது ஒரு விபரீதம் உருப்பெறுகிறது. அவனுக்கு அவள் மூலம் பிறக்கும் குழந்தை அடிமைக் குழந்தை என அழைக்கப்படுகிறது. அந்தக் குழந்தைக்கு அடிமைத்தனத்தை ஏற்படுத்தியவன் தந்தை. உரிமையுள்ள பெண்ணை அவன் மணம் முடித்திருந்தால் பிறக்கும் குழந்தை அடிமையாக முடியாதல்லவா? ஒரு குழந்தையின் மீது அடிமைத்தனத்தைச் சுமத்துவது குற்றமே என்றாலும், மாற்றாள் புணர்ச்சியை விட இது கொடிய குற்றமல்ல. எனவே, இந்தத் திருமணத்தை இஸ்லாம் அனுமதிக்கிறது.

ஒரு மனிதன் அடிமைப் பெண்ணைத் திருமணம் செய்யும் போது குழந்தையின் வாழ்க்கையில் சிறிது களங்கம் ஏற்படுகிறது– அதுவும் குறிப்பிட்ட கால வரம்பிற்கு! ஆனால் அவன் தவறான புணர்ச்சியில் ஈடுபடும் போது நிரந்தரமான மறுமை வாழ்க்கையிலே களங்கம் கற்பிக்கப் படுகிறது!

இப்னு அப்பாஸ் அவர்களின் உபதேச மன்றத்திலிருந்து ஒருநாள் எல்லோரும் போய் விட்டார்கள். ஒரு நண்பர் மட்டும் உட்கார்ந்திருந்தார்.

''நீர் மட்டும் ஏன் உட்கார்ந்திருக்கிறீர்? என்னிடம் உமக்கு ஏதேனும் தேவையுண்டா?'' என்று இப்னு அப்பாஸ் கேட்டார்கள்.



அந்த இளைஞர் விடையிறுத்தார்: ''ஆம் எல்லோரும் இருக்கிறார்களே என்று தயங்கிக் கொண்டிருந்தேன்...!''

''தந்தையைப் போன்றவன் அறிஞன், உம் தந்தையிடம் கூறத் தகுந்த விஷயங்களை என்னிடம் கூறும்!''

''நான் இளைஞன் தான், என்றாலும் எனக்கு இன்னும் திருமணமாகவில்லை. தவறான வழிகளில் பிரவேசிக்க நேர்ந்து விடுமோ என்று நான் சில சமயங்களில் அச்சமுறுகிறேன். இன்னும் சில சமயங்களில் என் கரத்தாலேயே விந்துத் துளிகளை வெளியேற்றுகிறேன். இதில் குற்றம் ஏதும் உண்டா?''

இப்னு அப்பாஸ் அவர்கள் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள்.

''சீ, சீ! அடிமைப் பெண் ஒருத்தியை நீர் மணம் முடித்துக் கொள்ளலாமே. இது நீர் செய்யும் இழி செயலை விட மேலானது. தவறான புணர்ச்சியை விட நல்லது...''

இதிலிருந்து மணமற்றவன் காமத்தின் அறை கூவலுக்கு அடிபணியும் போது மூன்று விபரீதங்கள் விளைகின்றன என்று தெரிகிறது. அவற்றில் சாதாரணமானது அடிமைப்பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது. இந்தத் திருமணத்தில் ஒரு குழந்தையின் மீது அடிமைத் தளையைச் சுமத்தும் குற்றம் உண்டு. இவற்றில் கடினமானது கரத்தால் காரியத்தை முடித்துக் கொள்வது. இவற்றில் தீங்கு நிறைந்தது மாற்றாள் புணர்ச்சி. இப்னு அப்பாஸ் அவர்கள் பிந்திய இரண்டில் எதையும் குறிப்பிடவில்லை. ''அடிமைப் பெண் ஒருத்தியை நீர் மணம் முடித்துக் கொள்ளலாமே'' என்று தான் கூறினார்கள். இது சாதாரணக்

குற்றம். கொடிய குற்றம் நிகழ்வதைத் தடுப்பதற்காகச் சாதாரணமான இந்தக் குற்றத்தைச் செய்யலாம் என்பது அவர்கள் கருத்து. மேற் குறிப்பிட்ட மூன்று குற்றங்களில் சாதாரணமானது அடிமைத் திருமணம் தான் என்பதில் சந்தேகமில்லையா?

ஆக, திருமணத்தில் பெரும்பாலோருக்குச் சிறப்பு உண்டு. ஒரு சிலருக்கு வியாதியாலோ வயோதிகத்தாலோ காமம் குன்றியிருக்கலாம். அவர்கள் விஷயத்தில் மேற் குறிப்பிட்ட மூன்று விபரீதங்களும் ஏற்பட முடியாது. எனவே அவர்கள் அடிமைப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டியதுமில்லை. எனினும் சந்ததியை உண்டாக்கும் நோக்கத்துடன் மணம் முடித்துக் கொள்வது அவர்களுக்கும் முக்கியமே. அறவே ஆண்மையற்றவர்கள் தாம் இதற்கு விதி விலக்கு. இத்தகையவர்கள் மிகவும் குறைவு.

சிலருக்கு அதிகமான காம உணர்ச்சி உண்டு . ஒரே மனைவியின் உதவியால் அவர்கள் திருப்தியடைய முடியாது. அத்தகையவர்கள் நான்கு மனைவிகள் வரை பலதார மணம் புரிந்து கொள்ளலாம்.

பாத்திமா (ரலி) அவர்கள் இறந்த ஏழாம் இரவே அலீ (ரலி) அவர்கள் மற்றொரு பெண்ணை மணம் முடித்துக் கொண்டார்கள். அலீ (ரலி) அவர்களின் மகனார் ஹஸன் (ரலி) அவர்கள் பல திருமணங்கள் செய்தார்க்ள. 200-க்கு மேற்பட்ட பெண்களை அவர்கள் மணம் முடித்தார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் நான்கு பெண்களை ஒரே சமயத்தில் மணம் முடித்தார்களாம். ஒரே சமயத்தில் நான்கு பெண்களை விவாகரத்துச் செய்ததும் உண்டு.



'ஹஸன் என்னைச் சேர்ந்தவர். ஹுஸைன் அலீயைச் சேர்ந்தவர்'' என்று அண்ணலவர்கள் கூறியிருக்கிறார்கள்.

முகையறா அவர்கள் என்பது பெண்களை மணம் முடித்தார்களாம். ஏக காலத்தில் மூன்று – நான்கு மனைவிகள் உள்ளவர்கள் நபித் தோழர்களில் பலர். இரு மனைவிகள் உள்ளவர்கள் மிகப் பலர்; அவர்களைக் கணக்கிட முடியாது.

இது காரணத்தைப் பொறுத்த விஷயம். காரணம் வலுவேறும்போது திருமணத்தின் எண்ணிக்கை மேலேறும். காரணம் குறையும் போது திருமணத்தின் எண் ணிக்கையும் குறையும். நன்கு ஆராய்ந்து பார்!

# மூன்றும் நான்கும்

திருமணத்தின் மூலம் மனம் அமைதியடைகிறது. மனைவியுடன் சேர்ந்து அமர்ந்திருப்பதிலும் அவள் அழகைக் கண்களால் பருகுவதிலும் அவளுடன் சல்லாபம் புரி வதிலும் கணவனுக்குத் தெவிட்டாத இன்பமுண்டு. இதனால் உள்ளம் அமைதியடைகிறது. மன அமைதி ஏற்படும் போது இறை வணக்கத்திற்கு அது அடி கோலுகிறது.

மானிட மனம் விசித்திரமானது. நல்லதையும் நல் வழியையும் அது என்றைக்குமே விரும்புவதில்லை. இறை வழியைப் பார்த்து அது முகம் சுளிக்கிறது. எதிர் வழியை அது மனப்பூர்வமாக வரவேற்கிறது. அதை அப்படி இறைவன் படைத்திருக்கிறான்.

அதன் வெறுப்பிற்குரிய இறைவழியில் அதனைப் பலவந்தமாகச் செலுத்துவதில் பயனில்லை. இவ்வாறு செய்தால் எதிர்பார்த்த பயனை அடைய முடியாது. எனவே அந்த மனத்திற்குச் சில சமயங்களில் அதன் விருப்பத் திற்குரியவற்றையும் அளிக்க வேண்டும். சிறிதளவு அதற்கு இன்பம் புகட்டுவதும் அவசியம். இவ்வாறு செய்தால் இறைவழியில் நடப்பதற்கு அது முன் வரலாம்.



பெண்களின் சல்லாபத்தில் கிடைக்கும் இன்பம் உலகத் துன்பத்தை மறக்கடிக்கும் ஆற்றலுடையது – உள்ளத்தை ஒருமுகப்படுத்தும் சக்தி கொண்டது. ஆகவே இறையச்சம் பூண்டவர்கள் தவறற்ற காரியங்களின் மூலம் தங்கள் மனத்திற்கு இன்பமளித்து ஊக்கத்தையும் உணர்ச் சியையும் உண்டாக்க வேண்டும். இதைத்தான் இறைவன், ''பெண்ணின் மூலம் அமைதி பெறுங்கள்'' என்று குறிப்பிடுகிறான்.

''ஒரு கணநேரமேனும் நீங்கள் உங்கள் உள்ளத்திற்கு மகிழ்வூட்டுங்கள். ஏனெனில், அது வெறுப்படைந்தால் அதன் பார்வை மழுங்கிப் போய் விடும்'' என அறிஞர் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அறிவுள்ள மனிதன் தன் நேரத்தை மூன்று பகுதி களாகப் பிரித்துக் கொள்கிறான். முதற் பகுதியில் அவன் தன் நாயனோடு மோன உரையாடல் நடத்துகிறான். இரண்டாவது பகுதியில் அவன் தன் குற்றங்கள் குறித்துத் தன்னைத்தானே விசாரணை செய்து கொள்கிறான். மூன்றாவது பகுதியில் உணவு வகைகளில் கவனம் செலுத்துகிறான்– இவ்வாறு சில நூல்கள் வரைகின்றன. இவற்றில் கடைசிக் காரியம் முந்திய இருகாரியங்களுக்கும் உதவியாக அமைகிறது.

மறுமையில் பயன் தரும் காரியம், இம்மையில் வாழ்க்கைக்கு வேண்டிய சம்பாத்தியம், மனைவியிட மிருந்து கிடைக்கும் இன்பம் ஆகிய மூன்றையும் தவிர்த்து மற்ற எந்தக் காரியத்திலும் புத்திசாலி ஆர்வம் கொள்ள மாட்டான் - இப்படியும் சில நூல்கள் வரைகின்றன.

''....என் நடையைப் பின்பற்றுவதில் ஒருவன் ஆர்வம் கொண்டால் அவன் நேர்வழியை அடைந்து விட்டான் என்று பொருள்!'' என்று திருநபியவர்கள் கூறினார்கள்.

''என் உள்ளத்தை நற்காரியங்களின்பால் திருப்பி அதை அவற்றின் இன்பத்தில் லயிக்கச் செய்வதற்காகச் சில சமயங்களில் வீண் விளையாட்டுகளின் மூலம் அதற்கு இன்பமூட்டுகிறேன்!'' என்று அபுத் தர்தா கூறினார்கள்.

திருநபியவர்கள் சொன்னார்கள்: ''இம்மையின் இன்பங்களில் மூன்றை நான் பெரிதும் விரும்புகிறேன்; வாசனைப் பொருள்; பெண்; இறைவணக்கத்தில் கிடைக்கும் பேரின்பம்!''

இது மகத்தான உண்மை. இறை சிந்தனையிலும் இறைவணக்கத்திலும் இதர நன்மைகளிலும் ஒருமனிதன் ஈடுபடும் போது அவன் மனம் நடத்தும் கடும் போராட்டத்தை அனுபவித்தறிந்தவர்கள் இந்த உண்மையை மறுக்க மாட்டார்கள்.

இதனால் தான் திருமணத்தின் சிறப்பு உயர்கிறது. ஆனால் இந்த நோக்கத்திற்கென்றே திருமணம் செய்து கொள்பவர்கள் மிகவும் குறைவு. குழந்தை பெறும் நோக்கத்துடனும், காமத்தின் விபரீதத்தைத் தடுக்கும் எண்ணத்துடனும் திருமணம் செய்பவர்கள் தாம் இன்று அதிகம். மக்களின் மத்தியில் பல தரப்பட்ட சுபாவங்கள் காணப்படுகின்றன. நெளிந்தோடும் நீரோடை, பசுமையான புல் தரை முதலியவற்றைப் பார்த்துத் தங்கள் மனத்திற்கு இன்பமளிப்பவர்களும் இருக்கிறார்கள். மன அமைதிக்காக ஒரு பெண்மணியுடன் உரையாடுவது, அவளுடன்



சல்லாபம் புரிவது முதலிய எதுவும் அவர்களுக்குத் தேவையில்லை. பெண்களின் உதவியின்றியே அவர்கள் மன அமைதி பெறுகிறார்கள். இந்தத் தத்துவம் சூழ்நிலைக்குத் தகுந்தபடி, மக்களின் மனப்பான்மைக்குத் தக்கவாறு மாற்றமடையும் தன்மையுடையது.

திருமணத்தால் ஒரு மனிதனுக்கு அன்றாடம் செய்து தீர்க்க வேண்டிய அலுவல்களிலிருந்து விடுதலை கிடைக்கிறது. இது திருமணத்தால் விளையும் நான்காம் நன்மை. சமைப்பது, வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்வது, படுக்கப் பாய் விரிப்பது, பாத்திரங்களைக் கழுவி அடுக்குவது – இப்படிப் பல அலுவல்களிலிருந்து அவனுக்கு விடுதலை கிடைக்கிறது. திருமணம் செய்து கொள்ளாத ஒருவன் இத்தனை காரியங்களையும் தானாகவே கவனிக்க வேண்டியிருக்கின்றது. இதனால் அவனுடைய பொழுதில் பெரும் பகுதி வீணாகிறது. இந்த நேரத்தில் அவனால் அறிவை வளர்க்க முடியாது. நற்காரியங்களிலும் அவனால் நன்கு ஈடுபட முடியாது. அவனுக்கு அவகாசம் தான் ஏது?

இந்தச் சமயத்தில் வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தகுந்த ஒழுக்கமுள்ள மனைவி ஒருத்தி இருந்தால் அது அவனுக்கு எவ்வளவோ நல்லது. அவனுடைய முன்னேற்றத்திற்கும் அவள் துணை நிற்பாள். பலதரப்பட்ட அலுவல்களின் காரணமாக மனம் சோர்வடைவதற்கும் வழியில்லாமற் போய்விடும்.

''ஒழுக்கமுள்ள மனைவி உலக ஆசாபாசங்களில் ஈடுபட்டவளல்ல. அவள் உன்னை மறுமைக்குரிய காரியங்களில் ஈடுபடச் செய்கிறாள்!'' என்று அபூசுலைமான் கூறினார்கள். வீட்டு விவகாரங்களை அவள் நல்ல முறையில்

கவனித்துக்கொள்கிறாள். கணவனின் காமத்தைத் தணித்து அவன் உள்ளத்தில் அமைதியை ஏற்படுத்துகிறாள். இதனால் அவன் மறுமைக்குரிய காரியங்களில் மகிழ்ச்சியோடு பிரவேசிக்கிறான்.

''இறைவனே! இம்மையில் எங்களுக்கு நன்மையைத் தந்தருள்வாயாக!'' என்ற பிரார்த்தனைக்குச் சிலர் இவ்வாறு வியாக்கியானம் செய்கிறார்கள். நன்மை என்றால் இந்த இடத்தில் ஒழுக்கமுள்ள மனைவி என்றுதான் பொருள்.

திருநபியவர்கள் விளக்கினார்கள்: ''நன்றியுள்ள உள்ளத்தையும், இறைதுதியுடைய நாவையும், மறுமைக்கு வேண்டிய நற்காரியங்களில் உதவி புரியும் ஒழுக்கமுள்ள மனைவியையும் நீங்கள் பெற்றிருக்க வேண்டும்!''

நன்கு கவனி; திருநபியவர்கள் மனைவியின் முக்கியத் துவத்தை எவ்வாறு வலியுறுத்துகிறார்கள் என்று எண்ணிப் பார். இறைதுதி, இறை நன்றி ஆகிய மகத்தான இரு காரியங்களோடு நல்லொழுக்கமுள்ள மனைவியையும் இணைத்துக் கூறியிருக்கிறார்கள்.

''நல்லவனுக்கு நாம் இனிமையான வாழ்க்கையை அளிப்போம்'' என்ற இறை வசனத்திற்குச் சில வியாக் கியான நூல்கள் இப்படி வியாக்கியானம் செய்கின்றன. ''இனிமையான வாழ்க்கை என்றால் குணவதியான இல்லாள் என்று பொருள்!''

உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ''ஈமான் எனும் மத நம்பிக்கைக்கு அடுத்தபடியாக மனிதனுக்கு இறைவன் அளிக்கும் மகத்தான பேறு ஒழுக்கமுள்ள மனைவி....''



திருநபியவர்கள் வியாக்கியானம் செய்தார்கள்: ''மனிதனுக்கு அவன் மனைவி தீய காரியங்களில் உதவி புரிகிறாள். என் மனைவிகள் அப்படியில்லை. இறை வழிபாட்டில் எனக்கு அவர்கள் உதவிபுரிகிறார்கள். இந்த வகையில் மற்றவர்களை விட நான் சிறந்தவன்...''

திருமணத்தினால் விளையும் நன்மைகளில் இதுவும் ஒன்று. மதப்பற்றுள்ளவர்கள் இதற்காகவே திருமணம் செய்து கொள்கிறார்கள். ஆனால் உதவி ஒத்தாசைக்கு ஆளில்லாதவர்கள் தாம் இப்படிச் செய்ய முடியும். இந்தக் குறிக்கோள் நிறைவேறுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் தேவையில்லை தான். ஒரு மனிதனுக்கு அவனது ஒரே மனைவியால் நற்காரியங்களில் போதிய உதவி ஒத்தாசை புரிய முடியும். பலதார மணம் அடையும் போது பல இடையூறுகள் குறுக்கிடுகின்றன. சில சமயங்களில் வாழ்க்கையில் சிக்கல் ஏற்படலாம். வீட்டு விவகாரங்களில் புரட்சி உருவாகலாம்.

எது எப்படியாயினும் தீமையைத் தடுத்து நிறுத்து வதற்கும் நன்மையை இழுத்து வருவதற்கும் மனைவி அவசியம் என்பதை மறுக்க முடியாது. இதனால் தான் 'உதவியற்றவன் கேவலமானவன்' என்ற முதுமொழி வழக்கிலிருந்து வருகிறது. எதிர்ப்படும் தீங்குகளைத் தட்டி ஒதுக்குவதற்கு வேண்டிய உதவி ஒருவனுக்கு இருந்தால் அவன் உயர்ந்தவன் தான். அவன் இறை வணக்கத்தில் தடையின்றிப் பிரவேசிக்கலாம். அவன் உள்ளம் அதில் லயித்துப் பேரின்பம் காண வழியுண்டு.

# கடைசிப் பயன்

திருமணத்தின் மூலம் மனப்போராட்டம் நடத்துவதற்கும் மனத்தைப் பண்படுத்துவதற்கும் வாய்ப்புக் கிடைக்கிறது.

திருமணம் செய்து கொண்டவனுக்குத் தன் மனைவியின் விஷயத்தில் அக்கறை காட்ட வேண்டிய தேவை ஏற்படுகிறது. அவன் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உண்டாகிறது. அவள் துர்க்குணம் கொண்டவளாயிருக்கலாம்; அவன் பொறுத்துக் கொள்ள வேண்டும். மனைவியால் அவனுக்குப் பல துன்பங்கள் உண்டாகலாம்; அவன் பொறுமையோடு செயலாற்ற வேண்டிவரும். துர்க்குணம் படைத்த மனைவியைத் திருத்த வேண்டியது கணவனின் பொறுப்பு. இதில் அவன் போதிய அளவு கவனம் செலுத்த வேண்டும். இறைவழியில் அவளைச் செலுத்த முனைய வேண்டும். சம்பாத்தியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நிர்ப்பந்தமும் குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க வேண்டிய பொறுப்பும் ஒன்றின் பின் ஒன்றாக வந்து சேருகின்றன!

இவை அனைத்தும் மகத்தான காரியங்கள் என்பதில் சந்தேகமில்லை. இவற்றிற்கு மார்க்கம் அளிக்கும் சிறப்பும்



பெருமையும் மிக அதிகம். ஒரு மனிதனின் கண்காணிப்பிற்கும் கவனத்திற்கும் உரியவர்களே அவன் மனைவியும் மக்களும். இவர்கள் விஷயத்தில் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்வது சிறப்பான ஒரு காரியம். இவை அனைத்தும் திருமணத்தின் காரணமாகவே உருவாகின்றன.

சிலர் திருமணத்தை வெறுத்து ஒதுக்கிவிட்டார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அதற்குக் காரணமுண்டு. மனைவியின் உரிமைகளைப் பாதுகாக்க முடியாமற் போய்விடுமோ என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். தங்களால் மனைவி மக்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டுவிடுமோ எனப் பயப்படுகிறார்கள். இதுதான் அவர்கள் திருமணத்தை வெறுப்பதற்குக் காரணம்.

ஆனால் குடும்பஸ்தனைத் திரு நபியவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அவனுடைய ஒரு நாள் வணக்கம் மற்றவர்களின் எழுபதாண்டு வணக்கத்திற்குச் சமமானது என்று கூறியிருக்கிறார்கள்.

இன்னும் கூறினார்கள்: ''நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்புள்ளவர்கள். உங்கள் பொறுப்பின் கீழ் உள்ளவர்கள் குறித்து நீங்கள் மறுமையில் விசாரணை செய்யப்படுவீர்கள்.''

திருமணம் செய்து கொண்ட்வனுக்குப் பொறுப்பும் சிறப்பும் அதிகம். தன்னைச் சீர்திருத்திக் கொள்வதோடு தன் மனைவியையும் சீர்திருத்த வேண்டிய பொறுப்பு அவனுக்குண்டு. இதனால் அவன் சிறப்பு மேலோங்குகிறது. தன்னை மட்டிலும் சீர்திருத்திக் கொள்பவனுக்கும் தன்னோடு தன் மனைவியையும் சீர் திருத்துபவனுக்கும் இடையில் வேற்றுமையுண்டல்லவா? துன்பத்தில் தவிப்பவனுக்கும்

இன்பத்தில் மிதப்பவனுக்குமிடையில் வித்தியாசமுண்டு. மனைவி மக்களின் பெறுப்பில் தலையிட்டுத் துன்பப் படுவது, இறைவழியில் புனிதப்போர் புரிவது போன்ற ஒரு காரியம். இதனால்தான் பஷர் அவர்கள், ''அஹ்மத் என்னை விட மேலானவர். ஏனெனில் நான் எனக்கு மட்டுமே தூய உணவைச் சம்பாதிக்கிறேன். அவரோ தமக்கு மட்டுமின்றிப் பிறருக்கும் தூய உணவைச் சம்பாதிக்கிறார்'' என்று அஹமத் பின் ஹன்பல் அவர்களைப் பாராட்டினார்கள்.

திரு நபியவர்கள் கூறினார்கள்: ''மனைவிக்காகக் கணவன் செலவிடும் தொகை தர்மமாகக் கணிக்கப் படுகிறது...''

அறிஞர்கள் சிலரிடை இவ்வாறு வாக்குவாதம் நடைபெற்றது.

''இறைவன் எனக்குச் சகல பேறுகளையும் கொடுத் திருக்கிறான். புனிதப் போரில் கூட நான் பங்கு கொண்டு செயலாற்றி யிருக்கிறேன். இறைவன் எனக்களித்த அத்தனை பேறுகளையும் வேறு யாருக்குமே அவன் அளிக்க வில்லை!''

மற்றோர் அறிஞர் இதை மறுத்தார்.

''இது தவறு. முற்கால மேதைகளுக்கு இறைவன் அளித்த மகத்தான பேற்றை நீர் பெறவில்லையே. அவர்களின் அந்தஸ்து எங்கே? உமது அந்தஸ்து எங்கே?''

''அது என்ன பேறு?''

அந்த மேதைகள் நியாயமான வழியில் சம்பாதித்து அதனை மனைவி மக்களுக்காகச் செலவிட்டார்கள். இந்தப் பேற்றை இறைவன் அவர்களுக்கு அளித்திருந்தான்!''



நண்பர்கள் சிலருடன் இப்னு முபாரக் அவர்கள் ஒரு சமயம் போர் முனையில் இருந்தார்கள்.

''இப்போது நாம் மேற்கொண்டிருக்கும் காரியத்தை விட மேலான காரியம் எது என்று உங்களுக்குத் தெரியுமா?''

நண்பர்கள் உதட்டைப் பிதுக்கினார்கள். ''தெரியாது!''

''எனக்குத் தெரியும்!''

''என்ன அது?'' என்று நண்பர்கள் கேட்டார்கள்.

''குடும்பஸ்தனான நல்ல மனிதன் ஒருவன் இறை வணக்கத்திற்காக இரவில் கண் விழித்தெழுகிறான்.

''தன் குழந்தைகள் மர்மத் தலங்களெல்லாம் தெரியும் படி அலங்கோல நிலையில் துயிலுறுவதைக் காண்கிறான். தன் துணியால் அவர்களை மூடி மறைக்கிறான். அவன் செய்த இக்காரியம் நாம் இப்போது மேற்கொண்டிருக்கும் காரியத்தைவிடச் சிறப்பு வாய்ந்தது.''

திருநபியவர்கள் சொன்னார்கள்: ''ஒரு மனிதன் நல்ல முறையில் இறைவனை வணங்கினால், அவனுக்குக் குழந்தைகள் விரிவுபட்டால், அவனது பொருளாதாரம் சுருங்கினால், அவன் மற்ற முஸ்லிம்கள் குறித்துப் புறம் பேசாதிருந்தால் மறுமையில் என்னோடு அவன் சுவனத்தில் வீற்றிருப்பான்!''

இன்னும் சொன்னார்கள்: ''பல குழந்தைகளுக்குத் தந்தையான நேர்மைக் குணம் படைத்த ஏழை ஒருவனை இறைவன் பெரிதும் விரும்புகிறான்.''

பிறிதோரிடத்தில்: ''ஒரு மனிதனின் தீய செயல்கள் விரிவடைந்து விட்டால் அவனுக்கு இறைவன் பல

குழந்தைகளைக் கொடுத்து துன்புறுத்துகிறான். இதன் மூலம் அவன் தீய செயல்களுக்குரிய தண்டனையை இம்மையிலேயே அனுபவிக்கிறான்.''

அறிஞர் ஒருவர் கூறினார்: ''பாவச் செயல்கள் பல வகைப்படுகின்றன. ஒவ்வொரு பாவத்திற்கும், ஒவ்வொரு விதத் தண்டனையுண்டு. சில பாவங்களுக்குரிய தண்டனை, மனைவி மக்கள் குறித்து மனம் கலங்கி அவதிப்படுவதாலேயே நிறைவேறி விடுகிறது.''

அண்ணலவர்கள் கூறினார்கள்: ''ஒரு முஸ்லிமுக்கு மூன்று பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காக அவன் சம்பாதிக்கிறான், செலவிடுகிறான்; அவர்களைப் பொறுப்பான இடத்தில் ஒப்படைக்கிறான். இவ்வாறு நடக்கும் முஸ்லிமுக்கு இறைவன் சுவனத்தை ஒதுக்கி விட்டான் - இதில் சந்தேகமேயில்லை! ஆனால் ஒரு நிபந்தனை; அவன் மன்னிக்கப்படாத கொடிய குற்றங்களைச் செய்யக் கூடாது!''

பக்தர் ஒருவர் தன் மனைவியிடம் நல்ல முறையில் நடந்து கொண்டிருந்தார். திடீரென்று ஒரு நாள் அவள் இறந்து விட்டாள்.

''மற்றொருத்தியை நீங்கள் மணம் முடித்துக் கொள்ளலாமே!'' என்று நண்பர்கள் வினவினார்கள்.

பக்தர் மறுத்து விட்டார். ''தேவையில்லை. தனிமையை என் உள்ளம் விரும்புகிறது; தனிமையால் களிப்படைகிறது. தனிமையின் காரணமாக என் துன்பம் பெருகுகிறது. அதை நான் வரவேற்கிறேன்.''

மனைவி இறந்த ஒரு வாரத்திற்குப் பிறகு அவர் ஒரு கனவு கண்டார்.



அவர் மண்ணில் நின்று கொண்டு விண்ணை ஏறிட்டுப் பார்க்கிறார், விண்ணகம் திறந்து கிடக்கிறது. பலர் வானவெளியில் உலவுகிறார்கள். அவரை யாரோ சிலர் சுட்டிக்காட்டி, ''இவன் தான் பீடை பிடித்தவன்'' என்கிறார்கள். மற்றவர்களும் ''ஆம். உண்மைதான்'' என்று ஆமோதிக்கிறார்கள்.

அவர்களை அணுகி விஷயத்தைக் கேட்டறியத் துணிவில்லை அவருக்கு.

சிறுவன் ஒருவன் அவர் அருகில் வருகிறான். தம் வினாவையும் அவர் வீசுகிறார்.

சிறுவன் வருத்தத்துடன் விடையளிக்கிறான். ''உங்கள் கிரியாம்சைகள் மதப்போர் புரிந்த பொருந்தகைகளின் பட்டியலில் இடம் பெற்று வந்தன. ஆனால் ஏனோ தெரியவில்லை – ஒரு வாரமாக உங்கள் அந்தஸ்து வானவர்களிடையில் குறைந்து போய் விட்டது. உங்கள் கிரியாம்சைகளுக்கு முன் போல் சிறப்பிடம் அளிக்கக் கூடாது என்று நாங்கள் பணிக்கப்பட்டிருக்கிறோம்.''

இந்தக் கனவிலிருந்து விழிப்படைந்த பக்தர் தம் நண்பர்களிடம், ''எனக்குத் திருமணம் செய்து வையுங்கள்'' என்று கூற ஆரம்பித்து விட்டார். அதன் பிறகு அவருக்கு இரண்டு, மூன்று மனைவிகள் இருந்தார்களாம்!

ஒரு சமயம் யூனுஸ் நபியவர்களைப் பார்க்கச் சிலர் சென்றிருந்தார்கள். வந்தவர்களுக்கு நபியவர்கள் விருந்து வைத்தார்கள். விருந்தினிடையே தங்கள் மனைவியிடம் செல்வதும் திரும்பி வருவதுமாக இருந்தார்கள். மனைவியை அவர்கள் அணுகிய போதெல்லாம் அந்த மாதரசி

சொல்லம்புகளை நபியவர்கள் மீது வீசித் துன்புறுத்தினார். இதை விருந்தாளிகள் கவனித்தார்கள்; ஆச்சரியப்பட்டார்கள் - இத்தனைக்கும் நபியவர்கள் வாய்மூடி மௌனியா யிருந்தது கண்டு!

''அதிசயப்படாதீர்கள்! என்னை இறைவன் மறுமை யில் தண்டிக்கக் கூடாது என்பது என் ஆசை. அந்தத் தண்டனையை இம்மையிலேயே எனக்களித்து விடுமாறு அவனிடம் வேண்டிக் கொண்டிருக்கிறேன். எனவே தான் இந்தத் துன்பத்தை மகிழ்வுடன் அனுபவித்து வருகிறேன்!'' என்று யூனுஸ் நபியவர்கள் விளக்கம் தந்தார்கள்.

இவ்வாறு குடும்ப விவகாரங்களில் துன்பம் உருவாகும் போது மனத்திற்குப் பயிற்சி ஏற்படுகிறது. சினத்தை அடக்கியாள வேண்டிய அவசியம் உண்டாகிறது; குணத்தைச் சீர்திருத்திக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. தனி மனிதன் ஒருவனால் தன் மனத்தின் அந்தரங்கத் தீய உணர்ச்சிகளை பகிரங்கமாகக் காண முடியாது. அவன் என்னதான் சீர்குணம் படைத்தவனை நண் பனாகப் பெற்றிருந்தாலும் அவனுக்கு அது இலகுவான காரியமல்ல. ஒரு மனிதனிடமுள்ள அடிப்படையான குறைகளை அவ்வளவு எளிதில் கண்டு பிடித்து விட முடியாது.

எனவே மேலே குறிப்பிட்டவை போன்ற சிரமங் களின் மூலம் தங்களைத் தாங்களே பரிசீலனை செய்து கொள்வது இறைவழி நடப்பவர்களுக்கு அவசியம். சிரமங்கள் எதிர்ப்படும் போது பொறுமையைக் கடை பிடிக்கும் மனப்பான்மை தங்களிடம் இருக்கிறதா என்று அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். இதில் பயிற்சி யுண்டு. இந்தப் பயிற்சியால் உள்ளம் பண்படுகிறது;



தெளிவடைகிறது. இதனால் தீய தன்மைகள் உள்ளத்தை விட்டு வெளியேற்றப்படுகின்றன.

மனைவி மக்களால் ஏற்படும் சிரமங்களைப் பொறு மையோடு ஏற்றுக் கொள்வது மனப்பயிற்சி மட்டுமல்ல. அதில் ஒருவிதப் பொறுப்புணர்ச்சியும் உண்டு. ஒரு வகையில் இதனை வணக்கம் என்றும் குறிப்பிடலாம்.

மேலே நான் கூறியவை அனைத்தும் திருமணத்தால் விளையும் நன்மைகள். நன்மைகளை என்னவோ எழுதி விட்டேன். ஆனால் இவற்றால் இருவர் மட்டுமே பயனடைய முடியும்.

1. இறைவழி நடக்கத் தொடங்கியவன்; தன் குணங் களைச் சீர்படுத்துவதிலும் மனப்பயிற்சியை மேற் கொள்வதிலும் ஆர்வம் கொண்டவன். இவன் திருமணத்தைத் தனக்குப் பயிற்சி எனக் கொள்ளலாம்.

2. இறை பக்தன்; மர்ம ஞானத்தைக் காணாதவன்; சிந்த னையின் சிறப்பை உணராதவன். இவனுக்கு ஞானத்தைப் பற்றியோ சிந்தனையைப் பற்றியோ கவலையில்லை. அவனது வணக்கம் அவனுடைய அவயவங்களைப் பொறுத்த ஒன்று. தொழுகை, மக்கா யாத்திரை முதலியவற்றிலேயே அவன் லயித்தி ருப்பான். இத்தகைய தன்மையுடையவன் மனைவி மக்களுக்காக உழைத்துச் சம்பாதிப்பது, அவன் செய்யும் இறை வணக்கத்தை விடச் சிறந்த காரியம்.

இயற்கையமைப்பாலோ, பயிற்சியாலோ, நற்பண்பு களைப் பெற்ற ஒருவன் மர்ம விஷயங்கள் குறித்து அறியலாம்; ஞானோதயம் சம்பந்தமாக ஆராயலாம்.

இவற்றையே குறிக்கோளாகக் கொண்டவன் திருமணம் செய்து கொள்ள வேண்டியதில்லை! அவன் ஈடுபட்டிருக்கும் காரியம் ஒன்றே அவனைப் பண்புள்ளவனாக்குவதற்குப் போதும்! மனைவி மக்களுக்காகச் சம்பாதிப்பதை விட அறிவை வளர்த்துக் கொள்வது இவனுக்குப் பெரும் சிறப்பை அளிக்கத் தகுந்தது. ஏனெனில், இதில் விளையும் நற்பயன்கள் முந்தியதில் விளையும் நற்பயன்களை விட அதிகம். அறிவொளியால் மாந்தர் சமூகமே பயனடைய முடியும்.

இவைதான் திருமணத்தின் பயன்கள், இவற்றின் காரணமாகவே திருமணம் வலியுறுத்தப்படுகிறது; சிறப்பானது எனக் குறிப்பிடப்படுகிறது.

# விளையும் விபரீதங்கள்

திருமணத்தினால், குறிப்பாக மூன்று விபரீதங்கள் விளைகின்றன. திருமணத்தால் நல்ல உணவைத் தேடியடையும் காரியத்தில் சிரமம் தோன்றுகிறது. இது மகத்தான விபரீதம். எல்லாராலும் 'ஹலாலா'ன உணவைத் தேடியடைந்து விட முடியாது. குறிப்பாக வாழ்க்கையின் துன்பப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவனுக்கு அது மிகவும் சிரமமான காரியம்.

திருமணத்தின் காரணமாக ஒரு மனிதனுக்குத் தன் வருவாயை விரிவுபடுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது. இது அவ்வளவு எளிதல்ல. எனவே அவன் குறுக்கு வழியிலேனும் தன் வருவாயை விரிவுபடுத்த ஆரம்பிக்கிறான். இதனால் அவன் தன் மனைவி மக்களோடு படுகுழியில் விழுகிறான். மார்க்கத்தில் அனுமதிக்கப்படாத உணவை உட்கொண்டே தீரவேண்டிய நிர்ப்பந்த நிலை அவர்களுக்கு ஏற்படுகிறது.

இப்படிப் பார்க்கும் போது தனி மனிதன், மணம் முடித்துக் கொண்டவனை விட மேலானவன். ஏனெனில், தனி மனிதனுக்கு இது போன்ற விபரீத நிலை அதிகமாக ஏற்படுவதில்லை. தன்தேவையை முடித்துக் கொள்ளும் அளவிற்கு நல்ல உணவைப் பெறுவது அவனுக்கு அப்படி

ஒன்றும் சிரமமான காரியமல்ல. திருமணம் செய்து கொண்டவன் பெரும்பாலும் தீய காரியங்களில் பிரவேசிக்கிறான்; மனைவியின் விருப்பத்திற்குப் பொம்மையாக ஆடுகிறான்; மறுமையை இம்மைக்குப் பதிலாக பேரம் பேசுகிறான்.

சில நூல்கள் விவரிக்கின்றன;

மறுமையில் மனிதன் இறைவனுக்கெதிரில் பணிந்து நிற்பான். அவன் செய்த நன்மைகளும் தீமைகளும் எடை போடப்படும். அவனுடைய நன்மைகள் மலையைப் போன்று குவிந்து கிடக்கும். வானவர்கள் அவனை விசாரணை செய்வார்கள். தன் குடும்பத்தை அவன் எப்படி நடத்தினான் என்பது குறித்துக் கேட்பார்கள். ''நீ எந்த வழியில் பொருளீட்டினாய்?'' என்று வினவுவார்கள். அவனால் திருப்திகரமாகப் பதில் அளிக்க முடியாது. எனவே அவனது நன்மைக் குவியல் படிப்படியாகக் குறைந்து வரும். கடைசியாக அவனது நன்மைகளில் ஒன்று கூட மீதியிருக்காது.

கட்டளை பிறக்கும்: ''வானவர்களே! இவனை இழுத்துச் செல்லுங்கள். இவன் நன்மைகளை இவனது மனைவியும் மக்களும் தின்று விட்டார்கள்...''

வேறு சில நூல்கள் பேசுகின்றன.

மனைவியாலும் மக்களாலுமே மனிதனுக்கு மறுமையில் பல துன்பங்கள் குறுக்கிடுகின்றன. ''இறைவனே! எங்களுக்கு ஒன்றும் தெரியாது. அவரையே கேட்டுப் பார். கூடாத, 'ஹராமா'ன உணவை அவர்தாம் எங்களுக்குப் புகட்டினார். எங்களுக்கு ஒன்றுமே தெரியாது'' என்பார்களாம் மனைவியும் மக்களும்!



சில அறிஞர்கள் கூறினார்கள்: ''ஒரு மனிதனுக்கு இறைவன் துன்பமளிக்க விரும்பினால் அவன் தலையில் குடும்பப் பொறுப்பைச் சுமத்தி விடுவான்!'

அண்ணலவர்கள் அருளினார்கள்: ''தன் மனைவியைப் பற்றி அறியாததால் ஏற்பட்ட தீமை தான் ஒரு மனிதனுக்கு மிகவும் கொடியது!''

இது பொதுவாக எங்கும் காணப்படும் அபாயம். இந்த அபாயத்திலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் அபூர்வம். ஆனால் சிலருக்கு அனந்தரச் சொத்து இருக்கலாம். அல்லது தூய வருமானத்திற்கான வழி ஏதும் இருக்கலாம். இத்தகையவர்கள் இந்த ஆபத்திலிருந்து தப்ப முடியும். இவர்கள் தங்களையும் தங்கள் குடும்பத்தையும் அந்த வருமானத்தின் உதவியால் பேணிக் காப்பது சாத்தியமே. வேறு சிலர் தொழில் செய்து சம்பாதிக்கிறார்கள். விறகு வெட்டுவது, வேட்டையாடுவது, மீன் பிடிப்பது முதலியவற்றால் தூய உணவைப் பெறலாம். இன்னும் சிலர் அரசாங்கத்தோடு தொடர்பு கொள்ளாமல் தனிப்பட்ட வியாபாரம் செய்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் மேற்குறிப்பிட்ட அபாயம் கிடையாது. ஏனெனில், சம்பாத்தியத்திற்காக இவர்கள் ஈடுபட்டிருப்பது நல்ல காரியம். இவர்கள் வருமானத்தில் பெரும்பகுதி தூய்மை மிக்கது.

இப்னு சாலிம் அவர்களிடம் யாரோ திருமணம் குறித்து வினவி விட்டார்கள்.

''சில சமயங்களில் கழுதைக்கு ஏற்படுவது போன்று கடும் காமம் உள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளலாம். மனத்தை அடக்கியாளும் ஆற்றலுடையவன் மணம் முடிக்காதிருப்பதே நல்லது!'' என்று விடை வந்தது.

**இரண்டாம் விபரீதம்.** மனைவி மக்களின் உரிமைகளை நல்ல முறையில் அளிப்பதற்கு வசதி ஏற்படாமல் போகலாம். அவர்களிடம் பொறுமையோடு நடந்து கொள்வது சாத்தியமில்லாமலும் போகலாம். அவர்கள் மத்தியில் உருவாகும் குடும்பச் சிக்கலைச் சமாளிப்பது மிகவும் சிரமம். இது இரண்டாம் விபரீதம். ஆனால் இது முந்தியதை விடக் கொடியதல்ல. ஏனெனில், இவற்றில் வெற்றி காண்பது, தூய வருமானத்தைப் பெறுவதைக் காட்டிலும் இலேசான ஒன்று. மனைவி மக்களுடன் நல்லவிதமாக நடந்து கொள்வதும் அவர்களுக்கு அவர்களின் உரிமையைப் பூரணமாகக் கொடுப்பதும் தூய உணவிற்கான சம்பாத்தியத்தை விட இலகுவான காரியங்களே.

ஆனால் இதிலும் அபாயம் உண்டு. அவன் பொறுப்புள்ளவன். அவனது பொறுப்பின் கீழ் மனைவியும் மக்களும் இருக்கிறார்கள். அவனது பொறுப்பில் விடப்பட்டவர்கள் சம்பந்தமாக மறுமையில் அவன் அவசியம் விசாரணை செய்யப்படுவான்.

திருநபியவர்கள் கூறினார்கள்: ''குடும்பத்தைக் கவனிக்காதவன் கொடிய குற்றம் புரிந்தவன்''

''குடும்பப் பொறுப்பிலிருந்து விலகியோடுபவன் உரிமையாளனின் பிடியிலிருந்து தப்பியோடும் அடிமையைப் போன்றவன். இவர்கள் மீண்டும் தங்கள் காரியங்களில் ஈடுபடும் வரை, இவர்கள் செய்யும் இறைவணக்கம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது; இவர்கள் பிடிக்கும் நோன்பு அங்கீகரிக்கப்படாது' என்று சில நூல்கள் குறிப்பிடுகின்றன. 'குடும்ப நிர்வாகத்தில் குறை வைப்பவன் தப்பியோடும் அடிமையைப் போன்றவன்' என்பது இதிலிருந்து தெரிகிறது.



இறைவன் கூறுகிறான்: ''உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து காப்பாற்றுங்கள்''. நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வது போல் நம் மனைவி மக்களையும் பாதுகாக்க வேண்டும் என்று இறைவன் கட்டளையிடுகிறான். ஆனால் தன்னை மட்டிலுமே பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலையில் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள்.

இவர்கள் கல்யாணம் செய்து கொண்டால் உருவாகும் நிலைமையைப் பற்றி விவரிக்க வேண்டியதில்லை. தங்கள் துன்பமும் சிரமமும் போதாதென்று துணை வேறு. தங்களோடு இன்னோர் உயிரும் சேர்ந்து கொள்கிறது. மனிதன் மனம் தீமையில் இன்பம் காணும் சுபாவமுடையது. அதே மனம் அவனுக்கு வரும் மனைவியிடமும் உண்டு. இவ்விரண்டு உள்ளங்களும் தீமையைப் பார்த்து ஆர்வம் கொண்டால் நிலைமை என்னவாகும் தெரியுமா? தீய செயல்கள் தங்கு தடையின்றி உருப்பெற ஆரம்பித்து விடும்!

இதனால்தான் சிலர் கல்யாணத்தை வெறுத்தார்கள். ''என்னை மட்டிலுமே சரியாகப் பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலையில் நான் இருக்கிறேன். இந்த நிலையில் என்னோடு இன்னோர் ஆத்மாவையும் எப்படி இணைத்துக் கொள்ள முடியும்?'' என்றார்கள். 'தன் வாலில் விளக்கு மாற்றைக் கட்டிக் கொண்ட எலி தன் வளையில் நுழைய முடியாது' என்று முதுமொழி பேசுகிறது.

துறவி இப்ராஹீம் பின் அத்ஹம் அவர்கள் மணம் முடித்துக் கொள்ளவில்லை. ''எந்தப் பெண்ணையும் நான் கவர விரும்பவில்லை. பெண்ணின்பால் எனக்கு எத்தகைய தேவையுமில்லை'' என்று அவர்கள் கூறுகிறார்கள். நல்ல

முறையில் மனைவியை நடத்த வேண்டி வரும். அவளுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும். அவளுக்கு இன்பமூட்ட வேண்டும். இவற்றில் லயித்துப் பொழுது போக்கும் அளவிற்குத் தங்களிடம் சக்தியில்லை என்று துறவியவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இதே காரணத்தால் தான் பஷர் அவர்கள் திருமணத்தை விட்டு விலகியோடினார்கள். ''இறைவன் கூறுகிறான், 'மனைவிக்குச் சில கடமைகள் இருப்பது போல அவர்களுக்குச் சில உரிமைகளும் இருக்கின்றன!' என்று. இந்த இறை கருத்துத்தான் என் திருமணத்திற்குத் தடையாக நிற்கிறது!'' என விளக்கமும் தந்தார்கள்.

இதுவும் பொதுவானதொரு ஆபத்துதான். இது எல்லோரையுமே சூழ்ந்திருக்கிறது. பெண்களின் பழக்க வழக்கங்களையும் குண வேறுபாடுகளையும் நன்காராய்ந் தறிந்த அறிவாளியால்தான் இந்த ஆபத்திலிருந்து தப்ப முடியும். அதே சமயம் அவனிடம் நற்குணம் குடி கொண் டிருக்க வேண்டும். மனைவியின் சுடு சொற்களை அவன் பொறுத்துக் கெள்ள வேண்டும். அவள் காரியங்களை முடித்துக் கொடுக்கும் விஷயத்தில் ஆர்வம் கொண்டிருக்க வேண்டும். மனைவி சில சமயங்களில் தவறுகள் செய்வதுண்டு; அவற்றைப் பிரமாதப் படுத்தக் கூடாது. அறிவொளியின் உதவியால் அவள் குணத்தைப் பண்படுத்த வேண்டும். இத்தகைய மனப் பக்குவம் அவனுக்கு அவசியம். இவன் திருமணம் செய்து கொண்டால் மேற்குறிப்பிட்ட ஆபத்து ஏற்பட முடியாது.

அறியாமை, ஒழுங்கற்ற உரையாடல், தீக்குணம், அநீதி, பேராசை – இவைதாம் மக்களின் மத்தியில் அதிகமாக உலாவுகின்றன. மக்கட் திரளில் பெரும்பாலோர் இத்தகைய



கொடிய குணம் படைத்தவர்களே. இத்தகையவர்கள் மணம் முடிக்கும் போது அவர்களின் தீய உணர்ச்சி வலுவேறிப் போய்விடும்.

எனவே இதுபோன்ற இக்கட்டான நிலையில் தனி மனிதனாயிருப்பதே நல்லது – இதில் சந்தேகமேயில்லை.

**மூன்றாம் விபரீதம்:** இது முந்திய இரு விபரீதங்களுக்கும் கீழுள்ளது. மனைவியும் மக்களும் ஒரு மனிதனின் இறை வணக்கத்திற்குக் குறுக்கே நிற்கிறார்கள். அவர்களால் அவன் வணக்கத்திற்குத் தடை ஏற்படுகிறது. உலக இன்பங்களில் அதிகக் கவனம் செலுத்துவதற்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் பெரும் முயற்சி எடுக்க வேண்டி வருகிறது. மக்களுக்காக, அவர்களின் நல்வாழ்வுக்காக அவன் பொருள் திரட்ட விரும்புகிறான். இதனால் அவன் கவனம் இறை வணக்கத்திலிருந்து திருப்பப் படுகிறது. இறை வணக்கத்திலிருந்து ஒரு மனிதனின் கவனத்தை வேறு திக்கில் திருப்பும் எதுவும் அவனுக்கு நற்பயனைக் கொடுக்கவல்லதல்ல!

இந்த இடத்தில் மனைவி மக்களால், ஒரு மனிதன் மார்க்கத்தில் அனுமதிக்கப்படாததைச் செய்ய வேண்டி வருகிறது என்பதை நான் குறிப்பிட விரும்பவில்லை. அதனை முன்னரே முதல் விபரீதத்தின் விளக்கத்தில் கூறிவிட்டேன். அவன் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதைத்தான் செய்கிறான், என்றாலும் அதனால் இறை வணக்கம் தடைபட்டுப் போய்விடுகிறதே!

மானிடன் தன் மனைவியுடன் உரையாடுவதிலும் அவளுடன் சல்லாபம் புரிவதிலும் இன்பம் காண்கிறான். இதுபோன்ற பல வேலைகள் திருமணத்தின் காரணமாக

அவனுக்கு ஏற்பட்டுவிடுகின்றன. இவற்றில் அவனுள்ளம் மூழ்கிக் கிடக்கின்றது. இரவும் பகலும் இன்ப நுகர்ச்சியில் கழிகின்றன. இதனால் மறுமையை எண்ணிப் பார்ப்பதற்குக் கூட அவனுக்கு அவகாசம் கிடைப்பதில்லை; மறுமைக்கென்று எந்தக் காரியத்தையும் அவனால் செய்ய முடிவதில்லை.

''பெண்களின் தொடைகளில் ஒரு மனிதன் பழக்கப் பட்டு விட்டால் அவனிடமிருந்து எத்தகைய நற்கிரியையும் உருவாக முடியாது'' என்று துறவி இப்றாஹீம் பின் அத்ஹம் அவர்கள் கூறினார்கள்.

அபூசுலைமான் கூறினார்கள்: ''கல்யாணம் பண்ணிக் கொண்டவன் உலக ஆசாபாசத்தில் பற்றுதல் கொண்டவன்!''

திருமணத்தால் உண்டாகும் நன்மைகளையும் விளையும் விபரீதங்களையும் விவரித்து விட்டேன். ஒரு மனிதனின் சூழ்நிலையை அறியாமல் அவனுக்குத் திருமணம் அவசியம் என்றோ, அவசியமில்லை என்றோ கூறிவிட முடியாது. நன்மைகளையும் விபரீதங்களையும் எடைபோட்டுப் பார்க்க வேண்டியது முதல் காரியம். அதற்குப் பிறகு தான் திருமணம் பற்றிய தீர்ப்பு.

ஒரு மனிதனுக்கு மேற்குறிப்பிட்ட விபரீதங்கள் எதுவும் ஏற்படுவது சாத்தியமில்லாதிருக்கலாம். அவன் திரண்ட செல்வத்துக்கு அதிபதி; தவறான வழியில் சம்பாதிக்க வேண்டிய தேவையில்லை. இதனால் முதல் விபரீதம் மறைந்து போகிறது. அவன் நல்ல குணவான்; மார்க்கப் பற்றுள்ளவன்; எந்த இன்பமும் தன் கவனத்தை இறை வணக்கத்திலிருந்து திருப்ப முடியாத படி அவன் மதப்பற்றுள்ளவன். இதனால் மூன்றாம் விபரீதம்



பிறக்கிறது. அவன் இளைஞன். காமத்தைத் தணிக்க வேண்டிய தேவை அவனுக்கு அடிக்கடி ஏற்படுகிறது. குடும்பத்தை மகிழ்ச்சிகரமாக நடத்தும் சக்தியுள்ளவன் . இதனால் இரண்டாம் விபரீதம் இல்லாமற் போகிறது. இந்தத் தன்மைகள் அனைத்தும் ஒருவனிடம் இருந்தால் அவன் பாக்கியசாலி; திருமணம் செய்து கொள்வது அவனுக்குச் சிறப்பளிக்கும் ஒன்று. இதில் சந்ததியை உண்டாக்கும் முயற்சியும் உண்டு என்பதை மறுக்க முடியாது. இது திருமணத்தால் உண்டாகும் நன்மைகளில் ஒன்றல்லவா?

மற்றொரு மனிதன் இருக்கிறான். அவன் நேர் எதிரானவன். அவன் திருமணம் செய்து கொண்டால் மேற் குறிப்பிட்ட நன்மைகளில் எதுவும் உருப்பெற முடியாது. இத்தகைய நிலையில் அவன் இருக்கிறான். அவன் திருமண எண்ணத்தைக் கைவிடுவது சிறப்பான ஒரு காரியம்.

மற்றொருவன் இவ்விருவருக்குமிடையில் இருக் கிறான். அவன் திருமணம் செய்து கொண்டால் சில நன்மைகள் உருவாக முடியும். சில விபரீதங்களும் விளைய முடியும். இது அவன் நிலைமை. இவன் நிதானத்தோடு செயலாற்ற வேண்டும். நன்கு ஆராய வேண்டும். தன் திருமணத்தில் அவன் தன் கவனம் முழுவதையும் செலுத்திப் பார்க்க வேண்டும். தான் திருமணம் செய்து கொண்டால் நன்மைகள், நற்பயன்கள் அதிகமாக உருப்பெற முடியுமா, அல்லது விபரீதங்கள் அதிகமாக விளையுமா என்று அவன் சிந்திக்க வேண்டும். நன்மைகள் அதிகப்பட்டால் திருமணம்; விபரீதங்கள் அதிகப்பட்டால் பிரம்மச் சரியம்!

இப்போது சற்று விரிவாக ஆராய்வோம். திருமணத்தில் உருவாகும் நற்பயன்களில் முக்கியமானவை காமத்தைத் தணிப்பது; குழந்தை பெறுவது. திருமணத்தின் விபரீதங்களில் முக்கியமானவை. தீய வருமானம்... தீய சம்பாத்தியம்; இறை வணக்கத்திற்கு ஏற்படும் தடை. இவற்றை எடை போட்டுப் பார்ப்போம். ஒரு மனிதன் தன் காமத்தைத் தணித்துக் கொள்ள வழியின்றி அவஸ்தைப் படுகிறான். அவன் மணம் முடித்தால் குழந்தை உருப்பெற முடியும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை. அவன் காமமும் தணியும். அதே சமயம் அவனுக்குத் திருமணத்தின் காரணமாகத் தீய வழியில் சம்பாதிக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது; இறை வணக்கத்திற்குக் குறுக்கிடும் உண்டாகிறது. இரண்டு நன்மைகளுக்கு எதிரில் இரண்டு விபரீதங்கள் ! இவன் திருமணத்தை மறப்பதுதான் நல்லது. ஏனெனில் இறைவணக்கத்தில் குறுக்கிடும் எந்தக் காரியத்திலும் நன்மையில்லை; குறுக்கு வழியில் சம்பாதிப்பதும் குற்றம்தான்.

சந்ததியை உண்டாக்க முனைவது நல்லதுதான்: என்றாலும் அது சந்தேகத்திற்கிடமான ஒன்று. திருமணம் செய்துவிட்டால் குழந்தை பிறந்து விடும் எனக் கூறிவிட முடியாது. ஆனால் திருமணம் செய்து கொண்டால் விபரீதம் ஏற்படுவது திண்ணம். இந்த நிலையில் ஒரு மனிதன் இருந்தால், அவன் சந்ததி பெறும் எண்ணத்தை விட்டு விட்டுத் தன்னையும் தன் வாழ்க்கையையும் பேணிக் காப்பதில் கவனம் செலுத்த வேண்டும். இது குழந்தைக்கான முயற்சியை விட மேலானது. மார்க்க வரம்புகள் அவசிய மானவை. அவை தகர்த்தெறியப்படும் போது மறுமை வாழ்க்கையே தகர்த்தெறியப்படுகிறது. இந்த நஷ்டத்தை ஈடு செய்ய உலகில் வேறு எந்த நன்மையும் கிடையாது. குழந்தை பிறந்து விடுவதால் மட்டும் இதற்கு ஈடு கிடைத்து விடாது. இந்த நஷ்டத்திலிருந்து அவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். திருமணத்தை விட இது மேலான காரியம்!



இங்கு ஊன்றிக் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. ஒரு மனிதன் தன் காமத்தைத் தணித்துக் கொள்ள வழியின்றி அவஸ்தைப்படுகின்றான். திருமணம் செய்து கொண்டால் சம்பாத்தியத்திற்காகக் குறுக்கு வழியில் இறங்க நேர்ந்து விடுமோ என்று அஞ்சுகிறான். அதே சமயத்தில் திருமணம் செய்யாதிருந்தால் மாற்றாள் புணர்ச்சியில் ஈடுபட நேர்ந்து விடுமோ என்று கவலைப்படுகிறான். திருமணம் செய்தாலும் விபரீதம்; செய்யாவிட்டாலும் விபரீதம்! அவன் என்ன செய்ய வேண்டும்?

இவ்விரு விபரீதங்களையும் அவன் எடைபோட்டுப் பார்க்க வேண்டும். இவற்றில் கொடியது எது, இலேசானது எது என்று ஆராய வேண்டும். இது அவன் செய்ய வேண்டிய முதல் காரியம். அதன்பிறகு அவன் இலேசானதை மேற்கொள்ள வேண்டும். திருமணம் செய்து கொள்வதுதான் அவனுக்கு நல்லது. ஏனெனில் திருமணத்தால் அவனுக்கு ஏற்படும் விளைவு மாற்றாள் புணர்ச்சியை விடக் கொடியதல்ல.

மேற் குறிப்பிட்ட மனிதன், தன்னால் மாற்றாள் புணர்ச்சியைத் தடுக்க முடியும் என உறுதி பூணுவதாக வைத்துக் கொள்வோம்; அவனால் தவறான பார்வையைத் தடை செய்ய முடியவில்லை என்றும் வைத்துக் கொள்வோம். அவன் மணம் முடிக்கக் கூடாது. ஏனென்றால்

கெட்ட பார்வை மார்க்கத்தில் அனுமதிக்கப்படாத ஒரு செயல். இதே போன்றதுதான் குறுக்கு வழிச் சம்பாத்தியமும். ஆனால் சம்பாத்தியம் என்பது நிரந்தரச் செயல். அது தொடர்ந்து நடைபெற்று வரக் கூடியது. கெட்ட பார்வை இத்தகையதல்ல. அபூர்வமாகத் தான் தவறான பார்வை உருவாகிறது. தவறான பார்வை என்பது கண்கள் புரியும் குற்றம். இப்பார்வை அபத்தின் குற்றத்திற்கு அடிகோலாமலிருக்க வேண்டும். அப்படியிருந்தால் கண்ணின் குற்றம் மன்னிக்கப்படலாம்.

இதிலிருந்து தவறான பார்வை என்பது தவறான சம்பாத்தியத்தை விடக் கொடியதல்ல என்பது தெளிவாகிறது. இவற்றில் ஒன்று நிரந்தரச் செயல், மற்றொன்று அபூர்வச் செயல். எனவே, நிரந்தரக் குற்றத்தைத் தவிர்ப்பதற்காக அபூர்வமாகத் தோன்றும் குற்றத்தில் ஈடுபடலாம்...

இப்படித்தான் எடைபோட்டுப் பார்க்க வேண்டும். இவற்றை ஒரு மனிதன் சரியாகப் புரிந்து கொண்டு விட்டால் மேற்குறிப்பிட்ட அறிஞர்களின் கருத்துக்கள் குறித்து அவனுக்கு எவ்விதக் குழப்பமும் ஏற்படாது. சிலர் திருமணத்தை வலியுறுத்த, வேறு சிலர் அதனை மறுப்பது ஏன் என்று குழம்ப மாட்டான். இது சூழ்நிலையைப் பொறுத்த விஷயம். அறிஞர்கள் ஒவ்வொருவரும் சூழ்நிலையை அனுசரித்தே கூறியிருக்கிறார்கள். அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் ஒவ்வொன்றும் அவர்களின் சூழ்நிலையை ஒட்டியே உருவாகியிருக்கின்றன.

நீ கேட்கலாம்:



''மணம் முடிப்பதால் தன்னைப் பொறுத்த மட்டில் எத்தகைய விபரீதமும் ஏற்பட முடியாது என்று ஒருவன் நம்புவதாக வைத்துக் கொள்வோம். இத்தகைய சூழ்நிலையுள்ளவன் திருமணம் செய்து கொள்ளலாம் என்று கூறினீர்கள். அவன் மணத்தை விடுத்து இறைவணக்கத்தில் மூழ்கியிருக்கலாமே! திருமணம், இறைவணக்கம் ஆகிய இரண்டில் அவனுக்குச் சிறப்பை அளிப்பது எது?''

பதில் தருகிறேன். இவ்விரு காரியங்களையுமே அவனால் ஒரே சமயத்தில் செய்ய முடியும். ஏனெனில் திருமணம் என்பது தம்பதிகளுக்கிடையில் உருவாகும் இணைப்பு. இந்த இணைப்பு இறை வணக்கத்திற்கு எந்த வகையிலும் தடையல்ல. என்றாலும், திருமணம் புரிந்து கொண்டவனுக்குத் தூய உணவிற்கென்று கடும் முயற்சி எடுக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. சம்பாத்திய முயற்சியிலேயே தன் நேரத்தில் பெரும் பகுதியைக் கழிக்க வேண்டிய அவசியம் அவனுக்கு உண்டாகிறது. இறை வணக்கத்தில் நன்கு ஈடுபடுவதற்கு வேண்டிய அவகாசம் கிடைப்பது அரிது. எனவே இந்த முறையில் பார்த்தால் திருமணம் என்பது இறைவணக்கத்திற்குத் தடைதான்.

ஆனால் பெரு முயற்சி எடுத்துச் சம்பாதிக்க வேண்டிய தேவையில்லாத ஒருவன் மணம் முடித்துக் கொண்டால் அவனுக்கு இந்த ஆபத்து ஏற்படாது. இறை வணக்கத்திலும் அவனால் நல்ல முறையில் பங்கு கொள்ள முடியும். எனவே, அவன் திருமணம் செய்து கொள்வது சிறப்பான காரியமே. ஏனெனில், குடும்பப் பொறுப்பை மனைவியிடம் விட்டு விட்டு அவன் இரவும் பகலும் இறை பணியில் ஈடுபட முடியும்.

ஒருவன் சம்பாத்திய முயற்சியிலேயே தன் பொழுது முழுவதையும் செலவிடுவதாக வைத்துக் கொள்வோம். ஐங்காலத் தொழுகையை அவன் எப்படியோ நிறைவேற்றிக் கொள்கிறான். உண்பதற்கும் மலஜல உபாதைகளுக்கும் சிறிது நேரத்தைச் செலவிடுகிறான். மற்ற எந்தக் காரியத்தைச் செய்வதற்கும் அவனுக்கு நேரம் கிடைப்பதில்லை. பல தரப்பட்ட வணக்கங்களின் உதவியால் இறையண்மையைப் பெற அவன் விரும்பினால், மணம் முடித்துக் கொள்ளு வதுதான் நல்லது.

திருமணத்தில் பலதரப்பட்ட வணக்கங்கள் உருவா கின்றன. சம்பாதிப்பது, மனைவி மக்களைக் காப்பாற்றுவது, சந்ததியைப் பெருக்க முயற்சி செய்வது, மனைவியின் குண வேறுபாடுகளைப் பொறுத்துக் கொள்வது – இவற்றில் பல்வேறு வணக்கங்கள் உருப்பெறுகின்றன. இவற்றின் சிறப்பு மற்ற வணக்கங்களின் சிறப்பை விட எந்த வகையிலும் குறைந்ததல்ல!

ஆனால், ஒருவன் அறிவை வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறான்; சிந்தித்தறியும் வேலையை மேற் கொண்டிருக்கிறான். இதுபோன்ற தூய காரியங்களை ஒரு மனிதன் செய்து வருவதாக வைத்துக் கொள். அவன் திருமணத்தை மறப்பதுதான் நல்லது. ஏனெனில், திரு மணத்தால் பொன்னான அவன் பணி சீர்கேடடையலாம்.

''திருமணத்திற்கு மார்க்கத்தில் இத்தனை சிறப் பிருந்தும் ஈஸா நபியவர்கள் அதனை ஏன் வெறுத்தார்கள்? திருமணத்தை வெறுத்து இறைவழி நடப்பது சிறப்பான காரியமாயிருக்கும் போது நமது திருநபியவர்கள் எதற்காகப் பல தடவைகள் மணம் முடித்துக் கொண்டார்கள்?'' என்று நீ கேட்கலாம்.



கவனித்துப்படி. திருமணம் சிறப்பான காரியம். அதே போன்று தான் இறைவணக்கமும். இவ்விரண்டும் சிறப்பம்சம் பொருந்தியவை. வசதியுள்ளவர்கள் இவ் விரண்டையுமே செயல்படுத்துவதுதான் சிறப்பான காரியம். இது சிலருக்குச் சாத்தியமில்லை. திருமணம் செய்து கொண்டால் அவர்களால் இறைவணக்கத்தில் ஈடுபட முடியாது. அத்தகையவர்கள் இறை வணக்கத்திற்காகத் திருமணத்தை வெறுத்தார்கள்.

ஆனால், நமது திருநபியவர்கள் தனிச்சிறப் புடையவர்கள்; இறைவணக்கத்திலிருந்து அவர்கள் உள்ளத்தை வேறு திசையில் எந்த இன்பமும் திருப்பி விடாது. அத்துணை ஆன்மீக பலம் அவர்களுக்கு உண்டு. எனவே அவர்கள் பலதார மணம் புரிந்தார்கள்; முறைப்படி இறைவணக்கத்தில் ஈடுபட்டார்கள். அவர்களுக்கு ஒரே சமயத்தில் ஒன்பது மனைவிகள் இருந்தார்கள். அதே நேரத்தில் அவர்கள் இறை வழியில் மூழ்கியிருந்தார்கள். அவர்கள் மேலான அந்தஸ்துடையவர்கள். அவர்களின் உள்ளம் நன்கு பண்பட்டது. அது இறைவனோடு எப்பொழுதும் தொடர்பு கொண்டிருக்கும். அந்த உள்ளத்தை வேறு வழியில் திருப்பும் ஆற்றல் மண்ணகத்திலுள்ள எந்தப் பொருளுக்கும் கிடையாது.

ஒரே விரிப்பில் அவர்கள் தங்கள் மனைவியுடன் இருக்கும் போது இறைவனின் 'வஹீ' (செய்தியறிவிப்பு) அருளப்பட்டு வந்தது! எத்துணைப் பெரிய அந்தஸ்து! வேறு யாருக்கு, எப்போது இத்தகைய அந்தஸ்து அளிக்கப்பட்டது? அவர்கள் எங்கே, நாம் எங்கே?

ஈஸா நபியவர்கள் மணம் முடித்துக் கொள்ளவில்லை தான். இதற்குக் காரணமுண்டு. மனத்தை அடக்கியாள்வதில் அவர்கள் வெற்றி கண்டார்கள். ''மணம் முடித்தால் மனைவி மக்கள் குறித்துக் கவனம் செலுத்துவதற்கே நேரம் சரியா யிருக்கும். சம்பாத்திய முயற்சியில் தீவிரமாக ஈடுபட வேண்டி வரும். இறை வணக்கத்தை விட இவற்றை மேலானவை எனக் கொள்ள நேர்ந்து விடும்!'' என்று அவர்கள் எண்ணியிருக்கலாம்.

அப்படியும் இல்லாவிடில், ''மண வாழ்க்கைக் கிடையில் இறைவணக்கம் என்பது சாத்தியமில்லை'' என்று அவர்கள் கருதியிருக்க வேண்டும். இத்தகைய சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். எனவே அவர்கள் திருமணத்தை வெறுத்து இறைவணக்கத்தில் ஈடுபட் டார்கள்.

திருத்தூதர் அனைவரும் சூழ்நிலையின் மர்மங்களை அறிந்தவர்கள்; சட்ட திட்டங்கள் யாவற்றையும் தெளிவுறத் தெரிந்தவர்கள்; திருமணத்தினால் உண்டாகும் விபரீதங் களையும் நற்பயன்களையும் சந்தேகத்திற்கிடமின்றி உணர்ந்தவர்கள். எனவே அவர்கள் எக்காரணம் கொண்டும் சிறப்பான காரியத்தை விடுத்து மற்ற எதையும் மேற்கொள்ள மாட்டார்கள். அவர்கள் மேற்கொண்ட ஒவ்வொன்றையும் உயர்ந்தது என்று தான் நாம் கொள்ள வேண்டும்.

இறைவனே எல்லாம் அறிந்தவன்.

# இரண்டாம் பாடம்

திருமணத்தைச் சட்டப்பூர்வமானதாக ஆக்குவதற்குச் சில நிபந்தனைகள் இருக்கின்றன. திருமணத்தின் போது அந்த நிபந்தனைகள் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் அது 'ஹலாலான' கல்யாணமாகும்.

மணமகளுக்கு நெருங்கிய உறவினனிடம் அனுமதி பெற வேண்டும். மணப்பந்தம் உருவாவதற்கு இது முதல் நிபந்தனை. ஒரு பெண்ணுக்கு உறவினர் யாருமேயில்லை என்று வைத்துக் கொள்வோம்; இந்த இடத்தில் ஊருக்கு அதிபதியான அரசனிடம் அனுமதி கோர வேண்டும். அரசன் எனப்படுபவன் தன் பிரஜைகளுக்கு உரிமையாளனல்லவா?

மணமகள் பருவ வயதை அடைந்திருந்தால் - கன்னி யானாலும் சரி, விதவையானாலும் சரி - அவள் இணக் கத்தைப் பெற வேண்டும். இது இரண்டாவது நிபந்தனை.

மணமக்கள், உறவினர் ஆகியவர்களைத் தவிர்த்து சட்டமும் நேர்மையும் தெரிந்த இருவர் வைபவத்தின் போது ஆஜராயிருக்க வேண்டும். இது மூன்றாவது நிபந்தனை. மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் இரண்டு பெண்களை சாட்சிகளாக்கிக் கொள்ளலாம்.

தான் மணமகளை மணம் முடித்துக் கொள்வது குறித்து மணமகன் சபையில் கூற வேண்டும்; அல்லது பெண்ணின் உரிமையாளன், அவளை மணமகனுக்கு விவாகம் செய்து வைப்பதாகக் கூற வேண்டும். இந்தக் காரியத்தை மணமகன், பெண்ணின் உரிமையாளன் ஆகிய இருவரும் சேர்ந்தே செய்யலாம். இது கடைசி நிபந்தனை.

இந்த நிபந்தனைகள் அனைத்தும் உருவாகிவிட்டால் அந்தத் திருமணம் சட்டப்பூர்வமாகிவிடும்.

திருமணத்திற்கு முன்னால் கவனிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் சில இருக்கின்றன. கணவனை இழந்த பெண் ஒருத்தி 'இத்தா'விலிருப்பதாக வைத்துக் கொள்வோம். அவள் 'இத்தா'விலிருக்கும் போது, அவளின் உறவினரிடம் அவளின் திருமணப் பேச்சை ஆரம்பிக்கக் கூடாது. 'இத்தா'வின் காலம் முடிந்த பிறகுதான் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்.

ஒரு பெண்ணின் திருமணம் குறித்து உனக்கு முன்னால் மற்றவர் பேச்சை ஆரம்பித்து விட்டால், அதில் நீ பிரவேசிக்கக் கூடாது. இது மார்க்கத்தில் தடை செய்யப் பட்டிருக்கிறது.

மணம் முடித்து வைப்பவர், விவாகத்திற்கு முன்னர் பிரத்தியோகமான பிரார்த்தனையைச் செய்ய வேண்டும். விவாகம் செய்து வைக்கும் போது இறைவனின் புகழையும் இணைத்துக் கொள்ள வேண்டும். மணம் முடித்துக் கொடுப்பவர் இவ்வாறு கூற வேண்டும்; ''புகழனைத்தும் இறைவனுக்கே உரித்தாகட்டும்; திரு நபியவர்களுக்குச் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும். உனக்கு.... என்ற பெயருடைய என் மகளை விவாகம் செய்து வைக்கிறேன்!''



''புகழனைத்தும் இறைவனுக்கே. அவனது அன்பும் ஆசியும் அண்ணல் நபியவர்களுக்கு உண்டாகட்டும். இந்தத் திருமணத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்'' என்று மணமகன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு பிரகடனப்படுத்துவது தெளிவாகவும் எளிதாகவும் இருக்க வேண்டும்.

இறை துதியைத் திருமணப் பிரார்த்தனைக்கு முன்னால் வைத்துக் கொள்வது 'முஸ்தஹபு'.

திருமணத்திற்கு முன்னால் மணமகனின் விஷயங்களை மணமகளின் செவிக்கு எட்டுமாறு பிரஸ்தாபிக்க வேண்டும். இது அன்பு வளர்வதற்குத் துணை செய்கிறது. இதனால் தான் மணமகன் மணமகளைப் பார்ப்பது 'முஸ்தஹபு'

திருமணத்திற்குக் குறைந்தது இரண்டு சாட்சியங்களே தேவை. என்றாலும், நேர்மை தெரிந்த நல்ல மனிதர்கள் பலரையும் விசேஷத்தின் போது அழைக்க வேண்டும். இதனால் சாட்சியின் வலு பன்மடங்காகிறது.

திருமணத்தின் போது மணமகன், தான் திரு நபியவர்களின் செயல்முறையைப் பின்பற்றுவதாகவும் கெட்ட பார்வையைத் தடுக்க முயற்சி செய்வதாகவும் சந்ததியை உண்டாக்க முனைவதாகவும் எண்ணிக் கொள்ள வேண்டும். இன்பம் துய்ப்பதை மட்டுமே அவன் திருமணத்தின் நோக்கமாகக் கொள்ளக் கூடாது. இல்லையேல் அவன் விவாகம் இம்மையின் காரியங்களில் ஒன்றாகி விடும்; அதிலிருந்து எந்தப் பயனையும் அவன் மறுமையில் எதிர்பார்க்க முடியாது.

திருமணம் என்பது மறுமைக்குப் பயன்படும் காரியம் தான். ஆனால், குறிக்கோள் மாறுவதால் மறுமைக்குரிய எத்தனையோ செயல்களில் இம்மையின் துர்நாற்றம் வீசுகிறதே!

"நேர்மையான செயலில் ஆசாபாச எண்ணம் புகுந்து விட்டால் அது வீண் காரியம்!'' என்று உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்.

உலகில் பல காரியங்கள் உருவாகின்றன. அவை ஒவ் வொன்றும் இம்மைக்குப் பயன்படுவது போல் மறுமைக்கும் பயன்படுகின்றன!

பள்ளிவாசலில் மணம் முடிப்பதும் ஷவ்வால் மாதத்தில் கல்யாணத்தை நடத்துவதும் 'முஸ்தஹப்'பான காரியங்கள். ''என்னைத் திரு நபியவர்கள் ஷவ்வால் மாதத்தில் தான் மணந்து கொண்டார்கள்'' என்று அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

திருமணம் சட்டப்பூர்வமாவதற்கு மணப்பெண்ணின் விஷயத்தில் கவனிக்க வேண்டிய காரியங்கள் சில இருக் கின்றன. முதலில் திருமணத்தின் தடைகள் அனைத்தை விட்டும் அவள் தனித்திருக்க வேண்டும். மணமகளைப் பொறுத்தவரை திருமணத்திற்கு ஏற்படும் தடைகள் பத்தொன்பது. இவற்றில் ஒன்று – ஏதேனுமொன்று அவள் விஷயத்தில் காணப்பட்டால் அவளை மணம் முடித்துக் கொள்வது சட்டபடி கூடாது.

1. மணமகள் மற்றொருவனுக்கு மனைவியாய் இருக்கக் கூடாது.



2. கணவன் இறந்தாலோ, அவன் மணப்பிரிவினை செய்து கொண்டாலோ 'இத்தா'விலிருக்கும் ஒரு பெண்ணை 'இத்தா' முடிவதற்குள் விவாகம் செய்து கொள்ள முடியாது; இத்தா என்பது திருமணத்திற்கேற்படும் தடைகளில் ஒன்று. இத்தா கழிந்த பிறகு தான் திருமணப் பேச்சையே ஆரம்பிக்க வேண்டும்.

3. மார்க்கத்தில் அனுமதிக்கப்படாத வார்த்தைகளைக் கூறியதால் மதம் மாறிய பெண் ஒருத்தி, அதே நிலையில் முஸ்லிம் ஒருவனைக் கணவனாக அடைய முடியாது. அவளை மீண்டும் இஸ்லாத்தில் சேர்த்த பிறகு தான் அவளுடைய திருமணத் தடை நீங்கும்.

4. மணமகள் நெருப்பை வணங்கும் கொள்கை உள்ளவளாயிருக்கக் கூடாது. ஒரு சாரார் நெருப்பை வணங்குகிறார்கள். இவர்களை 'மஜூஸி' என்று கூறுகிறோம். மணப்பெண் 'மஜூஸி'யாயிருந்தால் அவள் ஒரு முஸ்லிமுக்கு வாழக்கைப்பட முடியாது.

5. மணப்பெண் விக்கிரக ஆராதனைக்காரியாகவோ, கூடும் - கூடாது என்னும் வேற்றுமையின்றி எல்லா வற்றையும் சுவை பார்க்கும் குணமுள்ளவளாகவோ இருக்கக் கூடாது. 'நல்வழிக்கு முரணானது' எனத் தீர்மானிக்கப்பட்ட ஒரு மதத்தைப் பின்பற்றுபவளும் இந்த இனத்தைச் சேர்ந்தவளே. இவர்களை மணம் முடிப்பது கூடாது.

6. இறை மறையான 'தவ்றாத்'தையோ, 'இன்ஜீலை'யோ ஒருத்தி பின்பற்றுவதாக வைத்துக் கொள்வோம். மக்களால் அந்த மறை திருத்தி அமைக்கப்பட்ட பிறகும் அவள் அந்த மார்க்கத்தில் இருக்கிறாள்.

அல்லது திருநபியவர்கள் உலகில் தோன்றிய பிறகும் அவள் அதே மார்க்கத்தைப் பின்பற்றுகிறாள். அதே சமயத்தில் அவள் இஸ்ரவேலர்களின் சந்ததியில் உள்ளவளுமல்ல. இஸ்ரவேலர்களின் சந்ததியில் அவள் தோன்றியிருந்து திருத்தப்பட்ட - மாற்றப்பட்ட தன் மார்க்கத்தையே பின்பற்றினால் அவளை மணக்கக் கூடாது. திருத்தியமைக்கப்பட்ட மார்க்கத்தைப் பின் பற்றும் அவள், இஸ்ரவேலர்களின் சந்ததியில் தோன்றி யிராவிடில் அவளை மணந்து கொள்வது குறித்து அறிஞர்கள் மத்தியில் அபிப்பிராயப் பேதமுண்டு. இதன் விளக்கத்தைச் சட்ட நூல்களில் காணலாம்.

7. மணப்பெண் அடிமை மாதாகவும் மணமகன் உரிமை யுள்ளவனாகவும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இது போன்ற சந்தர்ப்பங்களில் மணமகன் தன்னைப் போன்ற உரிமையுள்ள பெண்ணை மணந்து வாழ்க்கை நடத்தும் ஆற்றலுள்ளவனாயிருந்தால் அவன் அடிமைப் பெண்ணை மணக்கக் கூடாது.

8. மணமகளோ அவளுடைய சில அவயவங்களோ மார்க்கச் சட்டப்படி மணமகனுக்கு அடிமைப் பட்டதாக இருக்கக் கூடாது.

9. மணப்பெண்ணுக்கு மணமகன் நெருங்கிய உறவினனா யிருக்கக் கூடாது. அன்னை, பாட்டி, மகள், பேத்தி, சகோதரியின் மகள், மாமி, சிறிய அன்னை – இப்படி எந்த உறவு முறையும் அவர்களுக்கிடையில் இருக்கக் கூடாது. ஆனால் மாமியின் மகளையோ சிற்றன் னையின் குமாரியையோ மணம் முடித்துக் கொள்ளலாம். இதில் தடை இல்லை!



10. பால்குடி முறையில் சில தடைகள் உருவாகின்றன. நீ பாலகனாயிருந்த போது உனக்கு ஒரு பெண் பாலூட்டியிருப்பதாக வைத்துக் கொள். அவளை நீ மணந்து கொள்ள முடியாது. ஏனெனில், அவள் உன் அன்னைக்குச் சமமானவள். நீயும் ஒரு பெண் குழந் தையும் ஒரே பெண்ணிடம் பால் குடித்திருக்கலாம். உன்னோடு பால் குடித்த அந்தப் பெண்ணை நீ மணக்கலாகாது. ஏனெனில், அவள் உன் சகோதரி போன்றவள். இப்படியே ஒவ்வொன்றையும் பார்த்துக் கொள். உறவு முறையால் திருமணத்திற்கு ஏற்படும் தடைகள் அனைத்தும் பால்குடி முறையாலும் ஏற்பட முடியும். குறிப்பாக, பால்குடி முறையால் அன்னை, சகோதரி முதலிய ஐந்து முறைகள் உருவாகின்றன. அவற்றில் ஒன்று மணமக்களிடை உண்டானாலும் அவர்களின் திருமணம் சட்டப்படி செல்லாது. இந்த ஐந்து முறைகளைத் தவிர்த்து மற்ற முறைகளில் திருமணம் செய்யலாம். இதன் விரிவுரை சட்ட நூல்களில் இடம் பெற்றிருக்கின்றன.

11. ஒரு பெண்ணை நீ மணம் முடிப்பதாக வைத்துக் கொள்வோம். அவளுடைய அன்னையையோ அவர் களுக்கு முதற் கணவன் மூலம் பிறந்த பெண்ணையோ நீ மணம் முடித்துக் கொள்ள முடியாது. ஒரு பெண்ணைத் தவறான வழியில் நீ புணர்ந்து விட்டதாக வைத்துக் கொள். அவள் அன்னை, அவள் மகள், அவள் பேத்தி ஆகிய யாரையும் நீ மணந்து கொள்ள முடியாது.

12. உனக்கு ஒரே சமயத்தில் நான்கு மனைவிகள் இருந்தால், ஐந்தாவதாக வேறு யாரையும் நீ மணக்க முடியாது.

13. ஒரு பெண் உனக்கு மனைவியாயிருக்கும் போது அவள் சகோதரி, அவள் சிற்றன்னை, அவள் மாமி இவர்களில் யாரையும் நீ மணந்து கொள்ள முடியாது. இதே போன்று உனக்கு ஒருத்தி மனைவியாயிருக்கும் போது அவள் சகோதரன் மகள், அவள் சகோதரி மகள் யாரையும் நீ மணக்க மார்க்கத்தில் அனுமதியில்லை. இதை நீ இப்படி உணர்ந்து கொள். இரண்டு பெண்கள்; அவர்களில் ஒருத்தியை ஆணாகக் கற்பனை செய்து பார்த்தால் அவர்களுக்கிடையில் திருமணம் நடக்க முடியாதபடி உறவு முறைத் தடை ஏதும் இருக்க வேண்டும். அதாவது ஒருத்திக்கு மற்றொருத்தி சகோதரி யாகவோ, சகோதரியின் மகளாகவோ, திருமணத்தைத் தடுக்கத் தகுந்த இதர உறவு முறை உள்ளவளாகவோ இருக்க வேண்டும். இத்தகைய உறவு முறையுள்ள இரண்டு பெண்களை ஒரே மனிதன் ஏகக்காலத்தில் மனைவிகளாக அடைய முடியாது.

14. விவாகப் பந்தத்திலிருந்து மனைவியைப் பிரித்தனுப்பி விட்ட ஒருவன் மீண்டும் அவளை மணக்க முடியாது;. அவளை அவன் மணக்க விரும்பினால் ஒரு நிபந்தனை; அவளை மற்றொருவன் மணந்து, புணர்ந்து அவளுக்கு மணப்பந்தத்திலிருந்து விடுதலை அளிக்க வேண்டும். இதன் பிறகுதான் முதற் கணவன் அவளை மணக்க முடியும்.

15 மனைவியைக் கடுமையான முறையில் அவமதித்து மணப்பந்தத்தை அறுத்துக் கொண்டவன் மீண்டும் அவளை மனைவியாக அடைய முடியாது. அவள் அவனுக்கு எப்போதும் 'ஹராம்'! இதைப் பற்றிய முழு விவரத்தைச் சட்ட நூல்கள் ஏந்திக் கொண்டிருக்கின்றன.



16. மக்காவின் தேவாலயத் தரிசனத்தின் போது மண மகளோ, மணமகனோ 'இஹ்ராம்' கட்டிக் கொண்டி ருந்தால் அவர்களுக்கிடையில் மணப்பந்தம் உருவாக முடியாது.

17. விதவையான, சிறுமியாயிருப்பதாக வைத்துக் கொள் வோம். அதே நிலையில் அவளை யாரும் மணந்து கொள்ள முடியாது. பருவ வயதை அடைந்த பிறகே ஓர் ஆடவன் அவளை மணக்க முடியும்.

18. உற்றார் உறவினரற்ற அநாதைச் சிறுமியைப் பருவ வயது வருவதற்கு முன்னால் ஓர் ஆடவன் மணந்து கொள்ள முடியாது.

19. மணப் பெண் திருநபியவர்களின் மனைவிகளுள் ஒருவராயிருந்தால் அவரை எந்த முஸ்லிமும் மணக்க முடியாது. மணக்கவும் கூடாது. ஏனெனில் அவர்கள் முஸ்லிம் பெருமக்களின் அன்னைகள். ஆனால் இது போன்ற நிலைமை இந்தக் காலத்தில் கண்டிப்பாய் ஏற்பட முடியாது என்பது தெரிந்த விஷயம்.

இவைதான் திருமணத்திற்குக் குறுக்கே நிற்கும் தடைகள். இவற்றில் ஒன்று இருந்தாலும் போதும், திருமணம் செல்லாது!

மண வாழ்க்கையை இனிமையாக்கும் நற் சுபாவங்கள் மணப்பெண்ணுக்கு இருக்க வேண்டும். திருமணத்திற்கு முன்னாலேயே இவற்றைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

1. ஒரு மணமகள் மார்க்கப் பற்றுள்ளவளாகவும் ஒழுக்கமுடையவளாகவும் இருக்க வேண்டும். இது தான்

எல்லா நன்மைகளுக்கும் வித்து. இது மிகவும் முக்கியமான குணம். எனவே இது விஷயத்தைத் திருமணத்திற்கு முன்பே நன்கு கவனிக்க வேண்டும்.

அவள் மதப் பற்றுக் குறைந்தவளாயிருந்தால் தனக்கும் தன் கற்புக்கும் ஏற்படும் ஆபத்துக்களை அவளால் தடுக்க முடியாது. இதனால் அவள் தன் கணவனுக்கே துரோகம் செய்ய முன்வருகிறாள்; மக்களின் மத்தியில் தன் கணவன் முகத்தில் கரியைப் பூசத் துணிகிறாள். வெறுப்பால் கணவன் மன வேதனையடைகிறான். அவனுக்கு வாழ்க்கையோ கசந்து போகிறது. இவையனைத்தும் பொறுப்பின்மையால் உருவாகும் விபரீதங்கள்.

அவள் நல்ல அழகியாகவும் இருந்து விட்டால் ஏற்படும் விபரீதங்களுக்குக் கேட்க வேண்டியதேயில்லை. அவளைப் பிரிந்திருப்பது கணவனுக்கு மிகவும் சிரமமா யிருக்கும். அவளைக் கட்டிக் காப்பதற்கும் அவனால் முடியாது. இரண்டும் கெட்ட நிலை!

திருநபியவர்களிடம் ஒருவர் வந்தார். ''நபியவர்களே! எனக்கு ஒரு மனைவி இருக்கிறாள். நான் அவளைத் தொட்டனுபவிக்க முனையும் போதெல்லாம் என்னை அவள் தடை செய்கிறாள்!''

''அவளை மணப்பந்தத்தை விட்டு நீக்கி விடும்!'' என்று திரு நபியவர்கள் விடையளித்தார்கள்.

''இருந்தாலும் அவளை நான் பெரிதும் விரும்பு கிறேன்...''

''அப்படியானால் அவளோடு வாழ்க்கை நடத்து வீராக!..''



அந்த மனிதர் தன் மனைவியை மணப்பந்தத்திலிருந்து பிரித்து விட்டால், அவர் தவறான வழியில் இறங்கக் கூடும். இதனால் தான் திரு நபியவர்கள் அப்படிக் கூறினார்கள்.

இந்த மனிதரின் நிலைமையைப் போன்றதுதான் நல்ல அழகியை மனைவியாகப் பெற்றவனின் நிலைமையும்.

அவள் செல்வத்தைப் பாழாக்கும் குணமுள்ள வளாகவோ, மற்ற வழிகளில் தவறும் சுபாவமுள்ள வளாகவோ இருந்தால் அவளுடன் வாழ்வதில் கணவன் எத்தகைய முன்னேற்றத்தையும் அடைய முடியாது. அவள் செய்யும் அட்டகாசத்தைப் பார்த்துக் கொண்டு அவன் மௌனமாயிருந்தால் அவளுடைய குற்றத்தில் அவனும் பங்கு கொண்டவனாகிறான். ''உங்களையும் உங்கள் குடும் பத்தையும் நரக நெருப்பிலிருந்து காத்துக் கொள்ளுங்கள்'' என்னும் இறைகருத்துக்கு முரணான வழியில் நடக்க வேண்டிய நிர்ப்பந்தமும் அவனுக்கு ஏற்படுகிறது.

அவள் போக்கை அவன் கண்டிக்க ஆரம்பித்தால் தம்பதிகளுக்கிடையில் சச்சரவும் மனத்தாங்கலும் ஏற்படுவது நிச்சயம். இதனால் அவன் ஆயுள் முழுவதும் வீணாகிறது.

எனவேதான் மதப் பற்றுள்ள பெண்ணை மணம் முடிப்பது குறித்து வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள் திரு நபியவர்கள்.

''ஒரு பெண் செல்வத்திற்காகவோ, அழகிற்காகவோ குலத்திற்காகவோ, மதப் பற்றுதலுக்காகவோ மணக்கப் படுகிறாள். ஆனால் நீங்கள் மதப்பற்றுள்ள பெண்களையே மணந்து கொள்ளுங்கள்!'' எனத் திரு நபியவர்கள் கூறினார்கள்.

மீண்டும்: ''அழகிற்காகவோ, பணத்திற்காகவோ ஓர் ஆடவன் ஒரு பெண்ணை மணந்து கொண்டால், அவள் அழகும் அவள் பணமும் அவனால் அனுபவிக்க முடியா தவையாய் ஆகிவிடுகின்றன. மதப் பற்றுதலுக்காக ஒரு பெண்ணை ஒருவன் மணந்து கொள்ளும் போது அவளுக்கு அழகையும் செல்வத்தையும் கொடுத்து அவனை அனுபவிக்கச் செய்கிறான் இறைவன்!''

பிறிதோரிடத்தில்: ''அழகிற்காக எவளையும் நீ மணக்காதே. அவள் அழகு உன்னை மதி மயக்கத்தில் ஆழ்த்தி விடும். பணத்திற்காக எவளையும் நீ மணம் முடிக்காதே. அவள் பணம் உன்னைப் படுகுழியில் தள்ளி விடும். மதப்பற்றுள்ள பெண்ணையே நீ மணந்து கொள்.''

இவ்வாறு திருநபியவர்கள் வற்புறுத்திக் கூறியிருப் பதற்குக் காரணமுண்டு. மதப்பற்றுள்ள மனைவி தன் கணவனுக்கு மதக் கைங்கரியங்களில் உதவியாயிருப்பாள்.

மணமகள் மதப்பற்று அறுந்தவளாயிருந்தால் கணவனுக்கு அவளால் தொல்லையும் துன்பமும் தாம் அதிகமாக உண்டாகும்.

2. மணமகள் குணவதியாயிருக்க வேண்டும். இதுவும் முக்கியமான தன்மை தான். இதனால் கணவனுக்கு மன அமைதியும் மார்க்கப் பணியில் ஊக்கமும் உண்டா கின்றன. அவள் சொல்லம்பு வீசும் சுபாவமுள்ளவளாகவும், தீய குணம் படைத்தவளாகவும், நன்றி கெட்ட மனப் பான்மை கொண்டவளாகவும் இருந்தால் அவளிடமிருந்து மணமகன் அடையும் லாபத்தை விட அவளால் அவனுக்கு ஏற்படும் நஷ்டம் தான் அதிகம்.



பெண்களின் சொல்லம்புகளைப் பொறுமையோடு சகித்துக் கொள்வது சாதாரணக் காரியமல்ல. சிரமமான காரியம். இறையருள் பெற்ற பெருந்தகைகள் கூட இது விஷயத்தில் பரிசிலனை செய்யப்பட்டிருக்கிறார்கள்!

பெண்களை ஆறு பிரிவினராகப் பிரிக்கலாம்.

**முதல் பிரிவு:** இந்தப் பிரிவைச் சேர்ந்தவள் அளவுக் கதிகமாகத் தன் கணவன் மீது குறைபட்டுக் கொள்வாள். எப்போதும் ஏதாவதொரு முறையீட்டைக் கொண்டு வந்தவாறேயிருப்பாள். எந்த நேரமும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருப்பாள்; அவள் முகத்தில் திருப்திக் குறியைக் காண முடியாது.

**இரண்டாம் பிரிவு:** இந்தப் பிரிவில் பட்டவள் தான் கணவனுக்குச் செய்த அற்ப உதவிகளையெல்லாம் எடுத்துக் கூறி இடித்துக் காட்டுவாள். இன்னின்ன காரியங்களை உங்களுக்காகச் செய்தேனே என்று பல்லவி பாடுவாள்.

**மூன்றாம் பிரிவு:** இந்தப் பிரிவிலுள்ளவள் தன்னுடைய முதற் கணவனையோ, அவனுக்குப் பிறந்த குழந்தை யையோ மனத்தில் வைத்துத் துதித்துக் கொண்டிருப்பாள். இது தவிர்க்கப்பட வேண்டிய விஷயம் என்பதில் சந்தேகமில்லை.

**நான்காம் பிரிவு:** இந்தப் பிரிவைச் சேர்ந்தவள் தன் நாவை ஈட்டி முனையைப் போல் கூர்மையாக வைத்துக் கொண்டிருப்பாள்; கணவனுக்குத் துன்பம் கொடுப்பாள்.

**ஐந்தாம் பிரிவு:** இதைச் சேர்ந்தவள் தன் முகத்தை அழகு படுத்துவதிலும் அதில் கவர்ச்சியை உண்டாக்குவதிலும்

அக்கறை செலுத்துவாள். தன் முகத்தில் செயற்கை மின்னல் பிரகாசிக்க வேண்டும் என்று ஆசைப்படுவாள். உணவு விஷயத்தில் பிடிவாதம் செய்வாள். 'உண்ண மாட்டேன்' என்று அடம் பிடிப்பாள். இதனால் அவள் எப்போதும் தனிமையாகவே உணவு உட்கொள்வாள்.

**ஆறாம் பிரிவு:** இந்தப் பிரிவைச் சேர்ந்தவள் சடைவு ஏற்படும்படி அளவுக்கதிகமாக உரையாடுவாள்.

''இவர்களில் யாரையும் ஒருவன் மணக்கக் கூடாது'' என்று சில அறிஞர்கள் கூறினார்கள்.

இல்யாஸ் நபியவர்கள் விளக்கினார்கள்:

பெண்கள் நான்கு வகைப்படுகின்றனர்.

**முதல் வகையினர் :** இவர்கள் எத்தகைய காரணமுமின்றித் தங்கள் கணவர்களை விட்டுப் பிரிந்து விட விரும்புவார்கள்.

**இரண்டாம் வகையினர் :** இவர்கள் சகல பேறுகளையும் பெற்ற மற்றப் பெண்களைப் பார்த்துப் பொறாமை கொள்வார்கள், எரிச்சலோடு பார்ப்பார்கள்.

**மூன்றாவது வகையினர்:** இவர்கள் தங்கள் கணவனைத் தவிர்த்து மற்றோர் ஆடவனைத் தங்கள் கையில் போட்டுக் கொண்டிருப்பார்கள். இந்தக் காரியத்தை அவர்கள் மிகவும் மர்மமாகச் செய்வார்கள்.

**நான்காம் வகையினர்:** சொல்லிலும் செயலிலும் இவர்கள் கணவனுக்கு முந்தியே நிற்பார்கள். கணவன் செய்வதற்கு முன் இவர்கள் எதையும் செய்வார்கள். அவன் சொல்லுவதற்கு முன் இவர்கள் எதையும் சொல்லி விடுவார்கள்.



இத்தகைய பெண்களை யாரும் மணக்கக் கூடாது.

அறிஞர் அலீ அவர்கள் இவ்வாறு சொல்லிக் கொண்டிருப்பதுண்டு: ''கஞ்சத்தனம், பெருமை, கோழமை- இவை ஆணுக்கு இழி குணங்கள்; பெண்ணுக்குச் சிறப்பம்சங்கள்!''

ஒரு பெண் கஞ்சத்தனம் கொண்டவளாயிருந்தால் அவள் பொருளும் அவள் கணவரின் பொருளும் காப்பாற்றப்படுகின்றன. ஒரு பெண் பெருமையடிப்பவளாயிருந்தால் எந்த ஆண் மகனிடமும் குழைந்து பேச மாட்டாள். இதனால் அவள் மீது யாரும் சந்தேக அம்பை வீச மாட்டார்கள். ஒரு பெண் கோழையாயிருந்தால் அவள் எல்லாக் காரியங்களையும் விட்டு விடுவாள். வீட்டை விட்டு வெளியில் போகக் கூட அவளுக்குத் துணிச்சல் இருக்காது. இதனால் எப்போதும் வீட்டுக்குள்ளேயே ஒடுங்கிக் கிடப்பாள். அவள் மீது யாரும் கதை கட்டிவிட முடியாது.

மேற்குறிப்பிட்டவை திருமணத்தின் போது கவனிக்க வேண்டிய நற்பண்புகளை எடுத்துரைக்கின்றன.

3. அழகிய தோற்றம், வசீகரமான வதனம் மணப்பெண்ணுக்கு இருக்க வேண்டும். இது கணவனுக்கு ஓர் அரண். ஏனெனில், மானிட சுபாவம் பெரும்பான்மை குரூபியான மனைவியால் திருப்தியடைவதில்லை. நற்குணத்தை ஒருத்தி பெற்றிருந்தால் அனேகமாக அவள் நல்ல தோற்றமும் பெற்றுத் தான் இருப்பாள். அழகிய குணம், அழகிய தோற்றம் – இவை இரண்டும் சேர்ந்தே உருவாகின்றன.

அழகுக்காக ஒருத்தியை மணக்கக் கூடாது என்றும் மத உணர்ச்சிக்காகவே மணக்க வேண்டும் என்றும் மேலே

கூறினேனல்லவா? இதற்கு அழகிய மனைவியாக அடையக் கூடாது என்பது பொருளல்ல. மதப் பற்றில்லாத ஒருத்தியை அவளுடைய வெறும் அழகிற்காக மட்டுமே மணக்கலாகாது என்பதே அதன் அர்த்தம். அழகு என்பது திருமணப் பிரியத்தை உண்டாக்குகிறது –அது தம்பதிகளின் அன்பிற்கும் நட்பிற்கும் உதவியாயிருக்கிறது. தம்பதிகளுக்கிடையில் நட்பு வளர்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு மார்க்கம் கூறுகிறது. திருமணத்திற்கு முன்னால் மணமகன் மணப்பெண்ணைப் பார்ப்பது 'முஸ்தஹபு' என்பதை மேலே பார்த்தோம். இருவருக்கிடையில் நட்பு மரம் வளர வேண்டும் என்பதே இதற்குக் காரணம்.

அஃமஷ் கூறினார்கள்: ''மணப் பெண்ணைப் பார்க்காமல் செய்யப்படும் திருமணங்கள் அனைத்தும் துன்பத்திலும் துயரத்திலும்தான் முடிகின்றன.''

ஆனால் புற அழகைத்தான் யாரும் பார்க்க முடியும். ஒரு பெண்ணின் அக அழகு எப்படி இருக்கிறது என்பதை எளிதில் கண்டு பிடித்து விட முடியாது.

வீட்டைக் கவனித்துக் கொள்வது, குழந்தை பெறுவது முதலிய நோக்கங்களுக்காக ஒருவன் திருமணம் செய்ய முற்படும் போது, அவன் தனக்கு வரும் மனைவியின் அழகைப் பற்றிக் கவலைப்படாமல், குரூபியை மணம் முடித்துக் கொண்டால் அவன் துறவறத்தை அணுகி வருகிறான் என்று தான் அர்த்தம்.

''திருமணத்திலும் துறவறமுண்டு. இளைஞன் ஒருவன் வயோதிகமான ஒருத்தியை மணந்து கொண்டால் அவனைத் துறவி எனலாம்!'' என்று அபூ சுலைமான் கூறினார்கள்.



ஒரு பெண் அழகியாக, கரிய கூந்தலுடையவளாக, பெரிய பெரிய விழிகளைக் கொண்டவளாக, வெண் மேனி படைத்தவளாக, கணவனை விரும்புபவளாக இருந்தால் அவள் சுவனமாதரின் தோற்றத்தையொத்தவள் – இப்படியும் சில நூல்கள் குறிப்பிடுகின்றன. ஏனெனில் இறைவன் சுவனமாதர்களை இத்தகைய தன்மைகளைக் கொண்டுதான் வர்ணிக்கிறான்.

''தன் கணவன் தன்னைப் பார்க்கிறான் என்பதை அறிந்து மகிழ்ச்சியடையும் பெண்ணே உங்களில் சிறந்தவள்'' என்று அண்ணலவர்கள் கூறினார்கள். ''கணவனின் கட்டளையை அவள் நிறைவேற்றுவாள். அவன் வெளியே போய்விட்டால் தன்னையும் பொருளையும் பாதுகாத்துக் கொள்வாள்!''

மணப் பெண் மணமகனை விரும்பினால் தான் அவளை அவனால் இலகுவாகப் பார்க்க முடியும்.

4. மணப்பெண்ணுக்கு மணமகன் கொடுக்கும் 'மஹ்ர்' குறைவாயிருக்க வேண்டும்.

''அழகிய வதனமுடைய, குறைந்த 'மஹ்ரு'ள்ளவளே உங்களில் மேலானவள்'' எனத் திருநபியவர்கள் கூறினார்கள். அதிகமாக 'மஹ்ர்' வைத்துத் திருமணம் செய்வதை அவர்கள் மறுத்திருக்கிறார்கள். மாவு அரைக்கும் திரிகை, தோலினாலான தலையணை முதலிய வீட்டுச் சாமான்களையும் பத்து வெள்ளி நாணயங்களையும் 'மஹ்ராக' வைத்து அண்ணலவர்கள் சில பெண்களை மணந்து கொண்டிருக்கிறார்கள். தொலிக் கோதுமையாலும் பேரீச்சைக் கனியாலும் சில சமயங்களில் கல்யாண விருந்தை நடத்தியுள்ளார்கள்.

''திருநபியவர்களின் திருமணத்தின் போதும் அவர்களது பெண்மக்களின் திருமணத்தின் போதும் 400 வெள்ளி நாணயங்களுக்கு மேல் 'மஹ்ர்' வைக்கப்படவில்லை'' என்று உமர் (ரலி) அவர்கள் கூறிக் கொண்டிருப்பார்களாம்!

ஐந்து வெள்ளி நாணயம் பெறுமானமுள்ள தங்கத் துண்டை மஹ்ராக வைத்து சில நபித்தோழர் தங்கள் திருமணத்தை நடத்தினார்கள்.

அபூசயீத் அவர்கள் தம் மகளை அபூஹுரைராவுக்கு மணம் முடித்துக் கொடுத்தார்கள். இதற்கு அவர்கள் ஏற்படுத்திய 'மஹ்ர்' தொகை இரண்டே இரண்டு வெள்ளிக் காசுகள்!

மணமகனிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ''மஹ்ர்'' தொகை அதிகமாயிருப்பது கூடாது. இதே போன்று மணப் பெண்ணிடமிருந்து மணமகன் அதிகமான சொத்தையும் எதிர்பார்ப்பது 'மக்ரூஹ்' - வெறுக்கப்படுவது. ஒரு பெண்ணை அவளிடமுள்ள செல்வத்துக்காக மணந்து கொள்வது நல்லதல்ல.

''மணம் முடிக்கத் தீர்மானித்த ஒருவன் 'பெண்ணுக்கு என்ன கொடுக்கிறீர்கள்?' என்று கேட்டால் அவனைத் திருடன் என்று கணித்து கொள்ளுங்கள்!'' என்று சுப்யான் கூறினார்கள். ''அவன் விருப்பம் போல் நீங்கள் கொடுத் தாலும் அவன் திருப்தியடைய மாட்டான்; அதிகமான அளவை எதிர்ப்பான்!''

மாப்பிள்ளைக்கு பெண்வீட்டார் நன்கொடையளிப்பது 'முஸ்தஹபு'. இது மணமக்களிடையில் அன்பை வளர்ப் பதற்கு ஒரு வழி. ஆனால் அன்புடன் அவர்கள்



கொடுப்பதைத் திருப்தியோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். பெரிய அளவை எதிர்பார்ப்பது முற்றிலும் தவறு.

''நன்கொடை அளியுங்கள்; நட்பை வளர்த்துக் கொள் ளுங்கள்'' என்று திருத்தூதர் அவர்கள் கூறினார்கள்.

பெண் வீட்டாரிடமிருந்து ஒருவன் அதிக அளவில் சொத்தை எதிர்பார்க்கும் போது, அதிகமான பிரதிபலனை எதிர்பார்த்து உதவி செய்ய வேண்டாம்!'' என்னும் இறை கருத்தை அவன் எண்ணிப் பார்க்க வேண்டும்.

''வட்டிக்குப் பணம் கொடுக்காதீர்கள்'' என்கிறது திருமறை. வட்டி என்பது முதலுக்கு ஏற்படும் பெருக்கு. வட்டிக்கு விடுபவன் தன் முதல் பெருக வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறான். இதுவும், இது போன்ற மற்றக் காரிங்களும் மார்க்கத்தில் கண்டிக்கப்படுகின்றன. ஏனெனில், பெண் வீட்டாரிடம் அதிகச் சொத்தை எதிர்பார்க்கும் போது அந்தத் திருமணம் வியாபாரத்தைப் போலத் தோற்றமளிக்கிறது என்பதற்கு விளக்கம் தேவையில்லை.

5. மணப்பெண் கருத்தரிப்பதற்கு வேண்டிய ஆரோக் கியத்துடன் இருக்க வேண்டும். மலட்டுத் தன்மை கொண்டவளை நீ மணந்து கொள்ளாதே!

''அன்பு செலுத்துவதற்கும் குழந்தை பெறுவதற்கும் தகுதியுள்ள பெண்களையே நீங்கள் மணம் புரியுங்கள்'' எனத் திருநபியவர்களே கூறினார்கள்.

ஆனால் வாழ்க்கையைச் சுவைத்தறியாத கன்னிப் பெண் சம்பந்தமாக இதனைத் தீர்மானிக்க முடியாது. குழந்தை பெறுவாளா, பெறமாட்டாளா என்பதைத் திருமணத்திற்குப் பிறகுதான் தெரிந்து கொள்ள முடியும்.

எனவே கன்னிப் பெண் ஒருத்தியை நீ மணக்க முற்படும் போது அவள் ஆரோக்கியத்தையும் அவள் பருவத்தையும் கவனித்துக் கொள். ஏனெனில், பருவமும் ஆரோக்கியமும் ஒரு கன்னியிடம் ஒன்று சேர்ந்திருந்தால் அவள் அனேக மாகக் குழந்தையைப் பெற்றெடுக்கத் தகுந்தவளே.

6. மணமகள் கன்னியாயிருக்க வேண்டும். ஜாபிர்(ரலி) அவர்கள், விதவை ஒருத்தியை மணந்து கொண்ட போது, திருநபியவர்கள், ''நீர் ஒரு கன்னியை மணந்து கொண்டிருக் கலாமே! அவளுடன் நீரும், உம்முடன் அவளும் கொஞ்சி மகிழ வசதியாயிருக்குமே!'' என்றார்கள்.

கன்னிப் பெண்ணை மணந்து கொள்வதில் மூன்று பயன்கள் உள்ளன.

**முதற்பயன்:** கன்னிப் பெண் தனக்கு வரும் கணவனை அதிகமாக விரும்புவாள். ''அன்பு செலுத்தும் பெண்களை மணந்து கொள்ளுங்கள்'' என்பது திருநபியவர்களின் பொன்மொழி. முதற் கணவன் மீது அதிகமான அன்பைச் செலுத்துவதுதான் பெண்களின் சுபாவம். விதவையிடம் இவ்வாறு எதிர்பார்க்க முடியாது. தன்னுடைய முதற் கணவனிடம் இடம் பெற்றிருந்த ஒரு தன்மையை அவள் விரும்பி வரவேற்றிருக்கலாம். அந்தத் தன்மை இரண்டாவது கணவனிடம் இல்லை என்ற காரணத்தால் அவனை அவள் வெறுக்கவும் செய்யலாம். ஆனால், கன்னிப் பெண்ணுக்கு இந்த குறைபாடு எளிதில் புலப்படாது. இதனால் அன்பும் குறையாது.

**இரண்டாம் பயன்:** கணவனும் மனைவியை விரும்பு வதற்கு வழியேற்படுகிறது. தன்னைத் தவிர்த்து மற்றொரு



வனால் அனுபவிக்கப்பட்ட பெண்ணின் மீது ஆணினம், விவரிக்க முடியாத – ஏதோ ஒருவித வெறுப்புக் கொள்கிறது. இது மானிடனின் இயற்கை. முதற் கணவனைப் பாராட்டி அவள் பேசும்போது இரண்டாம் கணவன் ஏனோ முகத்தைச் சுளிக்கிறான்.

**மூன்றாம் பயன்:** முதற் கணவன் சம்பந்தமாக அவள் எதையும் பேசுவதற்கு வசதி இல்லாமற் போகிறது. மணமகன் தானே அவளுக்கு முதற் கணவன்! ஒரு பெண் தன்னுடைய முதற் கணவன் மீது கொள்ளும் அன்பு அபாரமானது. இத்தகைய அன்பை விதவையிடம் காண முடியாது; எதிர்பார்க்க முடியாது. தன்னுடைய முதற் கணவனுக்கு அதை அவள் அளித்து விட்டிருப்பாள்! இது பெரும்பான்மையாக நடைபெறும் ஒன்று!

7. மணப்பெண் திருநபியவர்களின் வழித்தோன்றலில் வந்திருக்க வேண்டும். இந்த உயர் குலப்பெண்மணி தனக்குப் பிறக்கும் ஆண் – பெண் குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்துப் பக்குவப்படுத்துவாள். அதோடு அவள் உயர்குணம் பெற்றவளாகவும் பண்புள்ளவளாகவும் இருக்க வேண்டும். பண்பற்ற ஒருத்தியால் தன் குழந்தைகளைப் பண்படுத்த முடியாது.

''அழகியானாலும் தீயகுணம் படைத்தவளை மணக் காதீர்கள் – எச்சரிக்கிறேன்!'' என்று திருநபியவர்கள் கூறினார்கள். ''உங்கள் விந்துத் துளிகளின் சிறப்புக்குத் தகுந்த பெண்ணைத் தேர்ந்தெடுங்கள்!''

8. மணப்பெண் மணமகனுக்கு நெருங்கிய உறவு முறையுள்ளவளாக இருக்கக் கூடாது. இதனால் காம உணர்ச்சியின் வேகம் பாதிக்கப்படுகிறது.

"நெருங்கிய உறவுள்ள பெண்ணை மணக்காதீர்கள்," என்றார்கள் திருநபியவர்கள். ஏனெனில் பிறக்கும் குழந்தை மெலிந்தும் வலுவற்றும் இருக்கும்!"

காம உணர்ச்சியின் வேகம் குறைந்து போவதால் ஏற்படும் விளைவு இது. பெண்ணைப் பார்க்கும் போதும் அவளைத் தொடும் போதும் ஏற்படும் உணர்வுதான் - காமத்தைத் தூண்டுகிறது. இந்த உணர்வு அந்நியப் பெண் ஒருத்தியைப் பார்க்கும் போதும் தொடும் போதும் தான் அதிகமாக உண்டாகிறது. அடிக்கடி பார்த்துப் பழகிப் போன உறவுள்ள பெண் சம்பந்தமாக உண்டாகும் உணர்வு பூரணத்துவம் பெற்றிருக்காது. எனவே, அதனால் தூண்டப்படும் காம உணர்ச்சியும் முழுப் பலத்தோடு இயங்க முடியாமற் போய் விடும்!

இவை அனைத்தும் மணப்பெண்ணின் விஷயத்தில் கவனிக்க வேண்டியவை.

மணப்பெண்ணின் குணத்தைப் போலவே மணமகனின் குணமும் ஆராய்ச்சிக்குரியதுதான். அவனது குணங்களை ஆராய்வது பெண் வீட்டாருக்கு அவசியம். அருவருப்பான தோற்றமுள்ளவன், துர்க்குணம் படைத்தவன், குடிகாரன், மார்க்கப் பற்றுக் குறைந்தவன், மனைவியைக் காப்பாற்றும் சக்தி இல்லாதவன் – இவர்களில் யாருக்கும் அவர்கள் பெண்ணைக் கொடுக்கக் கூடாது. கீழ் குலத்தவனுக்கும் பெண் கொடுக்கலாகாது.

"திருமணம் என்பது ஒரு கட்டுப்பாடு. பெண்ணுக்கு வரும் மாப்பிள்ளை குறித்துப் பெண்ணைப் பெற்றவன் சிந்திக்க வேண்டும்" என்று திரு நபியவர்கள் கூறினார்கள்.



பெண்ணைக் கொடுக்கும் விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்துவது அவசியமான காரியம். திருமணத்தின் காரணமாக அவள் அடிமைப்பட்டு விடுகிறாள். அவளுக்கு விடுதலையளிக்க யாருமில்லை. ஆனால், கணவன் விரும்பினால் எந்தச் சமயத்திலும் அவனால் மணப்பந்தத்தை அறுத்தெறிய முடியும். இது பெண்ணுக்குச் சாத்தியமில்லை. தனக்கும் தன் கணவனுக்குமிடையிலுள்ள பிணைப்பை அறுப்பது அவளால் வெற்றி காண முடியாத காரியம்.

அநியாயக்காரன், பாவம் செய்பவன், குடிகாரன் முதலியவர்களில் ஒருவனுக்குத் தன் மகளை ஒருவன் மணம் முடித்து வைத்தால் அவன் தன் மார்க்க வரம்பைத் தாண்டி விட்டான். இறைவனின் சினத்திற்கு இலக்காகி விட்டான்.

"என் மகள் சம்பந்தமாக அநேகர் திருமணப் பேச்சை நடத்தியிருக்கிறார்கள். அவர்களில் யாருக்கு என் மகளை மணமுடித்துக் கொடுப்பது?" என்று ஹஸன் (ரலி) அவர்களிடம் ஒருவர் கேட்டார்.

ஹஸன் (ரலி) விடையளித்தார்கள்: "அவர்களில் இறைவனுக்கு அஞ்சி நல்வழி நடப்பவனுக்கு!"

# மூன்றாம் பாடம்

இந்தப் பாடத்தில் திருமணத்தை நடத்த வேண்டிய ஒழுங்கு முறைகளையும் திருமணத்திற்குப் பிறகு தம்பதிகள் நடந்து கொள்ள வேண்டிய வழி வகைகளையும் அவர்களின் கடமைகள் - உரிமைகளையும் ஆராய்வோம்.

குறிப்பாக மணமகன் பன்னிரண்டு காரியங்களை நடுநிலையில் நின்று செயல்படுத்த வேண்டும்.

*1.* 'வலீமா' என்னும் கல்யாண விருந்தை நடத்த வேண்டும். 'இது முஸ்தஹபான' காரியம். ஒரு சமயம் திருநபியவர்கள் அப்துர் ரஹ்மான் என்ற நண்பரிடம் சிறிது மாற்றத்தைக் கண்டார்கள்.

''ஏன் இப்படி'' என்று கேட்டார்கள்.

அப்துர் ரஹ்மான் புன்னகை புரிந்தார். '' நபியவர்களே! பேரீச்சங் கொட்டை அளவுள்ள தங்கத் துண்டை 'மஹ்ரா'க வைத்து ஒரு பெண்ணை நான் மணந்து கொண்டேன்!'' என்றார்.

''உமக்கு இறைவன் அருள்பாலிப்பானாக!'' என்று திருநபியவர்கள் பிரார்த்தித்தார்கள். ''ஓர் ஆட்டையேனும்



அறுத்துக் கல்யாண விருந்தை நடத்தி விடும்!'' என்றும் கூறினார்கள்.

ஸபிய்யா (ரலி) அவர்களின் திருமணத்தின் போது அண்ணலவர்கள் பேரீச்சங் கனியாலும் கோதுமை மாவி னாலும் விருந்தை நடத்தினார்கள்.

''திரு நபியவர்கள் கல்யாண விருந்தை வலியுறுத் தினார்கள். திருமணத்தைப் பிரபலப்படுத்துவது 'முஸ்தஹபு!'' என்று அபூஹுரைரா (ரலி) கூறினார்கள்.

திரு நபியவர்கள் கூறினார்கள்: ''மார்க்கத்தில் அனு மதிக்கப்பட்ட கல்யாணத்திற்கும் அனுமதிக்கப்படாத கல்யாணத்திற்குமிடையில் பிரபலப் படுத்துவதன் காரணமாகவே வேற்றுமை உண்டாகிறது. பிரபலப்படுத்து வதுதான் 'ஹலாலான' திருமணத்தை 'ஹராமா'ன திரு மணத்திலிருந்து பிரிக்கிறது!''

மீண்டும் கூறினார்கள்: ''திருமணத்தைப் பலருக்கும் தெரியுமாறு ஓசைப்படுத்துங்கள். கல்யாணத்தைப் பள்ளி வாசலில் நடத்துங்கள்....''

2. கணவன் பெருந்தன்மையோடு நடந்து கொள்ள வேண்டும். மனைவியிடம் இன்முகம் காட்டி அவளுடன் பழக வேண்டும். பெண்கள் குறுகிய மதி யுடையவர்கள். ஆணின் அறிவை விடப் பெண்ணின் அறிவு பலவீன மானது. எனவே, அவள் தன் கணவனைச் செயலாலோ சொல்லாலோ சடுதியில் துன்புறுத்தி விடுவாள். கணவன் மனைவியை அன்புக் கண்கொண்டு பார்க்க வேண்டும்; அவளது தொந்தரவுகளையும் துன்பங்களையும் சகித்துக் கொள்ள வேண்டும்.''

''பெண்களிடம் நல்ல முறையில் பழகி வாழ்க்கையை நடத்துங்கள்'' என்று இறைவன் கட்டளையிடுகிறான்.

திருநபியவர்களை மரணம் அணுகிக் கொண்டிருந்தது. அவர்களது நாவின் துடிப்புக் குறைய ஆரம்பித்து விட்டது. வார்த்தைகள் தேய ஆரம்பித்து விட்டன. இந்தக் கடைசி நேரத்திலும் அவர்கள் இவ்வாறு உபதேசித்தார்கள்: ''தொழுகை! அதை விட்டு விடாதீர்கள். உங்கள் கைக்குக் கீழுள்ளவர்களைத் துன்புறுத்தாதீர்கள். இறைவனின் அன்பு பெண்களைச் சூழ்ந்து நிற்கிறது. அவர்கள் உங்களிடம் கைதிகளைப் போன்று இருக்கிறார்கள்...''

மீண்டும் கூறினார்கள்: ''ஒரு மனிதன் தன் மனைவியின் துர்க்குணத்தைச் சகித்துக் கொண்டால், கொடிய துன்பங்களைப் பொறுமையோடு அனுபவித்த அய்யூப் நபியவர்களுக்கு அளிக்கும் நற்கூலியை இறைவன் அவனுக்கு அளிப்பான். கணவனின் தீயகுணத்தை ஒருத்தி சகித்துக் கொண்டால் அவளுக்கு, பிர் அவ்னின் மனைவி ஆஸியாவுக்கு அளிக்கப்படும் நற்கூலி கிடைக்கும்!''

ஒரு மனிதன் தன் மனைவியால் ஏற்படும் துன்பங்களைச் சகித்துக் கொண்டு அவள் மீது அன்பு செலுத்தும் போது அவன் அண்ணலவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றியவனாகிறான். திருநபியவர்களை அவர்களது மனைவிகள் எதிர்த்துப் பேசியதுண்டு. அண்ணலவர்கள் பொறுத்துக் கொண்டார்கள். அவர்களது மனைவிகளில் ஒருவர் ஒருநாள் அண்ணலவர்களைக் காலையிலிருந்து இரவு வரை வெறுத்திருந்தார். திருத்தூதர் அவர்கள் சினமுறவில்லை; அன்பு செலுத்தினார்கள்.



ஒரு சமயம் உமர் (ரலி) அவர்களுக்கும் அவர்களது மனைவிக்கு மிடையில் பேச்சு தடித்து விட்டது. அந்தப் பெண்ணரசி உமர் (ரலி) அவர்களை எதிர்த்துப் பேசினார்.

''நான் சொல்வதை மறுத்தா பேசுகிறாய்?'' என்று உமர் (ரலி) அவர்கள் சீறினார்கள்.

''திருநபியவர்களின் மனைவிகள் கூட எதிர்த்துப் பேசுகிறார்களே. திருநபியவர்கள் உங்களை விட மேலானவர்களாயிற்றே'' என்றார் அந்த மாதரசி.

''ஹப்ஸா! உன் தந்தை சிறப்பு வாய்ந்தவர் என்ற காரணத்தால் நீ கர்வம் கொண்டு விடாதே! எதிர்த்துப் பேசுவதை திருநபியவர்கள் கண்டித்திருக்கிறார்கள்!'' என்றனர் உமர் (ரலி)

ஒரு சமயம் அண்ணலவர்களின் நெஞ்சில் அவர்களின் மனைவிகளில் ஒருவர் அடித்து விட்டார்! அவர் அன்னை அவரைக் கண்டிக்க முற்பட்ட போது திருநபியவர்கள் குறுக்கிட்டார்கள்.

''வேண்டாம்! அவளை விட்டு விடுங்கள். ஒன்றும் செய்ய வேண்டாம். இதைவிடப் பெரிய காரியங்களைப் பெண்கள் செய்கிறார்கள்....''

இந்த நிகழ்ச்சி சம்பந்தமாக அண்ணலவர்களுக்கும் ஆயிஷா(ரலி)க்கு மிடையில் பேச்சு நடந்து கொண்டிருந்தது. அப்போது அபூபக்ர் (ரலி) அவர்கள் தீர்ப்பாளராக வந்து நுழைந்தார்கள். வாதப் பிரதிவாதங்களை ஆராயும் கட்டம்.

''ஆயிஷா! நீ பேசுகிறாயா, நான் பேசட்டுமா?'' என்று திருநபியவர்கள் கேட்டார்கள்.

''நீங்கள் பேசுங்கள். ஆனால் உண்மையைத் தவிர்த்து வேறு எதையும் பேசக் கூடாது.''

''என்ன சொன்னாய்?'' அபூபக்ர் (ரலி) பாய்ந்தார்கள். மறுவிநாடி ஆயிஷாவின் கன்னத்தில் கடுமையான அறை ஒன்று விழுந்தது. அவர் வாயிலிருந்து உதிரம் கொட்டிற்று. ''இவர்கள் உண்மையைத் தவிர்த்து வேறு ஏதேனும் பேசுவார்களா என்ன? பேசியதுதான் உண்டா?''

ஆயிஷா (ரலி) எழுந்து திருநபியவர்களுக்குப் பின்னால் போய் உட்கார்ந்து கொண்டார்கள் - அடக்க ஒடுக்கமாக!

''அபூபக்ர்! இதென்ன வேலை! உம்மை நாங்கள் இதற்காக அழைக்கவுமில்லை; இதை நாங்கள் விரும்பவுமில்லை'' என்று திருநபியவர்கள் அலுத்துக் கொண்டார்கள்.

இதனை நீ நன்கு ஆராய வேண்டும். திருநபியவர்கள் சில வார்த்தைகளிலேயே தங்கள் பண்பைச் சுட்டிக் காட்டி விட்டார்கள்!

''திருநபியவர்கள் பெண்களின் மீதும் குழந்தைகளின் மீதும், மற்றவர்களை விட அதிகமான அன்பைப் பொழிந்தார்கள்!'' என்று அனஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

3. துன்பங்களைச் சகித்துக் கொள்வது ஒருபுறமிருக்க, கிண்டல், விளையாட்டு முதலியவற்றால் மனைவிக்குக் களிப்பூட்ட வேண்டும். பெண்களின் உள்ளம் இவற்றில் இனிமையைக் காண்கிறது. இப்படியெல்லாம் திருநபியவர்கள் நடந்திருக்கிறார்கள். சில சமயங்களில் அவர்கள் குறுமதி படைத்த பெண்கள் செய்யும் காரியத்தைச்



செய்தார்கள். பெண்கள் பேசும் பேச்சையும் பேசியிருக்கிறார்கள். அண்ணலவர்கள் அன்னை ஆயிஷா (ரலி)யிடம் இப்படியெல்லாம் பழகினார்கள். நடை வேகத்தில் இருவரும் போட்டிப் போடுவதுண்டு. இருவருக்கிடையில் வெற்றி மாறி மாறி வரும்.

''தன் மனைவியிடம் அன்பு கொண்டவனாகவும் நற்பண்புள்ளவனாகவும் இருப்பவனே முஸ்லிம்களில் மேலானவன்'' என்று அவர்கள் கூறினார்கள்.

இன்னும் கூறினார்கள்: ''மனைவியிடம் அன்போடிருப்பவனே உங்களில் மேலானவன். நான் என் மனைவிகளிடம் அன்பாயிருக்கிறேன்; உங்களில் மேலானவனாக இருக்கிறேன்!''

உமர் (ரலி) அவர்கள் கொடிய சினமுடையவர்கள் என்பது பிரசித்தம். அவர்கள், ''ஒவ்வொரு மனிதனும் தன் மனைவியிடம் ஒரு குழந்தையைப் போன்று நடந்து கொள்ள வேண்டும்...'' என்று கூறினார்கள்.

இதே கருத்தை அறிஞர் லுக்மானுல் ஹகீம் அவர்களும் வெளியிட்டிருக்கிறார்கள்.

மனைவியிடம் கொடிய முறையில் நடந்து கொள்பவனை இறைவன் வன்மையாகக் கண்டிக்கிறான்.

4. மனைவிக்குச் சலுகை கொடுக்க வேண்டியது அவசியமென்றாலும் தான் அவளுக்கு அடிமைப்படும் அளவிற்குக் கணவன் சலுகை கொடுக்கலாகாது. தன் மதிப்பையும் கௌரவத்தையும் வீணாக்கும் வகையில் மனைவிக்குத் தணிந்து போகக் கூடாது. நடு நிலையில் நின்று

செயலாற்ற வேண்டும். தன் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்வதோடு தன் மனைவிக்கும் அவன் ஓரளவு சலுகை கொடுக்க வேண்டும். மார்க்கத்திற்கு முரணான வழியில் அவள் பிரவேசிக்க முற்படும் போது அவளைத் தடுப்பதற்குத் தயங்கக் கூடாது.

''மனைவியின் விருப்பப்படி நடக்கும் ஒவ்வொரு மனிதனும் மறுமையில் தண்டிக்கப்படுவான்!'' என்று ஹஸன் (ரலி) கூறினார்கள்.

உமர் (ரலி) கூறினார்கள்: ''பெண்களின் விருப்பத்திற்கு எதிராகச் செயலாற்றுங்கள். அதில் தான் இறைவனின் ஆசியுண்டு!''

''பெண்களிடம் ஆலோசனையை நடத்துங்கள். அவர் களின் விருப்பத்திற்கு எதிராகச் செயலாற்றுங்கள்'' என்றும் கூறப்படுகிறது.

''மனைவிக்கு அடிமைப்பட்டவன் மோசம் போய் விட்டான்'' என்று திருநபியவர்கள் கூறினார்கள்.

''மனைவிக்கு அடிமைப்பட்டவன்'' என்று அண்ண லவர்கள் குறிப்பிடுகிறார்கள் – கணவனை! அவர்கள் இவ்வாறு கூறியதற்குக் காரணமுண்டு. ஒரு மனிதன் தன் மனைவியின் விருப்பப்படி நடக்கும் போது, அவன் அவளுக்கு அடிமையாகி விடுகிறான். இதனால் அவன் மோசம் போகிறான். இறைவன் ஆணுக்குப் பெண்ணைக் கட்டுப்படுத்திக் கொடுத்திருக்கிறான். ஆண் மகன் என்ன செய்கிறான் தெரியுமா? அவன் தன்னைத் தானே தன் மனைவியிடம் ஒப்படைத்து விடுகிறான்! இந்தக் கட்டத்தில் பெண்ணுக்கு ஆண் கட்டுப்பட்டவனாகிறான். இங்குக் காரியம் தலைகீழாகி விட்டது!



ஆண் மகன் அடக்கியாள்வதற்குப் பிறந்திருக்கிறான் – அடிமைப்படுத்துவதற்கு அல்ல! ''பெண்களின் மீது அதிகாரம் செலுத்துவார்கள்'' என்று இறைவன் ஆண்களைக் குறிப்பிடுகிறான். கணவனுக்குத் ''தலைவன்' என்ற ஒரு பெயரும் உண்டு.

இறைவன் கூறுகிறான்: ''இருவரும் பார்த்தார்கள். அவளுடைய 'தலைவர்' வாசலில் நின்று கொண்டிருந்தார்!'' (சூரா யூசுஃப்)

இந்தத் தலைமைத்தனம் நிரந்தரமாக இருப்பது அவசியம். அதனை அடிமைத்தனமாக மாற்றுவது கொடிய குற்றம்; இதனால் அவன் இறைவன் அளித்த அருட் கொடைக்கு நன்றி செலுத்தாத பாவியாகிறான்.

இந்த இருநிலையை நீ எக்காரணம் கொண்டும் அனுமதிக்கக் கூடாது. நீ துணிந்து போனால் அவள் உன் தலையில் ஏறி மிதிப்பாள். ஒரு சாண் அளவுக்கு நீ அவளை விரட்டினால், ஒரு முழம் அளவுக்கு அவள் உன்னை இழுத்துச் செல்வாள். கெஞ்சினால் மிஞ்சுவாள்; மிஞ் சினால் கெஞ்சுவாள்! எனவே அவசியமான நேரங்களில் அவளுக்கு நீ கடிவாளம் போட வேண்டும்; தேவையான சந்தர்ப்பங்களில் கண்டிப்புடன் நடந்து கொள்ள வேண்டும்!

இமாம் ஷாபியீ அவர்கள் கூறினார்கள்: ''மனைவி, வேலைக்காரன், பாமரன் – இந்த மூவரிடமும் நிதானத்துடன்

நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு நீ கண்ணிய மளித்தால் உன்னை அவர்கள் அவமதிப்பார்கள். அவர்களை நீ கேவலப்படுத்தினால் உனக்கு அவர்கள் கண்ணிய மளிப்பார்கள்!''

மனைவியின் மீது கோபமே கொள்ளாமல் அவளுக்குக் கண்ணியமும் அளிக்கும் போது இத்தகைய விபரீதங்கள் ஏற்படுவது திண்ணம். கண்ணியமளிக்க வேண்டியதுதான்; அவசியம் ஏற்பட்டால் கண்டிக்கவும் வேண்டும். இதனைத் தான் இமாமவர்கள் மேலே குறிப்பிட்டார்கள்.

கணவனை எப்படி நடத்த வேண்டும் என்பது பற்றி அரேபியப் பெண்கள் தங்கள் புத்திரிகளுக்கு இவ்வாறு விளக்கம் தருவதுண்டு–

''....முதலில் அவன் இடுப்பிலிருக்கும் ஈட்டியை உருவிப் பார். அவன் மறுக்காமலிருந்தால் அவன் கேடயத்தில் இறைச்சித் துண்டுகளை நிரப்பி வை. இதற்கும் அவன் பேசாமலிருந்தால் அவன் வாளை உருவி எலும்பு களை நறுக்கு. இதற்கும் அவன் சம்மதித்து விட்டால் அவன் முதுகில் அழுக்கு மூட்டையைச் சுமத்தி அவன் மீது ஏறிச் சவாரி செய்! ஏனெனில் அவன் உன் கழுதை!''

விண்ணகமும் மண்ணகமும் நடுநிலையான சூழ் நிலையில் தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. வரம்பு கடந்தால் அவை கண்டிப்பாய்ச் சீர்குலைந்து விடும் என்பது நிச்சயம். மனிதனும் நடுநிலையில் நின்று தான் செயலாற்ற வேண்டும். மனைவியோடு ஒத்துழைப்பதற்கும் அவளைக் கண்டிப்பதற்கும் ஒரு வழியை அவன் வகுத்துக் கொள்ள வேண்டும். பெண்கள் கொடிய தீங்குகள் பல நிறைந்



தவர்கள். அவர்களின் தீய குணங்களைத் தடுப்பதற்கு மார்க்கத்தின் கட்டளையைச் சிரமேற் கொள்ள வேண்டும். அவளிடம் குறை கண்டால் உடனே கண்டிக்க வேண்டும்.

பொதுவாகப் பெண்கள் அனைவரிடமும் தீய குணம் உண்டு. போதாததற்கு அறிவாற்றலும் குறைவு. எனவே அவர்களை அதிகாரம் கலந்த அன்பினால் தான் திருத்த முடியும்.

''நூறு காக்கைகள் கூடிய இடத்தில், வயிற்றுப் பகுதியில் வெண்மை படர்ந்த காக்கையொன்று தனித்துக் காணப்படுவது போல், மாதர்களின் மத்தியில் ஒழுக்கமுள்ள பெண்மணி தனித்து விளங்குகிறாள்!'' என்று திரு நபியவர்கள் விளக்கினார்கள்.

அறிஞர் லுக்மான் அவர்கள் இவ்வாறு உபதேசித் தார்கள்; ''மகனே! கெட்ட பெண் சம்பந்தமாக உன்னை எச்சரிக்கிறேன். அவள் சகவாசத்திற்கு நீ அஞ்ச வேண்டும். உனக்கு வயோதிகம் ஏற்படுவதற்கு முன் அவள் உன் முகத்தில் நரையை உண்டாக்கி விடுவாள். பெண்களின் தீங்குகளுக்குப் பயப்படு. அவர்கள் நன்மையின் பக்கம் உன்னை இழுக்க மாட்டார்கள். தீமையே அவர்களுக்கு இனிமை. அதன்பால் உன்னை அழைப்பார்கள்.'''

திருநபியவர்கள், ''முதுகெலும்பை நொறுக்கக் கூடிய மூன்று வகைப் பெண்களிடமிருந்து இறைவனிடம் தற்காப்புக் கோர வேண்டும்...'' என்றார்கள். இந்த மூவரில் தீய குணம் படைத்த பெண்மணியையும் அண்ணலவர்கள் இணைத்திருக்கிறார்கள். ஏனெனில், அவள் வயோதிகத்துக்கு முன்பே வயோதிகத்தை உண்டாக்கும் ஆற்றலுள்ளவள்.

''நீ அவளை நெருங்கினால் உன்னைத் திட்டுவாள். நீ அவளை விட்டுப் பிரிந்து விட்டால், உனக்கு அவள் துரோகம் செய்வாள்!'' – இப்படியும் சில நூல்கள் வர்ணிக்கின்றன.

''நீங்கள் யூசுஃப் நபியின் மனைவிகள்'' என்று திருநபியவர்கள் இடித்துக் கூறினார்கள். அபூபக்ர் (ரலி) அவர்களைத் தொழுகைக்குப் போகவிடாமல் தடுத்ததற்காக இவ்வாறு கூறினார்கள்.

திருநபியவர்களின் மர்மங்கள் சிலவற்றைப் பகிரங்கப் படுத்தியதற்காக இறைவன் கண்டித்தான் – திருநபியவர்களின் மனைவிகளில் சிலரை: ''நீங்கள் இறைவனிடம் மன்னிப்புக் கோர வேண்டும். உங்களுள்ளம் இறை பாதையிலிருந்து சாய்ந்து விட்டது!''

இவை திரு நபியவர்களின் மனைவிகள் விஷயத்தில் அருளப்பட்டவை.

''பெண்ணுக்கு அடிமைப்பட்ட எந்தச் சமுதாயமும் வெற்றி காண முடியாது'' என்று திரு நபியவர்கள் விளக்கினார்கள்.

தன்னிடம் எதிர்த்துப் பேசியதற்காக உமர்(ரலி) அவர்கள் தம் மனைவியைக் கண்டித்தார்கள். ''உன்னிடம் எனக்குத் தேவை ஏற்பட்டால் நீ விளையாடுகிறாய். இல்லையேல் உன் பாட்டிற்கு உட்கார்ந்திருக்கிறாய்!''

பெண்ணிடம் தீய குணமுண்டு. பலவீனமும் அவளுக் குண்டு. அதிகார நடவடிக்கையால் அவளது தீய குணத்தைக் களையலாம். அவள் மீது அன்பு செலுத்துவதால் அவளுடைய பலவீனம் மறைகிறது. இவ்வாறுதான் மனைவியின் மனப்பிணியை அகற்ற வேண்டும். வியாதியின் வேகத்துக்குத் தக்கவாறு மருந்து கொடுப்பான் வைத்திய நிபுணன். இப்படியே நீயும் செயலாற்ற வேண்டும். முதலில் அனுபவ வாயிலாக நீ உன் மனைவியின் துர்க் குணங்களைக் கண்டறிந்து கொள். பின்னர் அந்தத் துர்க்குணங்களை அகற்றக் கூடிய நற் செயல்களை அவளுக்குக் கற்றுக் கொடு. சூழ்நிலையை அனுசரித்து அவளுக்கு நீயே வைத்தியம் செய்.



5. மனைவி சம்பந்தமாக அதிகச் சந்தேகம் கொள்ள லாகாது. அவள் செயல்களில் அளவுக்கதிகமாகத் தப் பெண்ணம் கொள்ளக் கூடாது. அவள் நடவடிக்கைகளைத் தேவைக்கதிகமாகத் துப்பறியவும் கூடாது. பெண்ணின் அந்தரங்கங்களை ஆராய்வது தவறு. இதனைத் திரு நபியவர்கள் தடுத்துள்ளார்கள்.

ஒரு சமயம் திரு நபியவர்கள் தங்கள் நண்பர்களுடன் ஒரு பிரயாணத்திலிருந்து தாய்நாடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். மதீனமா நகரினுள் அவர்கள் பிரவேசிப்பதற்கு முன்னால் திரு நபியவர்கள், ''இன்றிரவு யாரும் தங்கள் மனைவியரிடம் செல்ல வேண்டாம்!'' என்றார்கள்.

இந்தக் கட்டளையை இருவர் மட்டும் மீறிவிட்டனர். அவ்விருவரும் தம் தம் வீட்டிற்குப் போனார்கள். அங்கே அவர்கள் விரும்பாதது நடைபெறுவதைக் கண்டார்கள்!

''பெண்கள் வளைந்த எலும்பு போன்றவர்கள். அதனை நேராக்க முனைந்தால் அது முறிந்து போய் விடும்...'' என்று சில நூல்கள் குறிப்பிடுகின்றன.

இவை அனைத்தும் பெண்களைப் பண்புறச் செய்யும் பொன்மொழிகள்.

திருநபியவர்கள் கூறினார்கள்: ''ஒரு மனிதன் சந்தேகச் சூழ்நிலையின்றித் தன்மனைவி மீது தப்பெண்ணம் கொள்வது கொடிய குற்றம். இது இறைவனையே கோபப் படுத்தி விடும். இத்தகைய துர் எண்ணத்தை விட்டு அகன்றிருக்குமாறு இறைவனால் பணிக்கப்பட்டிருக் கிறோம். எண்ணங்களில் சில, குற்றங்களாக மாறுகின்றன''

அறிஞர்அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: ''உன் மனைவியின்மீது நீ அதிகமாகத் தப்பெண்ணம் கொள் ளாதே. நீயே அவளுக்குக் கெட்ட பெயரை உண்டாக்கி விடாதே!''

தேவையான இடங்களில் தப்பெண்ணம் கொள்வது அவசியம் தான். அது சிறப்பான காரியமும் கூட!

''தடுக்கப்பட்டவற்றை மனிதன் செய்து விடுவானோ என்று இறைவன் சந்தேகப்படுகிறான்....'' என்று திரு நபியவர்கள் கூறினார்கள். இறைவனின் செயல்கள் யாவும் சிறப்பிற்குரியவை என்பதில் சந்தேகம் என்ன?

''இறைவன் என் மீது தப்பெண்ணம் கொள்கிறான்; இதனால் தான் அவன் தவறான செயல்களைத் தடுத்தான்; எச்சரிக்கையாளர்களையும் நற்செய்தி கூறுபவர்களையும் மண்ணகத்திற்கு அனுப்பினான்; சுவனத்தைப் படைத் தான்...'' என்றும் கூறினார்கள்.

திரு நபியவர்கள் விளக்கினார்கள்.



ஓர் இரவு நான் சுவனத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டேன். அங்கு ஒரு மாளிகை கம்பீரமாக நிற்கின்றது. அதன் முற்றத்தில் மங்கையொருத்தி நின்றிருந்தாள்.

''இந்த மாளிகை யாருக்காகக் கட்டப்பட்டிருக்கிறது?'' என்று கேட்டேன்.

''உமர் அவர்களுக்கு!'' என்று பதில் வந்தது.

அந்த மங்கையைப் பார்க்கத் திரும்பினேன். அதே சமயத்தில் உமர் தப்பெண்ணம் கொண்டு விடுவாரோ என்ற எண்ணமும் ஏற்பட்டது...

திருநபியவர்களின் விளக்கத்தைக் கேட்ட உமர் (ரலி) அவர்கள் அழுதே விட்டார்கள்.

''நபியவர்களே! தங்கள் மீதா நான் தப்பெண்ணம் கொள்ளப் போகிறேன்?'' என்று அலறினார்கள்.

''உங்களோடு கடைத்தெரு வழியாகக் கழுதை மேல் சவாரி செய்ய உங்கள் மனைவியையும் அழைக்கிறீர்களா? சந்தேகப்படாத மனிதனை இறைவன் கோரப்படுத்தட்டும்!'' என்று அறிஞர் ஹஸன் அவர்கள் அடிக்கடி கூறுவார்களாம். நன்கு ஆராய்ந்து பார்!

''தப்பெண்ணங்கள் சிலவற்றை இறைவன் விரும்பு கிறான்,'' என்று திருநபியவர்கள் கூறினார்கள். சந்தேகச் சூழ்நிலையில் தப்பெண்ணம் கொள்வது வரவேற்கப் படுகிறது. சந்தேகப்படும்படியான சூழ்நிலை உருவாகாத இடத்தில் தப்பெண்ணம் கொள்வது குற்றம். இது இறைவனைச் சினமுறச் செய்கிறது!''

மீண்டும்; ''நானும் தப்பெண்ணம் கொள்பவனே. உணர்ச்சியுள்ள ஒவ்வொரு மனிதனும் சில சமயங்களில் தப்பெண்ணம் கொள்ளத்தான் செய்வான்.''

ஒரு மனிதனுக்குத் தன் மனைவி மீது சந்தேகம் ஏற்படாமலிருப்பதற்கு ஒரு வழியுண்டு. அவன் வீட்டிற்கு எந்த ஆண்மகனும் வரக்கூடாது. அவன் மனைவி கடைத் தெருவுக்கோ வேறு எங்கேனுமோ புறப்படக் கூடாது!

''ஒரு பெண்ணுக்குச் சிறப்பளிப்பது எது?... திருநபியவர்கள் தங்கள் புதல்வியைக் கேட்டார்கள்.

''அவள் எந்த ஆண்மகனையும் பார்க்கக் கூடாது. தன்னைப் பார்க்க எந்த ஆண்மகனையும் அனுமதிக்கக் கூடாது. இதுதான் பெண்களுக்குச் சிறப்பம்சம்!'' என்று நபிநாதர் புதல்வி பாத்திமா (ரலி) அவர்கள் விடையளித்தார்கள்.

இதை அண்ணலவர்கள் ஆமோதித்தார்கள்.

நபித்தோழர்களில் சிலர் வீட்டுச் சுவரிலுள்ள துவாரங்களையும் ஜன்னல்களையும் அடைத்து விட்டார்கள். - வீட்டிலுள்ள பெண்கள் வெளியில் போகும் ஆண்களைப் பார்க்கக் கூடாது என்பதற்காக!

மஆத் அவர்கள் ஒரு நாள் வீட்டில் நுழைந்த போது தம் மனைவி சுவரிலுள்ள துவாரத்தின் வழியாக வெளியில் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள்; உடனே கண்டித்தார்கள்.



மற்றொரு சமயம் தான் தின்ற கனியொன்றைத் தம் மனைவி வேலைக்காரனிடம் கொடுப்பதை மஆத் அவர்கள் பார்த்து விட்டார்கள். மனைவியை நையப் புடைத்தார்கள்.

''பெண்களை வீட்டோடு இருக்கச் செய்யுங்கள்!'' என்று உமர் அவர்கள் கூறினார்கள். உமர் அவர்களின் கருத்தில் உண்மையுண்டு. அருவருப்பான தோற்றத்துடன் அலங்காரம் ஏதும் செய்து கொள்ளாமல் வெளியில் செல்வதை எந்தப் பெண்மணியும் விரும்ப மாட்டாள்

இது இப்படியிருக்க, பெண்கள் பள்ளி வாசலுக்கு வருவதைத் திருநபியவர்கள்அனுமதித்திருக்கிறார்கள். என்றாலும், தற்போதைய சூழ்நிலையில் பெண்களை வெளியில் செல்ல அனுமதிக்கக் கூடாது. வயோதிகப் பெண்கள் வெளியில் செல்வது குறித்து ஆட்சேபணை கிடையாது. இதுதான் நேர்மையான கருத்து.

பெண்கள் வெளியே போவதைத் திருநபியவர்கள் ஆட்சேபிக்க வில்லை என்பது உண்மையே. நபித்தோழர்கள் வாழ்ந்த காலத்தில் அது சரியாயிருந்தது. ஆனால் காலம் மாறிப்போய் விட்டது. அந்தக் காலத்தைப் போல எந்தப் பெண்மணியும் துணிச்சலுடன் வெளியில் செல்ல முடியாத சூழ்நிலை இன்று நிலவி வருகிறது.

''பெண்கள் செய்யும் அட்டகாசத்தைத் திருநபியவர்கள் அறிந்திருந்தால், அவர்கள் வெளியில் செல்வதைத் தடை செய்திருப்பார்கள்!'' என்று அன்னை ஆயிஷா (ரலி) கூறினார்கள்.

உமர் (ரலி) அவர்கள் ஒரு சமயம் தம் மைந்தர்களுக்கு உபதேசம் பண்ணினார்கள்: ''பெண்களைப் பள்ளி வாசலுக்குச் செல்லவிடாமல் தடுக்காதீர்கள் என்று பெருமானரவர்கள் கூறியிருக்கிறார்கள்...''

ஒருவர் குறுக்கிட்டார். ''உண்மை. ஆனால் நாங்கள் கண்டிப்பாய்த் தடுப்போம்–''

உமர் அவர்களுக்குக் கோபம் வந்து விட்டது. மைந்தனை அடித்து விட்டார்கள். ''தடுக்க வேண்டாம் என்று திருநபியவர்கள் கூறியிருப்பதாகச் சொல்லுகிறேன். அவர்களின் கருத்தை எதிர்த்துப் பேசுகிறாயே நீ! என்ன துணிச்சல் உனக்கு!'' எனச் சீறினார்கள். தம் மைந்தன் நபிக்கருத்துக்கு எதிராகச் சொல்கிறான் என்பது அவர்கள் எண்ணம்.

மகனார் கூறியதிலும் அர்த்தமுண்டு. காலம் மாறிப் போய்விட்டது என்பதை அவர் அறிந்திருந்தார். கருத்தைத் திருத்திக் கொண்டார். 'காலம் மாறிப் போய்விட்டதால்' என்று அவர் தம் விடையில் குறிப்பிட்டிருந்தால் தந்தையின் கையில் அடிபட நேர்ந்திருக்காது.

பெரு நாள் தொழுகைக்கு மட்டிலும் பெண்கள் பள்ளிக்குச் செல்லலாம். இதைத் திருநபியவர்கள் அனு மதித்தார்கள். ஆனால் கணவனின் அனுமதியைப் பெற்றுத்தான் அவர்கள் புறப்பட வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் பத்தினிப் பெண்கள் கணவனின் அனுமதியுடன் வெளியில் செல்லலாம். தவறில்லை– ஆனால் அவர்கள் வெளியில் செல்லாமல் வீட்



டோடிருப்பது சாலச் சிறந்தது. அவசியமான காரியத்திற்காக அவர்கள் வெளியே செல்வதில் தவறில்லை. ஏனெனில், அவசியமற்ற காரியத்திற்காகவும் வேடிக்கை பார்ப்பதற் காகவும் ஒரு பெண்மணி வீட்டிலிருந்து புறப்படும் போது, அவளுடைய பெண்மை பெரிதும் பாதிக்கப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் விபரீதமும் ஏற்பட்டு விடுகிறது.

அவசியத்தையொட்டி ஒரு பெண் வெளியில் போகும் போது அவள் தன் பார்வையைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அன்னிய ஆண்களை அவள் ஏறெடுத்தும் பார்க்கக் கூடாது. பெண்களைப் போன்று ஆண்களும் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும் என்று நான் கூறவில்லை. ஒரு பெண்ணின் முகத்திற்கும் மீசை முளைக்காத ஒரு சிறுவனின் முகத்திற்குமிடையில் அதிக வேற்றுமை கிடையாது. என்றாலும், விபரீதம் உண்டாகும் என்று தோன்றினால் எந்த ஆண்மகனையும் அவள் பார்க்கக் கூடாது. இங்கு நான் வலியுறுத்திக் கூறுவது இதுதான். விபரீதம் உண்டாகாத சூழ்நிலையில் இந்தத் தடை கிடையாது.

பொதுவாக ஆண்கள் திறந்த முகத்தோடு புறப்படு கிறார்கள். பெண்களோ முக்காடிட்டவாறு வருகிறார்கள். ஆண்களின் முகத்தைப் பெண்கள் பார்க்கக் கூடாது என்றிருந்தால் ஆண்களுக்கும் முக்காட்டுக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்குமே! அப்படியில்லையேல், அவசியமின்றி வெளியில் போகக் கூடாது என்னும் கட்டுப்பாடாவது அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டி ருக்குமே!

6. வரம்பு மீறாமல் நடுநிலையில் நின்று மனைவிக்குச் செலவு செய்ய வேண்டும். அவளுக்காகப் பணத்தை வாரி இறைக்கக் கூடாது. கஞ்சத்தனமாக நடந்து கொள்வதும் சரியல்ல. நடுநிலையில் நின்று செயலாற்ற வேண்டும்.

''உண்ணுங்கள்; குடியுங்கள் - விரயம் செய்யாதீர்கள்'' என்று இறைவன் கூறுகின்றான்.

மீண்டும் கூறுகிறான்: ''உன் கையைக் கழுத்தோடு இணைத்துக் கொள்ளாதே. அளவுக்கதிகமாகவும் அதை விரித்து விடாதே!''

''தன் மனைவியிடம் நல்ல முறையில் நடந்து கொள்பவனே உங்களில் சிறந்தவன்'' என்று திருநபியவர்கள் கூறினார்கள்.

இன்னும்: ''ஒரு தங்க நாணயத்தை நீ இறைவழியில் செலவிடுகிறாய். இன்னொரு தங்க நாணயத்தை உன்னிடமுள்ள அடிமைக்குச் செலவிடுகிறாய். மற்றொன்றை ஏழைகளுக்குச் செலவிடுகின்றாய். இன்னுமொரு நாணயத்தை உன் மனைவிக்காகச் செலவிடுகிறாய் - இந்த நான்கிலும் மனைவிக்காகச் செலவிட்டதே சிறந்தது; உயர்ந்த பயன் தரவல்லது!''

அறிஞர் அலீ அவர்களுக்கு நான்கு மனைவிகள் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொவருவருக்கும் நான்கு தினங்களுக்கொரு முறை ஒரு வெள்ளி நாணயத்திற்கு மாமிசம் வாங்கிச் செல்வார்களாம்!

ஹஸன் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ''நல்லவர்கள் கூட குடும்ப விவகாரத்தில் தவறிவிடுகிறார்கள்!''



இப்னு ஸீரீன் அவர்கள் கூறினார்கள். வெள்ளிதோறும் மனைவிக்காக ரவாப் பாயாசம் தயாரிப்பது கணவனுக்கு முஸ்தஹபு! இது அவசியமல்ல என்றாலும் இவ்வாறு செய்வதால் அன்பு வளருகிறது. இனிப்புப் பொருள் அன்பை வலுப்படுத்துகிறது.

மிஞ்சிய உணவைத் தானம் செய்யுமாறு மனைவிக்குக் கட்டளையிட வேண்டும். தானதர்மம் செய்ய வேண்டிய நீண்ட தொடரில் இது முதற்படி. சூழ்நிலைக்குத் தக்கவாறு அவள் தர்மம் செய்ய வேண்டும். இது விஷயத்தில் கணவனின் அனுமதியைக் கூட அவள் பெற வேண்டியதில்லை. ருசி மிக்க உணவு வகைகளில் அவளுக்கு அதிக ஆவலை உண்டாக்குவது தவறு. ஏனெனில் உணவின் ருசியில் மூழ்கியிருப்பவள், அதனைத் தர்மம் செய்யத் துணிய மாட்டாள். 'உணவாசையால் உள்ளம் நெருக்கடியடைகிறது. இதனால் மார்க்கத்தைப் பின்பற்றி நடக்க முடியாத சூழ்நிலை உருவாகிறது.

இந்த நிலையை ஏற்பட விடாமல் தடுக்க ஒருவன் முனைந்தால் அவன் தன் மனைவிக்குத் தெரியாமல் அத்தகைய உணவு வகைகளைப் புசிக்கட்டும். அவளுக்கு அவன் கொடுக்க விரும்பாத உணவு வகைகளைப் பற்றி அவளிடம் வர்ணிக்காமலிருக்கட்டும்!

கணவன் உணவருந்த முற்படும் போது மனைவியையும் மக்களையும் தன்னோடு அமர்த்திக் கொள்ள வேண்டும். ''ஒரே சாப்பாட்டு விரிப்பில் எல்லோரும் உணவருந்தும் குடும்பத்துக்கு இறைவனும் அவனது வானவர்களும் அருள்மாரி பொழிவதாக நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது'' என்று சுப்யான் கூறினார்கள்.

மனைவிக்குத் தூய உணவை - 'ஹலாலா'ன உணவைக் கொடுக்கும் விஷயத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். மனைவியின் காரணமாக அவன் எந்தத் தவற்றையும் செய்யத் துணியலாகாது. இது சம்பந்தமான விளக்கத்தை இதே நூலில் 'விளையும் விபரீதங்கள்' என்னும் தலைப்பின் கீழ் வெளியிட்டிருக்கிறேன்.

7. மாதவிடாயைப் பற்றியும் அப்போது நடந்து கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றியும் மணமகன் தெரிந்து கொள்ள வேண்டும். மாதவிடாயின் போது தவிர்க்கப்பட வேண்டிய காரியங்களையும் அவன் அறிந்து கொள்ள வேண்டும். தொழுகையின் சட்ட திட்டங்கள், மாதவிடாயின் போது மணப்பெண் செய்ய வேண்டியவை, தவிர்க்க வேண்டியவை யாவற்றையும் அவளுக்கு அவன் கற்றுக்கொடுக்க வேண்டும்.

இவை யாவும் கணவனின் மகத்தான பொறுப்புகள். குடும்பத்தினரை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றுமாறு அவன் இறைவனால் கட்டளையிடப்பட்டிருக்கிறான்; ''உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள்!''

இறைவழி நடந்த உத்தமர்களின் கொள்கைகளை அவள் உள்ளத்தில் படிய வைப்பது கணவனுக்கு முக்கியம். மார்க்கத்திற்கு முரணான துர் எண்ணங்களை அவள் உள்ளத்தை விட்டும் பிடுங்கி எறிய வேண்டும். மார்க்கத்தின் வரம்புகளை அலட்சியப்படுத்துவது கொடிய குற்றம் – இறைவன் தண்டிக்கத் தவற மாட்டான் என்று அவளுக்குப் போதிக்க வேண்டும். மாதவிடாய் சம்பந்தமாகவும் வியாதியால் ஏற்படும் உதிரவோட்டம் சம்பந்தமாகவும்-



அவசியமான சட்ட திட்டங்களை அவளுக்குக் கண்டிப்பாய் கற்பிக்க வேண்டும். ஆனால் வியாதியால் ஏற்படும் உதிர வோட்டத்தைப் பற்றிய சட்டங்கள் விரிவானவை. எனவே அவை அனைத்தையும் இங்குக் கூறுவது சாத்தியமில்லை.

மாதவிடாயின் போது பெண்கள் தொழக் கூடாது. ஆனால் சில சமயங்களில் 'மஃரிப்' தொழுகைக்குச் சற்று முன்னால் உதிரவோட்டம் நின்று விடுவதுண்டு. ஒரே ஒரு 'ரகஅத்'தேனும் தொழுவதற்குப் போதிய கால இடைவெளி இருந்தால், அவள் 'லுஹர்' அஸர்' ஆகிய இரு தொழுகைகளையும் நிறைவேற்ற வேண்டும். இதே போன்று ஒரே ஒரு 'ரக்அத்' தொழுகைக்குப் போதிய அவகாசத்துடன் 'பஜ்ர்' தொழுகைக்கு முன்னால் உதிரவோட்டம் நின்று விட்டால் அவள் மஃக்ரிபையும் இஷாவையும் நிறைவேற்ற வேண்டும்.

இவை பெண்களுக்குப் போதிக்க வேண்டியவற்றில் சில.

மனைவிக்குப்போதிக்கும் விஷயத்தில் கணவன் அக்கறை செலுத்தினால், அறிஞர்களிடம் கேட்டுத் தெளிவதற்காக அவள் எங்கும் புறப்பட வேண்டிய தேவை இல்லாமற் போய்விடும்.

கணவன் தேவையான அளவுக்குச் சட்டங்கள் தெரியாதவனாயிருக்கலாம். இது போன்ற சந்தர்ப்பங்களில் மனைவிக்குப் பதிலாய்க் கணவன் அறிஞர்களிடம் கேட்டு வரலாம்; அறிஞர்கள் அறிவுறுத்தியவற்றை மனைவிக்குப் போதிக்கலாம். கணவன் இப்படிச் செய்யாவிடில் அவள் அறிவு பெறும் எண்ணத்துடன் அறிஞர்களைக் காணப் புறப்

படலாம் - இல்லை,புறப்பட வேண்டும்! அவளைத் தடுப்பது குற்றமாகும்.

தன் மீது விதிக்கப்பட்டுள்ள கடமையான சட்டங் களைத் தெரிந்து கொண்ட பின்னர் அவள் எந்த உபதேச மன்றத்திற்கும் செல்லக் கூடாது; கற்கும் எண்ணத் துடனாயினும் சரி; அவள் எங்கும் போகக் கூடாது; ஆனால் கணவன் அனுமதி கொடுத்தால் அவள் புறப்பட்டுச் செல்லலாம்... இதில் தவறில்லை.

மாதவிடாய்; வியாதி உதிரவோட்டம் ஆகியவற்றைப் பற்றி மனைவி அறியாதிருக்கும் போது கணவனும் அவளுக்கு அவற்றைக் கற்றுக் கொடுக்காவிடில் பல விபரீதங்கள் உருப்பெற முடியும்! அவன் தவறு செய்வதோடு அதில் தன் மனைவியையும் கூட்டாக்கிக் கொள்ள நேரிடும்.

8. மணமகனுக்கு மணப்பெண் இரண்டாவது மனைவி யாயிருந்தால் அவன் இரு மனைவிகளின் மத்தியில் நியாயத்தோடு நடந்து கொள்ள வேண்டும். ஒருத்தியின் விஷயத்தில் நடந்து கொள்வது போல் மற்றொருத்தியின் விஷயத்திலும் நடந்து கொள்ள வேண்டும்.

''இரு மனைவிகளைப் பெற்ற ஒருவன் அவர்களின் மத்தியில் பாகுபாடு காட்டினால் மறுமையில் அவன் கேவலப்படுத்தப்படுவான்'' என்று கூறப்பட்டுள்ளது.

உணவு - உடை கொடுப்பது, இரவில் படுப்பது முதலியவற்றில் பாகுபாடின்றி நடந்து கொள்ளலாம். இது மனிதனின் ஆற்றலுக்கு உட்பட்டது. இதுதான் அவசியம்.



ஒரு மனைவியின் மீது மோகம் பிறப்பதும் அதன் விளைவாக அவளைப் புணர்வதும் மனிதனின் சக்திக்கு, அப்பாற்பட்டவை. ''மோகம் கொள்ளும் விஷயத்தில் மனைவிகளின் மத்தியில் உங்களால் பாகுபாடின்றி நடந்து கொள்ள முடியாது!'' என்று இறைவனே கூறிவிட்டான். மோகத்தில் பாகுபாடு ஏற்படுவது போல் புணர்ச்சியிலும் பாகுபாடு அவசியம் ஏற்படும்!

உணவு, உடை அளிக்கும் விஷயத்திலும் இரவில் தங்கும் விஷயத்திலும் திருநபியவர்கள் தங்கள் மனைவி யரின் மத்தியில் எத்தகைய பாகுபாட்டையும் ஏற்படுத்த வில்லை; ''இறைவனே! என் சக்திக்குட்பட்ட விஷயத்தில் ஏதோ என்னாலியன்றவரை நேர்மையோடு தான் நடந்து வருகிறேன். ஆனால் என் சக்திக்கு அப்பாற்பட்ட காரியங் களில் பாகுபாடின்றி நடந்து கொள்வது எனக்குச் சாத்தியமில்லையே!'' என்று பிரார்த்திப்பார்களாம்! ஒரு பெண்ணின் மீது அன்பு ஏற்படுவது மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்டது. எல்லா மனைவிகளையும் ஒரே வித அன்போடு, ஏற்றத் தாழ்வு இல்லாத இச்சையோடு பார்ப்பது மானிடனின் ஆற்றலை விட்டு அப்பாற்பட்டது. இதைத் தான் திருநபியவர்கள் தங்கள் பிரார்த்தனையில் குறிப்பிட் டார்கள். ஒருபெண்ணின் மீது ஓர் ஆணின் உள்ளத்தில் அன்பை - மோகத்தை ஏற்படுத்துவது இறைவன். இது விஷயத்தில் பாகுபாடின்றி நடந்து கொள்வது சாத்தியமேயில்லை.

அன்னை ஆயிஷா மற்ற எல்லாரையும் விடத் திரு நபியவர்களின் பேரன்புக்கு உரியவராயிருந்தார்கள் என்பது தெளிவான விஷயம். திருநபியவர்களின் மற்ற மனைவி யரும் இதனை அறிந்து தான் இருந்தார்கள். ஆனால்

அவர்கள் மறுக்கவில்லை. அண்ணலவர்கள் ஒரு வழி வகுத்து வைத்திருந்தார்கள். ஒரு நாளிரவு அவர்கள் ஒரு மனைவியின் வீட்டில் படுத்தால், மறுநாளிரவு அவர்கள் மற்றொரு மனைவியின் வீட்டிற்குப் போய்விடுவார்கள்.

''நாளைக்கு யாருடைய முறை?'' என்று திரு நபியவர்கள் ஒரு சமயம் கேட்டார்கள்.

நபித் துணைவிகளில் ஒருவர் பதிலளித்தார்.'' ''ஆயிஷா வின் முறையை நினைத்துக் கொண்டுதான் நபியவர்கள் இப்படிக் கேட்கிறார்கள்.''

''நபியவர்களே! தாங்கள் ஆயிஷாவின் வீட்டில் அதிகமாகத் தங்குவதில் எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது...'' என்றார்கள் மற்றவர்கள்.

சூதா என்னும் மனைவியை நபியவர்கள் மணப் பிரிவினை செய்ய எண்ணியிருந்தார்கள். சூதா தன் முறையை ஆயிஷாவுக்குக் கொடுத்து விட்டார். இதன் படி அண்ணலவர்கள், ஆயிஷாவின் வீட்டில் இரண்டு இரவுகள் தங்கினார்கள். மற்றவர்கள் வீடுகளில் ஒவ்வோர் இரவு படுத்தார்கள். சூதாவின் வீட்டில் அவர்கள் படுப்பதே யில்லை. அவர் தாம் தம்முறையை ஆயிஷாவுக்கு அளித்து விட்டாரே!

இது சம்பந்தமாக ஆயிஷா பிராட்டியார் ஒருநாள் திருநபியவர்களிடம் முறையிட்டார்கள். ''தயவு செய்து சூதாவுக்குத் 'தலாக்' - மணப் பிரிவினை – கொடுத்து விடாதீர்கள்; நபியின் மனைவி என்னும் பெயருடன் அவர் மறுமையில் எழுப்பப்படட்டுமே!...''



திரு நபியவர்கள் சம்மதித்தார்கள்.

9. மணமக்களிடையே சண்டை சச்சரவு ஏற்படுவதுண்டு. இருவருமே ஒருவரையொருவர் சச்சரவுக்கு இழுப்பதுண்டு. இது போன்ற சந்தர்ப்பங்களில் புது மனிதன் ஒருவன் மூலம் சச்சரவைத் தீர்க்கலாம். அது பற்றிய இறை கருத்தை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரலாம். இவ்வாறு சண்டைக்கு இழுப்பது மனைவியாயிருந்தால், அவளை அடக்கியாள வேண்டியது கணவனின் பொறுப்பு. பலவந்தமாகவே அவளை வழிக்குக் கொண்டு வர வேண்டும். இதே போன்று, அவள் தொழுகையை விட ஆரம்பித்தால் நிர்ப்பந் தப்படுத்தி அவளைக் கணவன் தொழுகையில் ஈடுபடுத்த வேண்டும். இவற்றையெல்லாம் ஒரே மூச்சில் செய்து விட முடியாது; படிப்படியாய்ச் செய்ய வேண்டும்.

முதலில் அவளுக்கு உபதேசம் செய்ய வேண்டும். தவறான காரியங்களில் ஈடுபடுவது குறித்து அவளை எச்சரிக்க வேண்டும். இறையச்சத்தை அவளுள் ளத்தில் உண்டாக்க வேண்டும். அவள் கட்டுப்பட்டு வராவிட்டால் படுக்கையின் போது அவளைப் பிரித்து விட வேண்டும். இவ்வாறு மூன்று இரவுகள் அவளைப் பிரித்து வைத்துப் பார்க்கலாம். இதற்கும் அவள் வழிக்கு வராவிட்டால் காயப்படாமல், எலும்பு நொறுங்காமல் அவளை அடிப்பதில் தவறில்லை. ஆனால் அவள் முகத்தில் அடிக்கக் கூடாது. இது தடுக்கப்பட் டிருக்கிறது.

''பெண்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?'' என்று திருத்தூதர் அவர்கள் வினவப் பட்டார்கள்.

''அவளுக்குப் பசிக்கும் போது உணவளியுங்கள். தேவைப்படும் போது துணிகள் வாங்கிக் கொடுங்கள். அவள் முகத்தைக் கோரப்படுத்தாதீர்கள். கடின முறையில் அவளை அடிக்காதீர்கள். படுக்கையில் மட்டும் அவளை விலக்கி வையுங்கள்.''

மார்க்கத்தின் வரம்புகளை மீறினாள் என்னும் காரணத்தால் மனைவியைப் பத்து நாட்களிலிருந்து இருபது நாட்கள் வரை - ஒரு மாத காலம் வரையும் கூடக் கணவன் வெறுத்திருக்கலாம். இவ்வாறு திரு நபியவர்கள் நடந் திருக்கிறார்கள்.

திரு நபியவர்கள் ஒரு சமயம் தங்கள் மனைவி ஸைனபுக்கு ஏதோ ஓர் அன்பளிப்பை அனுப்பினார்கள். அதை ஸைனப் பெற்றுக் கொள்ளவில்லை. போதாததற்கு மரியாதைக் குறைவாக ஏதேதோ சொல்லி அனுப்பி விட்டார்.

அண்ணலவர்கள் வருந்தினார்கள். ''நீங்கள் என்னைக் கேவலப்படுத்துவது இருக்கட்டும். உங்கள் எல்லோரையும் கேவலப்படுத்துவது இறைவனுக்கு எளிதான காரியம்!'' என்றார்கள். இதன் பிறகு அவர்கள் ஒரு மாதம் வரை ஸைனபை வெறுத்திருந்தார்களாம்!

*10.* புணர்ச்சியின் போது கவனிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் சில இருக்கின்றன. அவற்றை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும்.



போகத்தில் ஈடுபடுவதற்கு முன்னால் 'பிஸ்மில்லாஹ் வுடன் 'இக்லாஸ்'* என்னும் திருமறையின் அத்தியாயத்தை ஓத வேண்டும். இறைவனின் பெருமையையும் அவன் வல்லமையையும் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். ''இறைவனே! எனது முதுகெலும்பிலிருந்து நேர்மை தவறாத சந்ததியினரை உண்டாக்கியருள்வாயாக!'' என்றும் இறைஞ்ச வேண்டும்.

''ஒரு மனிதன் போகத்தில் ஈடுபடும் போது, இறைவனே! எங்களை விட்டு ஷைத்தானை அப்புறப் படுத்து. எங்களுக்கு நீ அளிப்பவற்றில் அவனைத் தலையிடச் செய்யாதே!' என்று இறைஞ்சினால், பிறக்கும் குழந்தைக்கு ஷைத்தானின் தீங்கு ஏற்படாது!'' என்று அண்ணலவர்கள் கூறினார்கள்.

விந்து வெளிப்படும் சமயத்தில், நாவை அசைக்காமல், உசுப்பாமல் இவ்வாறு மனத்தில் சொல்லிக் கொள்ள வேண்டும்: ''நீர்த் துளியிலிருந்து மானிடனைப் படைத்த இறைவனுக்கே புகழனைத்தும் உரித்தாகட்டும்!'' இது திருமறையின் வசனங்களில் ஒன்று.

புணர்ச்சியின் போது மக்காவின் தேவாலயத்திசையை எதிர்நோக்கக்கூடாது. இது தேவாலயத்திற்கு நாம் கொடுக் கும் மரியாதை. ''அமைதியாக இரு!'' என்று மனைவி யிடம் கூற வேண்டும். போகத்தின் போது கணவன் தன்

*திருமறையில் 114 அத்தியாயங்கள் இடம் பெற் றிருக்கின்றன. 'இக்லாஸ்' என்னும் அத்தியாயம் 112-ஆவதாக இடம் பெறுகிறது. இந்த அத்தியாயத்தைப் பொது மக்கள் 'குல்ஹுவல்லாஹு' என்று குறிப் பிடுகிறார்கள்.

மீதும் தன் மனைவி மீதும் ஒரு துணியைப் போட்டுக் கொள்வது முக்கியம்.

போகத்தில் ஈடுபடும் போது திரு நபியவர்கள் தலையில் ஒரு துணியால் முக்காடிட்டுக் கொள்வார்கள்; குரலைத் தாழ்த்திக் கொள்வார்கள்.

''கழுதைகளைப் போன்று நீங்கள் முழு நிர்வாண முறையில் போகத்தில் ஈடுபடாதீர்கள்'' என்று திரு நபியவர்கள் கூறினார்கள்.

போகத்திற்கு முன்னால் உணர்ச்சியூட்டும் இனிமையான உரையாடல், முத்தமிடுதல் ஆகியவற்றிற்காகச் சிறிது நேரத்தைச் செலவிட வேண்டும்.

''மிருகங்களைப்போன்று மானிடன் தன் மனைவியைப் புணரக் கூடாது. ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் ஒரு தூதன் இருக்க வேண்டும்'' என்று அண்ணலவர்கள் கூறினார்கள்.

''தூதனா? யார் அவன்?'' என்று நண்பர்கள் கேட்டார்கள்.

''முத்தம்; உணர்ச்சியூட்டும் உரையாடல்!''

அண்ணலவர்கள் விளக்கினார்கள். ''ஒரு மனிதன் தன் மனைவியை அணுகுகிறான். அவளை அவன் ஆலிங்கனம் செய்யவில்லை. மனைவியின் காமம் தணிவதற்கு முன்பே அவன் தன் காமத்தைத் தணித்துக் கொள்கிறான் - இவ்வாறு நடப்பது சரியல்ல.''



ஒவ்வொரு மாதத்திலும் முதலிரவு, பதினைந்தாம் இரவு, கடைசி இரவு ஆகிய தேதிகளில் புணர்வது 'மக்ரூஹ்' – வெறுக்கப்படுவது! இந்தத் தேதிகளில் ஷைத்தானின் சம்பந்தம் ஏற்படுவதாகச் சில நூல்கள் குறிக்கின்றன.

வெள்ளி பகல், வெள்ளியிரவு ஆகியவற்றில் புணர்வதைச்சில அறிஞர்கள் 'முஸ்தஹப்பு' என்று கூறுகிறார்கள்.

ஆண் மகன் தன் காமம் தணிந்ததும் மனைவியை விட்டுப் பிரிந்து விடக் கூடாது. சில சமயங்களில் அவளது காம உணர்ச்சி நேரப்பட நிற்பதுண்டு. அவளது காமம் தணியுமுன் கணவன் அவளை விட்டுப் பிரியும் போது அவளுக்கு வேதனை ஏற்படுகிறது. இதனால் அவள் கணவனை வெறுக்கவும் செய்யலாம். தனக்குக் காமம் தணியவில்லை என்பதைக் கூறுவதற்கும் அவள் வெட்கப்படுவாள்!

நான்கு தினங்களுக்கு ஒரு தடவை மனைவியைக் கணவன் புணர வேண்டும். நான்கு மனைவிகள் வரை திருமணம் செய்து கொள்ள மார்க்கத்தில் அனுமதியுண்டு. இந்த அளவுக்குப் போகத்தைத் தள்ளிப் போடுவதில் தவறில்லை. ஆனால் தேவை ஏற்படும் போது அதிகமாகவோ குறைவாகவோ புணரலாம் – தடையில்லை. ஏனெனில் மனைவியின் கற்பைக் காப்பது கணவனுக்குக் கடமை!

மாதவிடாயின் போது புணரக் கூடாது. மாதவிடாய் நின்று விட்டாலும் அவள் குளிப்பதற்கு முன் புணரக் கூடாது. இவ்வாறு புணர்வதைத் திருமறையின் வசனங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றன. மாத விடாயின் போது

புணர்வதால் பிறக்கும் குழந்தை குஷ்டரோகியாகிறது என்றும் வரையப்படுகிறது. மாதவிடாயின் போது புணரக் கூடாது என்றாலும், அவள் உடலின் மற்ற எல்லாப் பகுதி களிலிருந்தும் இன்பம் துய்க்கலாம். வேறு உபயோகத் திற்குள்ள 'வேறு பகுதி'யைப் புணர்ச்சிக்குப் பயன் படுத்தக் கூடாது. ஏனெனில் மாதவிடாயின் போது புணரக் கூடாது என்பதற்குக் காரணம் அவள் புணர்ச்சியால் வேதனை யடைகிறாள் என்பதே. 'வேறு பகுதி'யில் புணரும் போதும் வேதனை ஏற்படத்தான் செய்யும். எனவே இந்த 'வேறு பகுதி'ப் புணர்ச்சி தடுக்கப்படுகிறது. பார்க்கப்போனால், மாதவிடாய் புணர்ச்சியை விட இந்தச் செயல் கொடியது - இது 'ஹராம்!''

மாதவிடாய்க் காலத்தில் மனைவியின் கரத்தைப் பயன் படுத்திக் கொண்டு காமத்தைத் தணிப்பதில் தவறில்லை. அப்போதெல்லாம் அவள் முழங்காலுக்கு மேல் உள்ளாடை ஒன்று அணிந்து கொள்ள வேண்டும்.

இவை சில ஒழுங்கு முறைகள்.

சேர்ந்து உண்ணுவது, சேர்ந்து படுப்பது - இவை எதுவும் மாதவிடாய்க் காலத்தில் தடுக்கப்படவில்லை. அவளை ஒதுக்கி வைக்க வேண்டும் என்பது கிடையாது.

ஒருவன் இரண்டாம் தடவையாய்த் தன் மனைவியைப் புணர விரும்பினால் அவன் முதலில் தன் அபத்தைக் கழுவிக் கொள்ள வேண்டும். தூக்கத்தில் ஒருவனுக்கு விந்து வெளிப் பட்டிருக்கலாம்! அவன் தன் மனைவியைப் புணர விரும்பினால், முதலில் அவன் தன் அபத்தைக் கழுவ வேண்டும் அல்லது சிறுநீர் கழிக்க வேண்டும். அதன் பிறகு



தான் புணர்ச்சி. முன்னிரவில், தூங்குவதற்கு முன்னால் புணர்வது 'மக்ரூஹ்!' அசுத்த நிலையிலுள்ளவன் தூங்கவோ உண்ணவோ விரும்பினால் முதலில் அவன் முறைப்படி 'உலூ' செய்து கொள்ள வேண்டும். இது 'சுன்னத்து' - அண்ணலவர்கள் செய்து வந்தது.

''அசுத்த நிலையிலுள்ளவன் தூங்கலாமா?'' என்று உமர் கேட்டார்கள்.

''தாராளமாக! ஆனால் 'உலூ' செய்து கொள்ள வேண்டும்!'' என்று திருநபியவர்கள் விடையளித் தார்கள்.

என்றாலும் இது விஷயத்தில் ஓரளவுக்குச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் அண்ண லவர்கள் அசுத்த நிலையில் இருந்த போது தண்ணீரையே தொடாமல் தூங்கியிருக்கிறார்கள். ஆனால் அசுத்த நிலையிலிருக்கும் போது முடி எடுப்பது, நகம் அறுப்பது முதலிய எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாது.

புணர்ச்சியில் ஈடுபட்ட ஒருவன் விந்து வெளியேறும் சமயத்தில் விலகிக் கொள்வது சரியல்ல. அறிஞர்களின் மத்தியில் இது விஷயத்தில் அபிப்பிராயப் பேதமுண்டு. இதில் தவறில்லை என்பது சிலரது வாதம். வேறு சிலர் இதனை 'மக்ரூஹ்' என்று குறிப்பிடுகிறார்கள். இப்படிச் செய்வதை மனைவி விரும்பினால் அதில் தவறில்லை என்று இன்னும் சிலர் வாதிக்கிறார்கள். அடிமைப் பெண் ணிடம் மட்டிலும் இப்படி நடந்து கொள்ளலாம் என்பது மற்றொரு சாராரின் வாதம்.

புணர்ச்சியில் ஈடுபட்டு விந்து வெளியேறும் சமயத்தில் விலகிக் கொள்வது தவறான செயலல்ல என்பது நம் வாதம். ஆனால் இவ்வாறு செய்யாமலிருப்பதுதான் நல்லது. எனவே அப்படிச் செய்வது 'மக்ரூஹ்'

'ஹராமா'ன காரியங்கள் சிலவற்றை 'மக்ரூஹ்' என்று குறிப்பிடுகிறோம். ஆனால் மேலே குறிப்பிட்டது இத் தகைய 'மக்ரூஹ்' அல்ல என்பதை வலியுறுத்திக் கூறு கிறேன். ஏனெனில், திருமறையின் கருத்துக்களிலிருந்து தான் ஒரு காரியத்தை 'ஹராம்' எனக் கொள்ள முடியும். ஆனால் மேலே குறிப்பிட்ட செயலை மறுக்கத் தகுந்த எந்த வசனமும் திருமறையில் காணப்படவில்லை.

குழந்தை பெறுவது முக்கியமான காரியம் என்பதை மேலே பார்த்தோம். குழந்தை உருவாவதற்கு நான்கு காரணங்கள் இருக்கின்றன. முதலில் திருமணம்; இரண்டாவது போகம்; மூன்றாவது விந்து வெளியேறும் வரை பொறுத்திருப்பது; நான்காவது அவன் விந்துத்தளி மனைவியின் கர்ப்பப் பையை அடையும் வரை வீற்றி ருப்பது. இவை நான்கும் முக்கியமான காரணங்கள். இவற்றில் நான்காவது காரணம் அதி முக்கியமானது. இந்தக் கடைசிக் காரணத்துக்குச் சில படித்தரங்கள் இருக்கின்றன. முதலில் ஆணின் விந்து பெணணின் கர்ப்பப் பையை அடைய வேண்டும். பிறகு பெண்ணின் நீர்த்துளிகளுடன் அது கலக்க வேண்டும். அதன் பிறகு அது உயிரோட்டத்தை ஏற்கும் பொருளாக உருமாற வேண்டும். இவற்றை எல்லாம் தடை செய்வது குற்றமாகும்.



விந்துருவிலுள்ள குழந்தையை வீணாக்குவது குற்றம். அது மாமிசப் பிண்டமாய்த் திரண்டு விட்டால் அதை அழிப்பது இன்னும் பெரிய குற்றம். குழந்தையின் உடலில் – அந்த மாமிசப் பிண்டத்தில் உயிரோட்டம் தோன்றிய பிறகு அதனை அழிப்பது மிகப் பெரிய குற்றம்; கொலை!

ஆணின் நீர்த்துளி பெண்ணின் கர்ப்பப் பையை அடைய வேண்டும் என்றும், அது கருத்தரிப்பதற்கு நான்காவது காரணம் என்றும் மேலே குறிப்பிட்டேன். ஏனென்றால், ஆண் குறியிலிருந்து விந்து வெளிப்பட்டு விடுவதால் மட்டும் குழந்தை உருவாகிவிடாது. ஆணின் நீர்த்துளியால் மட்டும் குழந்தையை உண்டாக்கி விட முடியாது. ஆண், பெண் இருவரின் நீர்த்துளிகளும் ஒன்றோ டொன்று கலக்க வேண்டும். ஒன்று, ஆணின் விந்துவுடன் பெண்ணின் விந்து கலக்க வேண்டும்! அல்லது, ஆணின் விந்துவுடன் பெண்ணின் மாதவிடாய் உதிரம் கலக்க வேண்டும். இதற்குப் பிறகுதான் குழந்தை உருவாக முடியும். முதுகெலும்பிலுள்ள உதிரத் துளிகளிலிருந்து குழந்தை உருவாக முடியாதது போல், அது ஆண் குறியிலிருந்து விந்துருவில் வெளியான பிறகும் குழந்தை உருவாக முடியாது – பெண்ணின் நீர்த் துளியுடனோ, உதிரத்துடனோ கலந்தாலன்றி.

இதன் அடிப்படையில் தான் போகத்தில் ஈடுபட்டு விந்து வெளியேறும் நேரத்தில் விலகிக் கொள்வது குறித்து நாம் தீர்மானித்தோம்.

*11.* குழந்தை பிறந்ததும் கவனிக்க வேண்டிய காரி யங்கள் சில இருக்கின்றன. குறிப்பாக அப்போது கணவன் ஐந்து காரியங்களை கவனிக்க வேண்டும்.

**முதற் காரியம்:** பிறந்தது ஆண் குழந்தை என்னும் காரணத்தால் அதிக மகிழ்ச்சியோ, பிறந்தது பெண் குழந்தை என்னும் காரணத்தால் அதிகத் துயரமோ அடையக் கூடாது. ஏனெனில், இவ்விரண்டில் அவனுக்குப் பயன் தரவல்லது எது என்று அவனுக்கே தெரியாது. எத்தனையோ பேர் தங்கள் ஆண் மக்கள் குறித்து வருந்துகிறார்கள். ''இவன் எனக்குப் பிறக்காமல் இருந்திருக்கக் கூடாதா?'' என்று அங்கலாய்க்கிறார்கள். இது ஒரு புறமிருக்க, பெண்ணைப் பெற்ற எத்தனையோ பேர் திருப்தியோடும், மகிழ்ச்சியோடும் வாழ்வதை நாம் பார்க்கிறோம். பெண் மக்களை ஒருவன் அன்போடு பராமரிக்கும் போது, அவனுக்குக் கிடைக்கும் நற்கூலி அதிகம் என்பதையும் மறந்து விட முடியாது.

''ஒரு பெண்ணைப் பெற்ற ஒருவன் அவளுக்கு ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்தால், அவளுக்கு நல்லவிதமாக உணவளித்தால், தனக்கு இறைவன் கொடுத்தவற்றை அவன் அவளுக்குக் கொடுத்தால் அவன் மறுமையில் பெரும்பேறு அடைவான்'' என்று அண்ணலவர்கள் கூறினார்கள்.

பிறிதோரிடத்தில் இப்படிக் கூறினார்கள்: ''இரண்டு பெண்களை அல்லது இரண்டு தங்கைகளைப் பெற்றவன் அவர்களிடம் நல்ல முறையில் நடந்து கொண்டால் அவன் மறுமையில் சுவனத்தில் என்னோடிருப்பான்!''

மற்றோரிடத்தில், ''கடைத்தெருவிற்குச் சென்று ஒருவன் தன் மனைவிக்காக ஒரு பொருளை வாங்கி வந்தால் அவன் மீது இறைவனின் அன்புப் பார்வை விழுந்து விடும் - மனைவியின் மீது அவன் அன்பைச் செலுத்தியதால்.



எனவே அவனை மறுமையில் இறைவன் தண்டிக்க மாட்டான்!''

ஏறத்தாழ இதே கருத்தைப் பிறிதோரிடத்தில் அண்ணலவர்கள் வெளியிட்டிருப்பதாக அனஸ் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

''ஒரு மனிதனுக்கு மூன்று பெண்கள் அல்லது மூன்று சகோதரிகள் இருந்தால் - அவர்களால் ஏற்படும் கஷ்டங்களையும் துன்பங்களையும் அவன் சகித்துக் கொண்டால் - அவனை இறைவன் சுவனத்தில் பிரவேசிக்கச் செய்வான்'' என்று திருநபியவர்கள் கூறினார்கள்.

''இருவர் இருந்தால்?'' என்று ஒரு நண்பர் கேட்டார்.

''இருவர் இருந்தாலும் அப்படித்தான்!''

''ஒரே பெண், அல்லது ஒரே சகோதரி இருந்தால்?''

''அதற்கும் அப்படித்தான்!'' என்று அண்ணலவர்கள் விடையிறுத்தார்கள்.

**இரண்டாம் காரியம்:** பிறந்த குழந்தையின் செவிகளில் 'அதான்' சொல்ல வேண்டும். பாத்திமா அவர்கள் ஹஸனைப் பெற்றெடுத்த போது அண்ணலவர்கள் ஹஸனின் காதுகளில் 'அதான்' சொன்னார்கள்.

''குழந்தை பிறந்ததும் அதன் வலச் செவியில் அதானும் இடச் செவியில் 'இகாமத்'தும் சொல்லப்பட்டால் அந்தக் குழந்தையை வியாதி அணுகாது'' என்று திருநபியவர்கள் கூறினார்கள்.

குழந்தை பேசத் துவங்கும் போது ''லா இலாஹ இல்லல்லாஹ்'' என்று கூறச் செய்ய வேண்டும். இது 'முஸ் தஹப்பு'. இதனால் குழந்தையின் முதற் பேச்சே சிறப் புள்ளதாய் அமைந்து விடுகிறது. ஏழு வயதானதும் சிறுவனுக்கு 'கத்னா' (ஆண் குறியின் நுனிப் பகுதியைத் துண்டிப்பது) செய்ய வேண்டும். இதற்கு ஆதாரமாக நபிக் கருத்துக்கள் இருக்கின்றன.

''நீங்கள் பெயர் வைக்கும் போது, 'அப்து'– அடிமை - என்னும் வார்த்தையை இணைத்துக் கொள்ளுங்கள்'' என்று அண்ணலவர்கள் கூறினார்கள்.

''அப்துல்லாஹ் அப்துற் றஹ்மான் ஆகிய பெயர்களே இறைவனுக்கு மிகவும் விருப்பமானவை!''

மீண்டும் கூறினார்கள்: ''முஹம்மது என்னும் என் பெயரையும் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அபுல் காஸிம், அபூ இப்ராஹீம் முதலான என் இணைப்புப் பெயர்களை வைக்காதீர்கள்!''

இதுபற்றி அறிஞர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். அந்தக் காலத்தில் அண்ணலவர்களை அபுல் காஸிம் என்ற ழைத்தார்கள். தற்போதைய நிலையில் அந்தப் பெயரை உபயோகிப்பதில் தவறில்லை, என்றாலும் அண்ணலவர்கள் உபயோகிப்பது போல் முஹம்மது, அபுல்காசிம் ஆகிய இரு பெயர்களையும் ஒரே மனிதன் உபயோகிக்கக் கூடாது.

''என் இயற் பெயரையும் என் இணைப்புப் பெயரை யும் ஒன்று சேர்க்காதீர்கள்!'' என்று நபியவர்கள் கூறினார்கள்.



அண்ணலவர்களின் காலத்தில் அபூ ஈஸா (ஈஸாவின் தந்தை) என்று ஒருவர் இருந்தார்.

''இப்படிப் பெயர் வைப்பது 'மக்ருஹ்' – ஈஸா நபிக்குத் தந்தை கிடையாது!'' என்று அண்ணலவர்கள் கூறினார்கள்.

''குறைப் பிரசவம் ஏற்பட்டாலும் பெயர் வைப்பது முக்கியமே!''

''குறைப் பிரசவத்தின் போது எப்படிப் பெயர் வைக்க முடியும்?'' என்று உமர் பின் அப்துல் அஜீஸ் கேட்டார். ஆண், பெண் என்று கண்டுபிடிப்பது சாத்தியமில்லையே!''

அப்துற் றஹ்மான் விடையிறுத்தார்: ''ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருந்தக்கூடிய பெயர்கள் இருக்கவே இருக்கின்றன. ஹம்ஸா, இராமத், தல்ஹா, உத்பா – இவை ஆணுக்கும் பொருந்தும்; பெண்ணுக்கும் பொருந்தும்!

''உங்கள் பெயர்களை அழகுபடுத்திக் கொள்ளுங்கள்'' என்பது நபிக் கருத்து. வெறுக்கத்தக்க பெயருள்ளவன் தன் பெயரை மாற்றிக் கொள்வது 'முஸ்தஹப்பு''

அண்ணலவர்களின் மனைவி ஸைனபுக்கு ஆரம்பத்தில் 'புர்ரா' என்றே பெயர் இருந்தது. அண்ணலவர்கள் தாம் அதனை ஸைனப் என்று மாற்றினார்கள்.

அப்லஹ், யஸார், நாபிவு, பரகத்து முதலான பெயர்கள் வைப்பதைத் திரு நபியவர்கள் தடுத்திருக்கிறார்கள். ''இங்கு பரகத்து –செழிப்பு– இருக்கிறாரா?'' என்று கேட்க நேரிடலாம். ''இங்கு பரக்கத்து இல்லை. – வெளியில்

போய் விட்டார்!'' என்று பதில் கொடுக்கும்படியாகும், சிந்தித்துப் பார்!

**நான்காம் காரியம்:** ஆண் குழந்தையாயிருந்தால் இரண்டு ஆடுகளும் பெண் குழந்தையாயிருந்தால் ஓர் ஆடும் அறுக்க வேண்டும். ஆண் குழந்தை பிறந்த போது ஓர் ஆட்டை மட்டிலும் அறுப்பதில் தவறில்லை. இதில் சலுகையுண்டு.

''ஆண் குழந்தை பிறந்த போது திரு நபியவர்கள் இரண்டு ஆடுகளை அறுக்குமாறு கட்டளையிட்டார்கள். பெண் குழந்தை பிறந்த போது ஓர் ஆட்டை அறுக்குமாறு உத்தரவிட்டார்கள்'' என்று அன்னை ஆயிஷா கூறினார்கள்.

ஆனால் பாத்திமாவுக்கு ஹஸன் பிறந்த போது ஓர் ஆட்டை மட்டும் அறுக்குமாறு திருநபியவர்கள் பணித்தார்கள்–இதில் ஓரளவு சலுகை அளிக்கப்படுகிறது. பிறந்தது ஆணோ, பெண்ணோ ஒரே ஓர் ஆட்டை அறுத்தாலே போதுமானது.

குழந்தையின் முடியின் எடைக்குத் தங்கத்தையோ வெள்ளியையோ தர்மம் செய்யலாம். இது திருநபியவர்களின் நடைமுறையிலுள்ளது. ஹுஸைன் பிறந்த ஏழாவது நாள் அவரது தலைமுடியைச் சிறைக்கு மாறு அண்ணலவர்கள் பாத்திமாவிடம் கூறினார்கள். அந்த முடியின் எடைக்குச் சமமான வெள்ளியை தர்மம் செய்யுமாறு கட்டளையிட்டார்கள்.

**ஐந்தாம் காரியம் :** குழந்தை பிறந்ததும் பேரீச்சங் கனியை அல்லது ஏதேனும் இனிப்புப் பொருள்களைப்



பகிர்ந்தளிக்க வேண்டும். குழந்தை பிறந்திருப்பதை மக்களுக்கு இப்படித் தெரியப்படுத்தலாம்.

அஸ்மா கூறினார்கள்: ''குபா என்ற இடத்தில் நான் அப்துல்லாஹ்வைப் பெற்றெடுத்தேன். பின்னர் குழந்தையோடு அண்ணலவர்களிடம் வந்தேன். பேரீச்சங்கனியைக் கொண்டு வருமாறு திருநபியவர்கள் பணித்தார்கள். நான் கொண்டு வந்தேன். அண்ணலவர்கள் அதனைச் சுவைத்தார்கள். பின்னர் குழந்தையின் வாயில் துப்பினார்கள். என் மகன் உட்கொண்ட முதல் உணவு அவர்களின் எச்சில்...''

''இஸ்லாம் பரவி வரும் காலத்தில் பிறந்த முதல் குழந்தை அப்துல்லாஹ்'' என்று சில அறிஞர்கள் இந்தக் குழந்தையைக் குறிப்பிடுகிறார்கள். முஸ்லிம்கள் பெரிதும் பரவசமடைந்தார்கள்; ஏனெனில் யூதர்கள், முஸ்லிம்கள் மீது 'செய்வினை' செய்து விட்டதாகவும் அதனால் முஸ்லிம்களுக்கு இனிமேல் குழந்தை பிறக்காது என்றும் சிலர் கூறி வந்தார்கள். அப்துல்லாஹ் பின் ஸுபைரின் பிறப்பு இந்த வதந்திக்குச் சரியான மறுப்பு!

12. இது மணப் பிரிவினை சம்பந்தப்பட்ட விஷயம். மணப்பிரிவினை செய்வது மார்க்கத்தில் அனுமதிக்கப் பட்டதுதான். என்றாலும், அது இறைவனின் சினத்திற்கு இலக்கான செயல் என்பதை மணமகன் நினைவில் வைக்க வேண்டும். மணப் பிரிவினையின் போது மணமகளைத் துன்புறுத்தக் கூடாது. குற்றமற்றவளைத் தண்டிப்பது நியாயமல்ல. ''உங்களுக்குப் பெண்கள் அடிபணிந்து நடக்கும் போது மணப் பிரிவினைக்கு வழி தேடாதீர்கள்!'' என்கிறான் இறைவன்.

மணப்பெண்ணை மணமகனின் தந்தை வெறுத்தால் அவளை மணப்பந்தத்திலிருந்து பிரித்து விடுவது ஆகும்.

இப்னு உமர் இப்படிக் கூறினார்கள்.

''எனக்கு ஒரு மனைவி இருந்தாள். அவளை நான் விரும்பினேன். ஆனால் என் தந்தை அவளை வெறுத்தார். அவளை மணப்பந்தத்திலிருந்து பிரித்து விடுமாறு கூறிக் கொண்டிருந்தார். இது விஷயத்தைத் திரு நபியவர்களிடம் கூறினேன்.''

''அப்படியானால், இப்னு உமர்! அவளை நீர் மணப் பிணைப்பை விட்டுப் பிரித்து விடும்!'' என்று விடை யளித்தார்கள்.

இதிலிருந்து தந்தையின் உரிமை தனயனின் உரிமைக்கு முந்தியது என்று தெரிகிறது.

எந்தப் பெண்மணியும் தனக்கு மணப்பந்தத்திலிருந்து விடுதலை அளிக்குமாறு கணவனிடம் கேட்கக் கூடாது.

''பாதகமான சூழ்நிலை ஏற்படுவதற்கு முன் மணப் பிரிவினை கோரும் பெண்மணி சுவனத்தின் வாடையையும் அனுபவிக்க மாட்டாள்'' என்று திருத்தூதர் அவர்கள் கூறினார்கள்.

''... அவளுக்குச் சுவனம் ஹராம்'' என்றும் கூறப் படுகிறது.

மணப் பிரிவினையின் போது கணவன் நான்கு காரியங்களை கவனிக்க வேண்டும்.



**முதற் காரியம்:** மாதவிடாய்க் காலத்தைக் கடந்து அவள் பரிசுத்த நிலையை அடைந்ததும் அவளை அவன் புணர் வதற்கு முன் மணப் பிரிவினை செய்ய வேண்டும். மாத விடாயின் போது மணப் பிரிவினை செய்வது 'ஹராம்'. இதே போன்று பரிசுத்த நிலையிலுள்ள அவளைப் புணர்ந்து மணப் பிரிவினை செய்யலாகாது. இதனால் அவள் 'இத்தா'* விலிருக்க வேண்டிய காலம் அதிகப்படுகிறது. மாதவிடாயின் போது மணப்பிரிவினை செய்தால் அந்த மாதவிடாய்க்குப் பிறகு வரக்கூடிய பரிசுத்த நிலைதான் கணக்கிடப்படும். புணர்ச்சிக்குப் பின் மணப் பிரிவினை செய்வதாலும் இதே விபரீதம் தான் ஏற்படுகிறது. அந்தப் புணர்ச்சியில் கருத்தரிக்கக் கூடும். எனவே அவள் பிரசவ மாகும் வரை நீண்ட 'இத்தா'வை மேற்கொள்ள வேண்டி வரும்.

ஒருவன் தன் மனைவியை மாதவிடாயின் போது மணப்பிரிவினை செய்து விட்டால், அவளை மீண்டும் அவன் தன்னோடு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

---

* இத்தா கணவனை இழந்தவள் அல்லது கணவனால் மணப்பிரிவினை செய்யப்பட்டவள் குறிப்பிட்ட கால வரம்பிற்குத் தனித்திருக்க வேண்டும். இவ்வாறு தனித்திருப்பதைத்தான் 'இத்தா' என்று நாம் குறிப்பிடுகிறோம். கணவனை இழந்தவள் நான்கு மாதம் பத்து நாட்கள் 'இத்தா' இருக்க வேண்டும். கர்ப்பிணி, பிரசவமாகும் வரை 'இத்தா' மேற்கொள்ள வேண்டும். மணப்பிரிவினை செய்யப்பட்டவள் மூன்று மாத காலம் - அல்லது மூன்று மாதவிடாய்க் காலம் வரை 'இத்தா'விலிருக்க வேண்டும். மாதவிடாய்க் காலத்தை ஹனபியைச் சேர்ந்தவர்கள் கணக்கிடுகிறார்கள். ஷாபியைப் பின்பற்றியவர்கள் மூன்று பரிசுத்த நிலைக் காலம் என்று கணக்கிடுகிறார்கள். இமாம் கஸ்ஸாலி அவர்கள் ஷாபியைச் சேர்ந்தவர்கள் என்பதை இங்கு நாம் நினைவு கூர வேண்டும்.

***இரண்டாம் காரியம் :*** மணப்பிரிவினையை வெளியிடும் போது அதனை ஒரே ஒரு தடவை கூறி அத்துடன் நிறுத்திக் கொள்வது நல்லது. இப்படிச் செய்தால் மார்க்கச் சட்டப்படி சிறிது நாட்களுக்குப் பிறகு அவளை மீண்டும் தன்னுடன் சேர்த்துக்கொள்ளலாம். மூன்று தடவை மணப்பிரிவினையைக் கூறிவிட்டால் – ''உன்னை மணப் பந்தத்திலிருந்து பிரித்து விட்டேன்'' என்று மும்முறை சொல்லி விட்டால் அவளை மீண்டும் மனைவியாக அடைவது மிகவும் சிரமம். இதனால் கணவன் வருந்தவும் நேரிடலாம். அவளை மற்றொருவன் மணந்து, புணர்ந்து மணப் பிரிவினையும் செய்ய வேண்டும். இதன் பிறகுதான் அவளை மறுபடியும் மனைவியாக அடைய முடியும். இதற்கென்று கணவன், மற்றொருவனைத் தேடிப் பிடித்து அவனை இந்தக் காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும். அதே சமயத்தில் இவ்வாறு செய்வது மார்க்கத்தில் தடை செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் மறந்து விடக் கூடாது.

இந்தக் காரியம் நிறைவேறிவிட்டதாகவே வைத்துக் கொள்வோம். இதனால் ஏற்படும் விபரீதங்களை மறுக்க முடியாது. இவை எல்லாம் மும்முறை 'தலாக்' மணப் பிரிவினை கொடுப்பதில் இத்தகைய விபரீதங்கள் எதுவும் கிடையாது. மூன்று தரம் 'தலாக்' சொல்வது 'ஹராம்!' என்று நான் கூறவில்லை; அதனை 'மக்ரூஹ்' என்றே கூறுகிறேன் – மேற்குறிப்பிட்ட விபரீதங்களால்!

***மூன்றாம் காரியம் :*** மணப் பிரிவினையின் போது மனைவியிடம் கணவன்அன்போடு உரையாட வேண்டும். விரோதத்தையும் வெறுப்பையும் அந்த இடத்தில் காட்டக் கூடாது. பிரிந்து போகும் மனைவிக்காக ஏதேனும் அன்புப் பரிசு அளிக்க வேண்டும்.



தம் மனைவிகளில் இருவருக்கு மணப் பிரிவினை அளிப்பது குறித்து ஒரு நண்பர் ஹஸன் (ரலி) அவர்களிடம் வினவினார்.

''அவர்கள் ஒவ்வொருவருக்கும் 10,000 வெள்ளி நாணயங்கள் அளிக்க வேண்டும் - இது அன்பளிப்பு'' என்று பதில் வந்தது.

நண்பர் அப்படியே செய்தார்.

பின்னர் அந்த நண்பரை ஹஸன் (ரலி) அவர்கள் கண்டார்கள். ''அவர்களில் ஒருத்தி தலையில் அடித்துக் கொண்டாள். மற்றொருத்தி கண்ணீர் வடித்து 'பிரியும் அன்பரிடமிருந்து கிடைத்த அற்ப வெகுமதி' என்று கூறியதைக் கேட்டேன்!''

***நான்காம் காரியம்:*** மனைவியின் மர்மங்களை எக் காரணங் கொண்டும் எந்த இடத்திலும் கணவன் பகிரங்கப் படுத்தக் கூடாது. இதனை நபிக் கருத்துக்கள் வன்மையாகக் கண்டிக்கின்றன.

ஒரு நண்பர் தம் மனைவிக்கு மணப்பிரிவினையளிக்க விரும்பினார்.

''உம் மனைவியிடம் நீர் என்ன குறையைக் கண்டீர்'' என்று யாரோ கேட்டார்கள்.

பதில் வந்தது: ''அறிவுள்ள எந்த மனிதனும் தன் மனைவியைப் பற்றிய மர்மங்களைப் பகிரங்கப்படுத்த மாட்டான்!''

தான் எண்ணியது போல் அந்த நண்பர் மணப் பிரிவினையை நிகழ்த்தி விட்டார்.

''ஏன் மணப் பிரிவினை செய்து விட்டீர்?'' என்று யாரோ மீண்டும் கேட்டார்கள்.

''எனக்கும், என் மனைவியல்லாத ஒரு பெண்ணுக்கு மிடையில் என்ன சம்பந்தம் இருக்கிறது? அவளைப் பற்றி என்னிடம் ஏன் விசாரிக்கிறீர்கள்?''

இவற்றையெல்லாம் மணமகன் கவனிக்க வேண்டும். இறைவன் நன்மைக்கு அருள்வானாக !